கூடைடி ராங்கன்

ஆசிரியர் :-

அங்கசா நெந்தசன்

1925

ஆ.ர.முருகப்பா
காரைக்குடி.
௮.௭.84

கந்தரலங்காரம்.

நாளென்செயும்! வினைதானென்செயும்! எனை நாடி வந்த
கோளென்செயும்! கொடுங்கூற்றென்செயும்! குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையும் ஷண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

திருத்தாண்டகம்.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

போய்கையாழ்வார் திருவாய்மோழி.

ஏற்றான் புள்ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்பிடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் — கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு.

சிவமயம்.

முன்னுரை.

தற்கால உலகத்தை நாவலுலகம் என்று கூறுவது மிகையாகாது. தமிழை நன்கு கற்ற புலவர்கள் தவிர சாதாரணமான தமிழ் மக்கள் யாவரும் நாவலேயே கையிற் றூங்கிப் படித் தின்புறுகின்றனர். மக்கள் மனமானது எந்த வசமாகத் திரும்பி இருக்கிறதோ, அந்த வசமாக நமது கொள்கைகளை அவர்கட்குப் புகட்ட வேண்டுமென்பது எனது கருத்து. நாவல்களுள் வசன நடை நயம்பட எழுதப் பெறுவனவுமுண்டு. அவைகளை இலக்கிய நாவல்களென்று கூறலாம். தமிழ் நடை கற்பார்க்கு அது பெரும் பயன் விளைக்கும். மக்களுடைய புத்தியைக் கூர்மைப் படுத்தும் நோக்கங் கொண்டு துப்பறியும் நாவல்கள் எழுதப்படுகின்றன. வேறுபல மாதிரியான நாவல்களும் வெளிப்படுகின்றன. காமச் சுவையை அதிகமாகப் பெய்து ஆபாசப் படுத்தி யெழுதப் பெறும் நாவல்களை அறிவுடையார் பலரும் வெறுப்ப தியல்பு. சிலவன்பர் நல்லது கெட்டதென்பதை யெண்ணாமல் "நாவல்" என்ற அளவிலேயே வெறுக்க முன்வருவது நியாயமாகாது. கவியரசர் ரவீந்திரர் எழுதிய நாவல்களும், பங்கிம்சந்திர சடோபாத்யாயர் எழுதிய நாவல்களும் தள்ளத் தக்கனவன்று; கொள்ளத் தக்கனவேயாகும். ஆகவே மக்களைப் பண்படுத்துதற்கு நாவல்கள் எழுவதும் நன்மையே யாகு

மன்றோ? ஆற்றில் நீந்துமொருவன் நீர் செல்லும் பக்கமாகவே புணையைச் செலுத்திக் கரை சேர்வது போல், மக்கள் மனப்போக்கின் வழிச் சென்றுதான் காரியஞ் சாதிக்கல் வேண்டும். ஆகவே நாவல்களை அறிஞர் ஏற்பாரென்ற நம்பிக்கை எனக்குண்டு.

நமது "கூழை ரங்கன்" இலக்கிய நாவலன்று. ஆதலால் இதில் இலக்கிய நயங்களை எவரும் எதிர்பார்க்க முடியாது. மற்று, புத்தியைக் கூர்மைப் படுத்தும் துப்பறியும் நாவலு மன்று. இது ஒருசமூகத்திருத்தங் கருதிச்செல்லும் நாவலாகும். சமூக ஆசாரங்களைப் பற்றி மக்கள் மனதில் பதியுமாறு எடுத்துச் சொல்வதற்குக் கதைகள் பேருதவி புரிகின்றன. அதிலும் ஆண் பெண் குழந்தை குட்டி படித்தவர் படியாதவர் யாவருக்கும் விளங்குமாறு எளிய நடையில் எழுதப்பட்டா லல்லது குறித்த பயன் கிடைப்பதில்லை. என்றாலும் ஜனங்களின் வழக்கச் சொற்களைச் சிறிது குறைத்தே இதிற் பெய்திருக்கிறேன். சமூக திருத்த இயக்கம் தோன்றிய தொடக்கம் முதலே இந்தச் சமூகத்தாருக் கென்று ஒரு விதமான தமிழ் நடையைக் கொண்டுள்ளேன். பத்திரிகையில் "நமது பலசரக்குக்கடை" என்னும் தலைப்பில் சிறு சிறு குறிப்புகளாகப் பல விஷயங்களைப் பற்றி யெழுதிவந்தேன். அவற்றைப் பலரும் விரும்பினார்க ளென்பதை யறிந்து சென்ற மூன்றாண்டுகட்கு முன்னர் "நமது பலசரக்குக் கடை" என்ற பெயருடன் ஒரு புத்தகத்தை வெளி யிட்டேன். அதனை ஆர்வத்தோடு பெற்றுப் பலர் படித்து எனக்கு மகிழ்ச்சியையும் ஊக்

கத்தையு முண்டாக்கினார்கள். பின்னர் "கூழை ரங்கன்" என்ற இந்நாவலை யெழுதி குமரன் வாரப்பதிப்பில் வெளியிட ஆரம்பிக்கவே பலரும் விரும்பிப் படிக்க முன் வந்தனர். ஆதலால் இப்போது புத்தகமாக வெளியிடுகிறேன். இன்னும் நேயர்கள் ஊக்கப் படுத்துவார்க ளானால் தொடர்ந்து கதைகள் எழுத விரும்பி யுள்ளேன்.

இக்கதையில், நமது நாட்டில் செல்வர்களுடைய குழந்தைகள் எவ்வளவு தூரம் கவனிக்க முடியாமல் கெட்டுப் போகிறார்க ளென்பதை விளக்கியிருக்கிறேன். சரியான பள்ளிக்கூட மின்மையாலும், தாய்மார் கொடுக்கிற செல்லத்தினாலும், பொல்லாத குணமுள்ள படியாத பெண் மக்களின் அறியாமையாலும், தகப்பன் வருஷக்கணக்காகத் தொலையேறிச் சென்று விடுவதாலும், கெட்ட சகவாசத்தினாலும் பிள்ளைகள் கெட்டுப் போகிறார்க ளென்பன இக் கதையில் குறிப்பிடப்பட் டிருக்கின்றன. சிறிய மாப்பிள்ளைக்குப் பெரியபெண்ணைச் செய்வதால் உண்டாகுந் துன்பங்களும், நல்ல பெண்களைப் பொல்லாத பையன்கட்குச் செய்வதா லுண்டாகும் கஷ்டங்களும், பிற்கால வாழ்க்கைக்குப் பொறுப்புள்ளவரான பெண் மாப்பிள்ளைகளின் அபிப்பிராயங்கள் தற்காலத்தில் கவனிக்கப்படாததால் வருகிறதுயரங்களும்இதில் ஒருவாறு குறிப்பிடப்பட்டுள்ளன. நம்மவருடைய பொருளானது சொந்த அபிப்பிராயத்திற் கன்றிப் பிறருடைய சூழ்ச்சி வசப்பட்டுக் கொள்ளையடிக்கப் படுகின்றதென்பதும் சிற்சில இடங்களில் காட்டப்

பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தில் ஏதாவது குற்றங் குறைகள் காணப்படின், அது மனிதரின் இயற்கை யென்றெண்ணி மன்னிக்குமாறு வேண்டுகின்றேன். குணமிருப்பின் அதனையேற்று என்னை ஊக்கப்படுத்து மாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரக்தாக்ஷி ஹு
மார்கழி மீ
உகூ ௳ } அஞ்சா நெஞ்சன்.

1925

சிவமயம்.

கூழை ரங்கன்.

அத்தியாயம். க.

வாத்தியார் பெருமை.

செந்தமிழ் நாட்டின் புராதன ஊர்களுள் செல்வராஜபுர மென்பதும் ஒன்று. வாழ்ந்து முறிந்த பட்டினங்களுள் இதுவு மொன்றாக விருக்கிறது. இந்த ஊரானது ஒரு காலத்தில் மிகுந்த செல்வத்தைப் பெற்றிருந்தது. ஜனங்கள் அதிகமாக இங்கே குடி யிருந்தார்கள். இந்த ஊரில்தான் நமது கதாநாயகனான கூழைரங்கன் பால லீலைகளையும் குமார லீலைகளையும் நடத்தி மகிழ்வித்தார். ஆனபடியால் இவ்வூர் சரித்திரப் பெருமையும் பெற்றுவிட்டது. நமது புலவர்கள் தல புராணம் பாடும்போது அபாரமாக ஊர்களை வருணித்து விடுவார்கள். ஆனால் அவர்கள் வருணனையில் அதிகப் புளுகைச் சேர்த்து விடுகிறார்கள். இராமநாதபுரம் ஜில்லாவில் கற்றுழையும் பன்றியும் செம்பாறுங் கற்களும் நிறைந்திருப்பதாக ஒருவர் எழுதினார். தல புராணம் பாடிய எல்லாரும் நீர்வளம் பெருகியிருப்பதாகப் பாடினார்கள். நான்

பொய் சொல்ல மாட்டேன். நமது செல்வராஜபுரத்தை உண்மையாக வருணிக்கிறேன். அந்த ஊரில் ஊருணிகள் பத்துக்கு மேல் உண்டு. ஆனல் குடிக்க நல்ல தண்ணீர் கிடையாது. நல்ல பழ வகைகள் கிடைக்காது. புஷ்பங்களை அந்த ஊரார் கண்டதே இல்லை. வருஷத்தில் எப்போதாவது ஒரு நாளைக்கு மழை பெய்தால் உண்டு. கிணற்று ஜலமோ, முழு உப்பு. காய்கறி சாமான்களெல்லாம் அவ்வளவாகக் கிடைக்காது.

இத்தனை பெருமை பெற்ற நகரத்திலே ஒரு திண்ணைப் பள்ளிக்கூட மிருந்தது. அதனை நடத்திக்கொண் டிருந்தவர் குப்பணையங்கா ரென்பவர். இவருக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். இவர் பாடஞ் சொல்லிக் கொடுப்பதில் மெத்தத் தெளிவென்று பெயர். பாடஞ் சொல்லிக் கொடுப்பாரோ இல்லையோ, இவரைக் கண்டவுடனே பிள்ளைகள் யமனைக் கண்டமாதிரி நடுங்கி யொடுங்கிப் போவார்கள். வீடுகளிலே பிள்ளைகள் முரண்டு செய்யும்போது, 'குப்பணையங்கார்' என்ற சொல் கேட்டால் செத்தது பிள்ளை; ஒரு வட்டி சோறு ஒரு வாயிற் போய் விடும். இதனல் அந்த வாத்தியாருக்கு மதிப்பு அதிகம். பிள்ளைகளின் படிப்பு எப்படி யிருக்கிற தென்பதைக் கவனிக்க அந்த ஊரில் யாருமில்லை. மகார் நோன்புக்கு மட்டும் தாயுமானசுவாமி பாடலைப் பிள்ளைகள் படிப்பார்கள். ஆனல் இப்போது அச்சுப் போட்டு வருகிறதே தாயுமானசுவாமி பாடல், அப்படி யிருக்காது. இடித்துச் சேர்த்தாலும் ஒன்

ரூடொன்று பொருத்திப் பொருள் கொள்ள முடியாத விதமாகத்தா னிருக்கும். நமது குப்பணையங்கார் மெத்த நல்லவர். அந்த ஊரிலே வேறு பிராமணர் அதிகமில்லை. இவர்தான் பரம்பரையாக அங்கிருந்து வருகிறார். இவர்தான் அந்த ஊருக்குப் பஞ்சாங்கக்காரராகவு மிருந்தார். நல்லது பொல்லாது எது வந்தாலும், குப்பணய்யங்கா ரில்லாமல் நடக்காது. இதற்காக வெளியூரிலிருந்து பிராமணாள் யார் வந்தாலும் குப்பணையங்காரிடம் வந்து ஆசீர்வாதம் பெறுவது வழக்கம். நமது குப்பணையங்காருக்குப் பிள்ளையுங் குட்டியுமாக ஒரு டசனுண்டு. விருந்தினர்கள் தினந்தோறும் வந்து கொண்டே யிருப்பார்கள். ஒரு முட்டை உளுந்தை அரைத்தால் எல்லாருக்கும் ஒரு வேளைக்குத் திருப்தியாகச் சாப்பிடத் தோசை கிடைக்கிற தில்லை. பிந்தினவருக்கிருக்காது. அவரென்ன செய்வார்? பாவம்! பிள்ளையுங் குட்டியும் நசுநசு வென்று ஆபாசப்படுத்திக் கொண்டிருப்பதால், வீடு அவ்வளவு சுத்தமாக விருக்காது. அதற்காக அவரை யாராவது தேடிவந்தால் அவர் வீதிக்கு ஓடி வந்து தாக்கல் கேட்டுக்கொண்டு போவது வழக்கம். இதனைக் கண்டு பலரும் ஐயங்கார் மிக நல்லவர்; கூப்பிடு முந்தித் தெருவுக்கு வந்து விடுகிறார் என்று மகிழ்வார்கள். ஐப்பசி மாதத்தில் காவிரிப் புராணம் படிப்பதுண்டு. விசேஷமாகப் பெண் மக்கள்தாம் வந்து கேட்பது வழக்கம். அக்காலத்தில் காய்கறி அரிசி பருப்பு உப்பு புளி முதலியன ஏராளமாக வரும். சில பெண்கள் தொலைக்

குச் சென்றிருந்த தங்கள் நாயகனுக்கும் குழந்தைகட்கும் கடிதமெழுதச் சொல்வார்கள். பதில் வந்தால் கொண்டு வந்து வாசித்துக் காட்டச் சொல்வதுமுண்டு. இவற்றிற்கு நமது குப்பணையங்கார் அட்டிசொல்லாமல் உதவி புரிவார். இதற்காக அந்த ஊரிலுள்ளவர்கள் தொலையிலிருந்து வந்த வுடனே ரொட்டிப் பெட்டி கற்கண்டு கடலை சீனி கொஞ்சம் பணம் வேட்டி சேலை குடை மிதியடி முதலியவற்றைக் கொடுப்பார்கள். இவ்வூராருக்குச் சொந்தமானவர்கள் வீடுகளில் ஏதாவது விசேஷம் நடந்தால் சிபார்சு செய்து தானம் முதலியன வாங்கிக் கொடுப்பதுமுண்டு. இப்படிக் குப்பணையங்கார் குடும்பத்தை நடத்திக் கொண்டு வந்தார். வரும்படியைப் பார்க்கும் போது ஒரு பெரிய ஜமீன்தாருக்கு வருகிறமாதிரி யிருந்தாலும், எல்லாம் தின்று தொலைகிறதேயன்றி ஒன்றும் மிடியவில்லை. இத்தனை அக்கப்போர் மத்தியத்துடன் பள்ளிக்கூடத்தையும் நடத்தி வந்தார்.

இவரிடத்தில்தான் நமது கதாநாயகனான கூழை ரங்கன் படித்து முத்தி யடைந்தது. வாசகர்களே! நமது கதா நாயகனுடைய பெயர் அவ்வளவு சுகமாக விருக்க வில்லையென் றெண்ண வேண்டாம். அடிக்கடி சொல்ல வேண்டியிருப்பதால் சிறிது சுருக்கமாயிருப்பது நல்லதல்லவா? சிறு பிள்ளையாயிருக்கும்போது இவன் மிகக்குட்டையா யிருந்தபடியால், பள்ளிக்கூடத்திலுள்ள குட்டிப் பையன்கள் இவனுக்குக் 'கூழை ரங்கன்' என்று பெயர் வைத்து விட்

டார்கள். ரங்கனுடைய தாயாரும் வேண்டியவரை சொல்லிப் பார்த்தாள்; தகப்பனாரும் சொல்லிப்பார்த் தார்; திட்டியும் பார்த்தார்கள்; வாத்தியாரும் அப் படிக் கூப்பிடப்படாதென்று அடித்துப் பார்த்தார். பயல்கள் ஒன்றிலும் அடங்கவில்லை. கடைசியில் 'கூழை ரங்கன்' என்னும் பெயரை நிலைக்க வைத்து விட்டார்கள். நமது ரங்கனுடைய தாயார் முதலிய எவருமே 'ரங்கநாதா!' என்று ஒருதரங்கூடக் கூப் பிட்டதில்லை. 'ரங்கா! ரங்கா!' என்றுதான் எப்போ தும் கூப்பிடுவார்கள். 'கூழை' என்பதைத் தன் பெயரோடு சேர்த்ததற்கு நமது ரங்கன் சந்தோஷப் பட்டான். அது தனக்கு ஒரு விசேஷ கௌரவமென் றெண்ணினன். என்றாலும் காலம் போகப் போகப் பெயரும் மாறிக்கொண்டே போகும். கடைசியில் ஒரு மூச்சில் உங்களால் சொல்ல முடியாதபடி அவ்வ ளவு நீளமும் படாடோபமு மாகும்படி ஏற்பாடு செய் கிறேன்.

நமது கூழை ரங்கனை ஐந்தாவது வருஷத்திலே பள்ளிக்கூடத்தில் வைத்தார்கள். அந்த ஊரிலுள்ள யாவரும் வந்திருந்தார்கள். வெளியூர்களிலிருந்தும் சுற்றத்தார் பலர் வந்திருந்தனர். பிள்ளைக்கு ஏராள மாக நகைபோட்டிருந்தார்கள். காதில் போட்டிருந்த வயிரக்கடுக்கன் சரியாக நுழையாதபடியால் அமுக்கிப் போட்டார்கள். அதனல் காதுவலி ஜாஸ்தியாகவிருந் தது. கையில் கொலுசு போடும்பொழுது கடித்துவிட் டது. முதல் நாள் விளையாண்டபோது தெருப்படி

யில் விழுந்து விட்டபடியால் அது வேறே உதட்டில் காயம். இயற்கையாகவே பள்ளிக்கூடத்திற் படிக்க விருப்பமில்லை. இத்தனை காரணங்களிருந்த போது பிள்ளை யெப்படிச் சும்மாவிருக்கும் ? வீட்டிலிருந்து புறப்பட்டது முதல் அழுது கொண்டே யிருந்தான். எல்லாரும் சொல்லிப் பார்த்தார்கள். ஒன்றிலுங் கேட்கவில்லை. இது ஒரு சகுனத்தடைபோ லிருந் தது. ‘ரங்கநாதா! அரியெழுது’ என்று வாத்தியார் சொன்னார். அழுது கொண்டே யிருந்தான். கற் கண்டு கொடுத்தார்கள்; பழங் கொடுத்தார்கள் ;பணங் கொடுத்தார்கள் ; கெஞ்சினார்கள் ஒன்றும் நடக்க வில்லை. குப்பணையங்காரிடத்தில் ஒரு பிள்ளையா வது இப்படி முரண்டு பண்ணினதில்லை. அவருக்கு உள்ளுக்குள்ளே கோபம் பொங்குகிறது. இவனைக் கருமாதிக்கு எனும்பில்லாமல் கொன்றுவிட வேண்டு மென் றெண்ணினார். ‘இப்படி யெழுது’ என்று சொல்லிக் கொண்டு ரங்கன் கையை அழுத்திப் பிடி த்து நெல்லின் மேலே வைத்தார். ‘ஐயோ !ஆத்தா! அப்பா ! ஆய் ! ஊய் !” என்று கதற ஆரம்பித்து விட்டான். இதை அவன் தாயார் பார்த்தாள். பொ றுப்பாளா ? பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளை யருமை ! அந்த ஆச்சிக்குப் பொறுக்க முடியவில்லை. “படிச்சதும் போதும், வாழ்ந்ததும்போதும் ! நேற் றே சொன்னேனே, இந்த வாத்தியார் பிள்ளையைப் பொசுக்கித் தின்று விடுவாரென்று ! இப்பொழுதே பிள்ளை கையை முறிச்சு விட்டாரே” என்று முணு முணுத்தாள். என்றாலும் அந்த ஊரிலே அப்போ

துள்ள எல்லாரும் இவரிடத்திலே தான் படித்தார் களாதலால் இவரிடத்தில் படிப்பதுதான் 'ராசி' என்றெண்ணிக் கொண்டிருந்து விட்டார்கள். அஞ் சாறு பேராக சமாதானஞ் சொல்லிக் கையைப் பிடி த்து 'ஹ' எழுதி முடித்தார்கள். பிள்ளையும் வீட் டுக்குப் போய்ச் சேர்ந்தது. மெய்யம்மை ஆச்சி எப்பொழுதாவது சந்தோஷமாக இருக்கிறபோது பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வந்து பள்ளிக்கூடத் தில் விட்டு,' கடுமையாக ஒன்றுஞ் சொல்லாதீர்கள்' என்று வாத்தியாரிடம் சொல்லுவது வழக்கம்.

அத்தியாயம் உ.

ரங்கனின் பால லீலை.

நமது ரங்கன் படுசுட்டி. மற்றப் பையன்களு டைய ஏட்டைக் கிழித்து விடுவான். மணலை அள்ளி அடுத்தாற்போ லிருப்பவன் தலையிலே போடுவான். அவன் ஏதாவது சொன்னால் அவன் தொடையில் நறுக் கென்று கிள்ளி விடுவான். இல்லா விட்டால் பக்கத்தி லிருப்பவன் கையை விரிக்கச் சொல்லி அதிலே எச்சியைத் துப்புவான். மேலே விழுந்து கடிப்பான். குடுமியிலே ஏட்டுக் கயிற்றை முடிந்து ஜன்னல் கம்பியிலே கட்டி வைப்பான். வேட்டி யைக் கிழிப்பான். யாராவது வாத்தியாரிடம் சொல் வேனென்றால் நாக்கை ஒரு முழ நீளம் நீட்டுவான்.

இப்படி அநியாயஞ் செய்தாலும் எப்படியாவது பள்ளிக்கூடத்துக்கு வந்தாற் போதும் பிறகு பார்த்துக் கொள்ளலா மென்றே குப்பணையங்கார் பொறுத்துக் கொண்டிருந்தார். நாளாக ஆக ரங்கன் உடலும் கூட்டித்தனமும் வளர்ந்து வந்தன. பள்ளிக்கூடத்தில் வைத்து வருஷம் இரண்டாகி விட்டது. சின்ன அரிச்சுவடி முடித்து விட்டான். பெரிய அரிச்சுவடிதான் படித்து வருகிறான். வாத்தியார் என்ன பாடுபட்டும் படிப்பு ஏறுவதாக வில்லை. குப்பணையங்காரென்ன செய்வார்? பாவம்! ரங்கன் தகப்பனார் சோணாசலச் செட்டியார் மிக அப்பாவி. தொலைக்கு அடிக்கடி போகக் கூடியவர். என்ன வேண்டுமெனறெழுதினாலும் தட்டாமலனுப்புவார். பிள்ளை பிறக்கு முந்தியே வேண்டிய தொகை கொடுத்திருக்கிறார். பிராமணாளிடத்தில் பரம விசுவாச முடையவர். அவர் மனைவியான மெய்யம்மை ஆச்சியோ குப்பணையங்காரிடத்தில் பரம விஸ்வாசம். வீட்டுக்கு என்ன சாமான் வேண்டுமானாலும் மெய்யம்மை ஆச்சி யிடம் சொன்னால் தடையில்லாமற் கிடைத்து விடும். வாத்தியார் எதிர் பார்த்துப் பொறுத்திருப்பதற்கு இன்னொரு முக்கிய காரண முண்டு. மெய்யம்மை ஆச்சிதான் அவ்வூரில் பெருத்த வாயாடியாக விருந்தாள். அந்த வூரிலுள்ள பெண் மக்கள் எல்லோரும் மெய்யம்மை ஆச்சி சொல்லுக்கு மாறி ஒன்றுஞ் செய்யமாட்டார்கள். இந்த ஆச்சியைக் கண்டாற் போதும். நமது சோணாசலச் செட்டியார் நடுங்கி யொடுங்கிப் போவார். ஊரிலுள்ள செட்டி-

யார்களும் குடும்பத்திற் கலகஞ் செய்து விடுவா ளென்று பயந்து கிடந்தார்கள். இவ்வளவு மல்லா மல் நமது மெய்யம்மை ஆச்சி பேரில் சாமி வருவ துமுண்டு. சாமி யாடும்போது பலமுறை சோணு சலச் செட்டியார் கூட அடிபட்டிருக்கிறார். இத்தி யாதி காரணங்களால் மெய்யம்மை யாச்சி வாக்கு வேத வாக்காக விருந்தது. இதை யெல்லாம் யோ சித்துத்தான் குப்பணையங்கார் தமது குணங்களை எல் லாம் ரங்கனிடம் காட்டவில்லை. "ரங்கனைப் பயமு றுத்தக் கூடாது; அடிக்கவுங் கூடாது; ஆனால் பெரிய படிப்பாளி யாக்க வேண்டும்" என்பது மெய் யம்மை ஆச்சியின் வேண்டுகோள். ஆனால் ரங்கன் தவறாது பள்ளிக்கூடத்துக்கு வருகிறான். வாத்தி யார் பார்த்தார். நம்மால் ஒன்றுஞ் செய்ய முடி யாது. ஆனால் சட்டாம்பிள்ளை ராக்கப்பனைக் கொ ண்டு திருத்தலாமென் றெண்ணினார். ராக்கப்பன் நல்ல பிள்ளை. அந்தப் பள்ளிக்கூடத்து முறைப்படி யெல்லா ஏடுகளையும் படித்து முடித்திருந்தான். எந்த ஏட்டையும் பாராமல் ஒப்புவிப்பான். கணக்கு கள் எல்லாம் நன்றாகப் பார்ப்பான். எழுத்து முத்து முத்தாக விருக்கும். பஞ்சாப்காரன் மாதிரி நன்றாக பருத்துக் கொழுத்து உயர்ந்திருந்தான். சொன்ன வேலையைக் கேட்பான். காட்டிக் கொடுத்தபடி செய்வான். தனக்குத் தானே ஒன்றையும் செய்யத் தெரியாது. ஆனால் சாப்பாட்டில் அதிக பிரியமுண்டு. அவன் சின்னப்பிள்ளையா யிருக்கும் போது வட்டி யில் சோறு போட்டு "வட்டியிலிருக்கிற சோற்றை

உன்று" என்று ஒருநாள் சொன்னார்கள். அன்று முதல் கின்னியிலிருந்த வெஞ்சனத்தை அவன் தொடவே யில்லை. இந்த மாதிரிதான் அவன் குண மிருந்து வந்தது. இவனைக் கிளிப்பிள்ளை யென்று வாத்தியார் அழைப்பது வழக்கம். இந்த ராக்கப்ப னைக் கூப்பிட்டு ரங்கனை ஒழுங்கு படுத்திக் கொண்டு வா என்று சொன்னார். நல்ல காலம் பிறந்ததென்று எண்ணினான். புதிதாக ஒரு பிரம்பு தயார் செய் தான். இந்த சங்கதி ரங்கனுக்குத் தெரிந்தது. சட் டாம் பிள்ளை ராக்கப்பனுக்கு முன்னால்வந்து மடியை அவிழ்த்தான். இருபது தேன்குழல் மடியிலிருந் தது. அதனை அப்படியே கொடுத்தான். "நேற்றுத் தான் இந்தப் பலகாரம் எங்கள் வீட்டிலே நெய்யில் செய்தார்கள்; உங்களுக்காகக் கொண்டு வந்தேன்" என்று உபசாரமும் சொன்னான். சாப்பாட்டு ராக் கப்பனுக்குச் சந்தோஷம் பொங்கிவிட்டது. அவர்க ளப்பன் காலத்திலும் இப்படிப்பட்ட பலகாரத்தைக் கண்டதே கிடையாது. 'நல்ல காரியம், நல்ல காரி யம்' என்று சொல்லிக் கொண்டே முறித்து வாயி லமுக்கிக் கொண்டிருந்தான். மறுநாட் காலையில் ஒவ்வொரு பையனுக்கும் விருந்து நடத்த வாரம்பி த்து விட்டான் நமது ரங்கன். பள்ளிக்கூடத்தில் கலகமில்லை. ஆனால் முன்னைக் காட்டிலும் அநியாய மும் அட்டூழியமும் ரங்கன் செய்தாலும் தேன் குழல், முறுக்கு முதலிய பலகாரங்கள் அவற்றை மறைத்து விட்டன. எல்லாருங் கூடி 'ரங்கன் அரிச் சுவடி முடித்து விட்டான்' என்று கதை கட்டி விட்

டார்கள். முந்திரி லக்ஷமும் துவக்கியாய் விட்டது. இந்த சமயத்தில் நமது குப்பணையங்காருடையமூத்த குமாரன் கச வயதுப் பையன் இறந்து போய் விட்டான்; அந்தப் பையன் திருசிராப்பள்ளியில் இங்கிலீஷ் படித்துக் கொண்டிருந்தான். அவனால்தான் வீடு விடியப் போகிறதென்று குப்பணையங்கார் எண்ணியிருந்தார். என்ன செய்யலாம்! எமதருமன் யாரைத்தான் விடுகிறான்? கொண்டு போய் விட்டான். இந்தக் கவலையால் குப்பணையங்கார் ந௨ மாதங்கள் வரை பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை. இப்போது ரங்கன்தான் வாத்தியார். சட்டாம்பிள்ளை முதல் எல்லாரும் ரங்கன் சொன்னபடியே செய்தார்கள். எல்லாப் பையன்களும் ஏறக்குறைய ரங்கனுடைய குணங்களைக் கற்றுக் கொண்டார்கள். வாத்தியார் வருகிறாரென்று எவனாவது சொன்னால் இப்போது எல்லாப் பையன்களும் நாக்கை ஒரு முழ நீளம் நீட்டுவார்கள். படிப்பென்பது கிருஷ்ணார்ப்பணந்தான். அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சமீபத்தில் ஒரு புளியமரமிருந்தது. அதன் மேலேறி உள் வாதுகளிலிருந்தால் எத்தனை பேர் தேடினாலும் தெரியாது. கல்லெறிந்தாலும் உள்ளே நுழையாதபடி அவ்வளவு பொலிவாக அந்த மரம் விளங்கியது. காய்ப்புக் காலத்தில் கணக்கி லடங்காமல் காய்க்கும். இந்த மரத்தைத்தான் நமது ரங்கனுடைய பட்டாளத்தார் தமக்கு ஆபத்துக் காலத்தில் அடைக்கலஸ்தானமாக வைத்துக் கொண்டனர். யாராவது சொந்தக்காரர் வந்து தேடுகிறார்களென்றால் உட

னே அந்தப் பையன் புளியமரத்தி லேறிக்கொள் வான். என்ன செய்தாலும் அகப்படப் போவதில்லை. இவர்களெல்லாருங் கூடிப் பெரிய பெரிய விளையாட்டுகளை விளையாடுவார்கள். அவற்றுள் யானைச்சில்லு, குதிரைச் சில்லு, உப்புக்கோடு, கெந்துவான், கவடிப்பத்தல், ராஜா மந்திரி தலையாரி, பித்துக்கா யடித்தல் முதலியன முக்கியமானவை. குதிரைச் சில்லு விளையாடுவதில் நமது ரங்கனுக்கு மிகப் பிரியம். ஆதலால் அவனில்லாமல் அந்த விளையாட்டை யாரும் விளையாடப்படா தென்று கண்டிப்பாகக் கூறியிருந்தான். ஆனல் நமது ரங்கன் தினந்தோறுங்குதிரையாக இருப்பானே யன்றி மற்றவன் மேலே ஒரு நாள் கூட ஏறினதில்லை. இதற்குக் காரணங்கள் பல. தினந்தோறுந் தூக்குவது முடியவில்லை. அதைத்தவிர ஒரு நாள் ஒரு பொறுத்த பையன் இவன் முதுகில் ஏறி யுட்காரவே தூக்க முடியாமல் விழி பிதுங்கிப் போகும்போ திருந்தபடியால் புதிய வழி கண்டு பிடித்தான். "ரங்கன் தோற்றுப் போய்க் குதிரையாக வேண்டி நேர்ந்தால் வெற்றியடைந்தவனுக்கு இரண்டு தேன்குழல் கொடுத்து விடவேண்டும்" என்று முடிவு செய்யப்பட்டது. பித்துக்காய் அடிக்கும்போது முக்குழிப் பித்து விளையாடினர்கள். தோற்றவனுக்கு மொக்கட்டையடி அடிப்பது வழக்கம். இந்த அடி தவறாமல் நமது ரங்கனுக்கே கொடுக்க வேண்டியதாகி விட்டது. அடி வாங்க முடியவில்லை. அதற்காக முக்குழிப் பித்தை நிறுத்தி வண்ணாத்திக்கா யாட்டந்தான் விளையாடு

வது வழக்கம். பிள்ளையாண்டான் 'தான் கெட்டது மல்லாமல் சந்திர புஷ்கரணியையுங் கெடுத்தான்' என்ற கதையாகப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைக ளெல்லாரையும் ஒருசேரக் கெடுத்து விட்டான். அவ்வூரில் வாரத்திலொரு நாள் சந்தை கூடும். அப்போது சுருட்டு, சிகரெட்டு, பீடி, தீப்பெட்டி முதலியவற்றை எல்லாருக்கும் வேண்டிய அளவு நமது ரங்கனே வாங்கிக் கொண்டு வருவான். வாயிலே புகையை யிழுத்து மூக்கின் வழியாகத்தான் விடுவது வழக்கம். வீட்டுக்குப் போகும்போது வாயைக் கழுவிக் கொப்பளித்துக் கஷ்டப்பட்டுக் கொண்டு செல்வார்கள். இந்தக்கதை மெதுவாக ஊருக்குள் பரவி விட்டது. மெய்யம்மை யாச்சி மகன் இப்படிப் பிள்ளைகளைக் கெடுக்கிறான் என்று சொன்னால் அந்த ஊரில் குடியிருக்க முடியாது. ஊர்ஜனம் பயநததுக்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்று மெய்யம்மையாச்சி சூர்ப்பணகை தாடகையின் மறுபிறப் பென்பது. மற்றொன்று சுவாமியாடி யென்பது. எல்லாரும் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஊரிலிருந்த கருப்பன் செட்டியார் மகன் சுப்பிரமணியன் என்னும் இருபது வயதுள்ள பையன் சிங்கப்பூருக்குப் போய் விட்டு அப்போதுதான் வந்திருந்தான். புதிதாக வந்திருப்பதால் கொஞ்சம் வெள்ளை வேட்டி, காலிலே பூட்ஸ், கையிலே சைகோன் குடை யெல்லாம் தடபுடலாக விளங்க வெளியே யிருந்து வந்தான். அவன் தம்பி ஒரு பையன். மகா போக்கிரி. அவன்தான் நமது ரங்கனுக்குப் பிரதம மந்தி

ரியாக விருப்பவன். அவனுக்குக் 'கிஷ்கிந்தாபுரி ராம'னென்று பேர். இவன் புளிய மரத்தில் ஏறி விட்டானானால் அவனைப் படைத்த பிரமதேவன் வந்தாலும் கண்டு பிடிக்க முடியாது. ஒரு வாதிலிருந்து ஒரு வாதுக்கு வெகு சுலபமாகச் சந்தடியில்லாமல் புகுந்து கொண்டே யிருப்பான். ஆகையால் இவன் பெயருக்கு முன்னால் 'கிஷ்கிந்தாபுரி' யென்னும் அழகிய பட்டஞ் சேர்க்கப்பட்டது. இவன் தகப்பனார் இவன் பிறப்பதற்கு முந்தியே இறந்து போனார். இவனைத் தேடிப் பார்க்க ஆளில்லாத படியால் இவன் கெட்டுப் போனானென்பது சிலருடைய அபிப்பிராயம். இவனுடைய தமையன் சுப்பிரமணியன் நல்ல பையன். இந்தப் பையன்களுடைய கிரித்திரமங்களெல்லாவற்றையும் தெரிந்து கொண்டான். மெதுவாக வாத்தியாரிடத்தில் 'பள்ளிக்கூடம் குட்டிச்சுவராய்ப் போய்விட்டது' என்ற சந்தோஷச் செய்தியை யெடுத்துரைத்தான். மகனைப் பறிகொடுத்த வாத்தியார் இதைக் கேட்டு மிக வருந்தினார். மறுநாட் பள்ளிக்கூடத்துக்கு வந்தார். பையன்கள் சரியாயில்லை யென்பது ஊர் முழுதும் தெரிந்து விட்டது. என்றாலும் மெய்யம்மை ஆச்சிக்குப் பயந்து பலர் சும்மா விருந்து விட்டார்கள். வாத்தியார் பள்ளிக்கூடத்துக்கு வந்தால் எல்லாம் சரியாகி விடும் என்று சிலர் நினைத்தார்கள். வாத்தியார் மிகக்கஷ்ட நிலையிலிருப்பதால் அவரிடத்தில் வேறு யாரும் இதைக் கூறிக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. வாத்தியார் வந்து பார்த்தார். 'கூழை ரங்கன்' ஆட்சி

யில் பள்ளிக்கூட மிருப்பதை யறிந்தார். என்ன செய்வது? சில பையன்களே அடித்தார்; சில பையன்களேக் கோதண்டம் போட்டார். இப்படி அடித்து உதைத்து ஒடுக்கி ஒழுங்கு செய்ய நாலேந்து மாதம் சென்றது. ஆனல் ரங்கனே ஒழித்தால்தான் பள்ளிக்கூடம் உருப்படியாகும் என்ற முடிவுக்கு வாத்தியார் வந்து விட்டார். இது வரையில் எப்படியாவது கொஞ்சம் திருத்திப் பார்க்கலாமென்ற எண்ணம் இடை யிடையே உண்டாகிக் கொண்டிருந்தது. இப்போது ரங்கன் தொலேந்தால்தான் விடிவு காலமென்று கருதி விட்டார். எப்படித் தொலேப்பது? யோஜித்துப் பார்த்தார். இவன் படிப்பு முடிந்ததென்று சொல்லித் தொலேத்து விடலாம் என்று முடிவு செய்து கொண்டார். இதற்குச் சில நாள் முந்தி ரங்கன் தகப்பனர் தொலேக்குப் போய்விட்டார். அங்கிருந்து இரண்டு ஜோடி வேஷ்டியும் ரொட்டிப் பெட்டியும் ஒரு வர்ணப் பாயும் அனுப்பி பிள்ளேயை நன்ருகப் பார்த்துக் கொள்ளும்படி கடிதமும் எழுதியிருந்தார். இந்த சந்தர்ப்பத்தில் கூழை ரங்கன் யோசித்துப் பார்த்தான். நம்முடன் பையன்கள் இனிச் சேர மாட்டார்கள்போ லிருக்கிறதே, என்ன செய்வதென்று சிந்தித்தான். பள்ளிக்கூடத்தை விட்டுக் கிளம்பினல் இந்தப் பயல்களே யொருகை பார்க்கலாமென்று தீர்மானித்துக் கொண்டான். இப்பொழுது ரங்கனுக்கு வயது பதினென்று. ஐந்தாறு ஏடுகள் படித்து முடித்ததாகப் பேர் பண்ணியாய் விட்டது. யாராவது படித்தவற்றுள் கேள்வி கேட்டால் இர

ண்டு வசவு கொடுப்பான். இவனொரு போக்கிரிப் பயலென்று சொல்லிவிட்டுப் போய் விடுவார்கள். இவன் வழியிலே போகிறவனெல்லாம் என்னைக்கேட்டால் நான் சொல்ல முடியுமா என்று சொல்லிவிட்டு ஒடிப் போவான். ஆகவே அவன் எவ்வளவு படித்திருக்கிறுனென்பது அறிய முடியாத ரகஸியமாகவே யிருந்தது.

இப்படி யிருக்கும்போது வாத்தியாருக்குத் தானத்தில் ஒரு பசுமாடு கிடைத்திருந்தது. அதனைச் சட்டாம்பிள்ளை ராக்கப்பன் குளிப்பாட்டக் கொண்டு போனுன். கூழை ரங்கனும் கூடப் போனுன். கன்றுக்குட்டியை ரங்கன் பிடித்துக் கொண்டு போனுன். கொஞ்ச தூரம் போனவுடன் மேல் துண்டை அதன் கழுத்திலே கட்டி மஞ்சு விரட்டு விட்டான். இன்னும் சில பையன்களுஞ் சேர்ந்தார்கள். கன்றுக் குட்டியை விரட்டினார்கள். ரங்கன் வாலிலே கை போட்டுப் பத்தினுன். அதுவும் வஞ்சகமில்லாமல் மூச்சிருக்கிற வரையில் ஓடிற்று. பிறகு கீழே விழுந்து மேலுங் கீழுமாக இழுத்துக்கொண்டு செத்துப் போய்விட்டது. கம்வாய்க் கரையில் கன்றுக் குட்டி வந்த பிறகு குளிப்பாட்டுவோ மென்று மாட்டை ஒரு மாத்தில் கட்டி விட்டுச் சட்டாம்பிள்ளை ராக்கப்பன் உட்கார்ந்து கொண்டு ரங்கன் கொடுத்த அதிரசத்தைத் தின்று கொண்டிருந்தான். இப்படி யிருக்கும்போது ஒரு பையன் வந்து 'கன்றுக் குட்டியை ரங்கன் கொன்று விட்டான்' என்று சொன்னுன். மற்றப் பையன்களும் வந்தார்கள். எல்லா

ருக்கும் ரங்கன் உத்திரவு போட்டான். "தண்ணீரிலே நீந்துகிறபோது கயிறு அறுந்துபோய் விட்டது ; நாங்களும் நீந்திப் போய் பிடிக்கப்போனோம்; அது திரும்பாமல் தண்ணீர்ப் பக்கமாகவே போய்த் திரும்புவதற்கு மூச்சுப் போக்க முடியாதபடியால் செத்துப் போய் விட்டது என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் கருமாதிக்கு எலும்பு வைக்க மாட்டேன்" என்று சொல்லி விட்டான். எல்லாரும் அப்படியே வாத்தியாரிடத்தில் சொன்னார்கள். சட்டாம்பிள்ளை சாப்பாட்டு ராக்கப்பனும் அப்படித்தான் சொன்னான். ஆனால் ஒரே ஒரு பையன் அழுதுகொண்டு "ஐயா ரங்கன்தான் வாலைப் பிடித்து விரட்டிக் கொன்றுவிட்டான்" என்று உண்மையைச் சொல்லி விட்டான். இதைக் கேட்டவுடன் வாத்தியாருக்குக் கண்ணிலே நீர் ததும்பிவிட்டது. ரெம்ப வருத்தப் பட்டார். எதற்காக? பசுவின் கன்று செத்ததற்காகவா ? இல்லை. தனக்குப் பணம் போச்சே, அதற்காகவா ? இல்லை. "இந்தப் பையன் உண்மையை நம்மிடம் தெரிவித்து விட்டானே; இவனை ரங்கன் கொன்று விடுவானே ; என்ன செய்கிறது" என்று மிகப் பயந்தார். அவருடைய மூத்த மகன் இறந்தபோது கூட அவர் இவ்வளவு வருத்தப்படவில்லை. உண்மை சொன்ன பையனைத் தட்டிக் கொடுத்து "அப்பா! நீ தனியாக வீட்டை விட்டு எங்கும் போகாதே! பள்ளிக்கூடத்துக்குக் கூட வர வேண்டாம்" என்று சொல்லி விட்டார். அன்றைக்கே அந்தப் பையன் வீட்டுக்குப் போய் நடந்ததைச்

சொல்லிப் பிள்ளையைப்பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படி பையன் தாயாருக்குத் தெரிவித்தார். வேறென்ன செய்ய முடியும்! கூழை ரங்கன் பார்த்தான்! "இதுவரை நமக்கு விரோதமாகச் சொன்னவன் கிடையாது. இவனை ஒரு கை பாராமல் விடுவேனா?" என்று உருமிக்கொண் டிருந்தான். ஒரு மாதமாகி விட்டது. ஒன்றும் நடக்கவில்லை. அந்த ஊரிலே ஒரு கல்யாணக்கார வீட்டிலே பையன் நின்றுவிளையாடுவதை ரங்கன் சிநேகிதர்கள் கண்டார்கள். உடனே ரங்கனுக்குச் சொன்னார்கள். ரங்கனும் வந்தான். பையனைக் கட்டிப் பிடித்துத் தூக்கினார்கள். ஒரு பாழடைந்த வீட்டுக் குட்டிச் சுவருக்கு மத்தியில் கொண்டு போய் இரண்டு கண்களிலும் கொடிக் கள்ளிப் பாலைப் பீச்சினார்கள். இதற்கிடையில் கலியாண வீட்டிலிருந்த பெரியவர்களுக்குத் தாக்கல் தெரிந்து ஓடி வந்ததைக் கண்டு பையனை விட்டு விட்டு ரங்கனும் அவன் நண்பர்களும் குட்டிச் சுவரைத் தாண்டி ஓடிப் போய் விட்டார்கள். பையனுக்கு ஒரு கண்ணில் நிறையக் கள்ளிப்பால் அடிக்கப்பட்டிருந்தபடியால் அந்தக் கண் போய்விட்டது. மற்றொரு கண்ணுக்குக் கோளாறில்லை. இதற்குப் பிறகு ரங்கன் பள்ளிக்கூடத்துக்கு வருவதே கிடையாது. வாத்தியாரும் ரங்கன் வந்தால் படுகாயப் படுத்தி விடுவதெனத் தீர்மானித்திருந்தார். இதனை ரங்கன் தெரிந்து கொண்டான். மெய்யம்மை ஆச்சியும் இனிப் பேர் கெட்டுப்போனால் கலியாணம் வர மாட்டாதென்று நினைத்துக் கலியாணத்தை முடித்து

விட வேண்டுமென்று கருதினள். உள்ளூரில் ஒருவரும் செய்யமாட்டேனென்று கூறி விட்டார்கள். ரங்கன் தகப்பனாரும் தொலையிலிருந்து வந்து விட்டார். நாலு லக்ஷம் ரூபாய் விளக்கடிப் பணமாகவிருந்தது. செல்வராஜ புரத்தில் இவர்தான் பணக்காரராயிருந்தார்.

அத்தியாயம். ரு.

கல்யாண முயற்சி.

ரங்கனுக்குக் கல்யாணப்பேச்சு வெகு மும்முரமாக நடை பெற்றது. மெய்யம்மை யாச்சி இப்போது எல்லாருடனும் நெருங்கிப் பழகி வந்தாள். முன்னிருந்த ஆடம்பரங்களும் முரட்டுத் தனமும் இப்போது சிறிது அடங்கி விட்டன. அவள் இப்படி இரா விட்டால் எவரும் ரங்கனுக்குப் பெண் கட்டமாட்டார்க ளென்பதை நன்கு உணர்ந்தாள். ஊர் ஊராகவும், வீடு வீடாகவும் பெண் பேசப்பட்டது. ஒன்றும் ஒழுங்காக நடப்பதாயில்லை. கடைசியில் வெகு பாடுபட்டு ஆலங்குடியிலிருந்த மன்னைகட்டிக் கறுப்பன் செட்டியாரின் பெண்ணைக் குறிப்பிட்டார்கள். கறுப்பன் செட்டியார் மாபோகிமலைபோகியென்று பேர் வாங்கியவர்; பர்மாவில் கொண்டுவிலை செய்பவர்; இப்போது அவருக்கு வயது முப்பத்தேழு. இதற்குள்ளாக ஆறு கணக்கு பர்மாவுக்குச் சென்றிருக்கிறார். ஐந்து முறை ஐந்து முதலாளிகளுக்குச் சென்றார்; ஒரு கணக்காவது சுகமில்லை.

நல்ல கைராசியுள்ளவர்! புனை சுருட்டுக் கறுப்பன் செட்டியா ரென்று அவரைக் காணாத விடத்தில்பலர் சொல்லுவ துண்டு. இவருக்கு மேலமாகாணத்தில் மிகக் கீர்த்தி வாய்ந்திருந்த ராமநாதன் செட்டியார் மகளை முதற்றாரமாகக் கல்யாணஞ் செய்யப்பட்டது. ஆனால் முதல் தார மனைவி காலஞ்சென்று விட்ட படியால் இப்போது இரண்டாந்தாரம் செய்துகொண் டிருந்தார். முதல் தாரத்துக்கு ஒரே ஒரு பெண் குழந்தைதா னிருந்தது. இரண்டாந் தாரத்துக்கு இரண்டு ஆண் குழந்தைகள் இருந்தன. மூத்த பை யனுக்கு இப்போது பத்து வயதிருக்கலாம். இந்த இடத்திற்குத் துப்பு வைத்துப் பேசினார்கள். புனை சுருட்டுக் கருப்பன் செட்டியார் கையில் அவ்வளவா கப் பணமில்லை; சாப்பாட்டுக்குக் காணும்படியாக கிராம மிருந்தது. ஒரு சுமாரான வீடும் கட்டியி ருந்தார். பதினாயிரம் ரூபா பெறுமான நகையுமுண் டு. ரொக்கப்பணம் பத்து ரூபா தேறுமென்று பல ரும் சொன்னார்கள். இவர் பெரிய கடைகட்குக் கொண்டு விற்று வந்த காலத்தில் சாமான் சரக்கு வாங்கியனுப்பியதை விற்றுச் சேர்த்துச் சுமார் ஐயா யிரத்திற் கதிகமாக இவருடைய மறுதார மனைவி வட்டிக்குக் கொடுத்து வைத்திருக்கிறாள். இவர் பேசும்போது இவர் தலையில் ஒரு ஆள் ஏறி உட்கார் ந்து அழுத்திக் கொண்டிருப்பது போல் மன்னையை நெரித்துக் கொண்டு பேசுவார். ஆதலால்தான் மன் னைகட்டிக் கறுப்பன் செட்டியார் என்று எல்லோரும் அழைத்து வந்தார்கள். இவருடைய இரண்டாவது

மனைவி இவரைப் பிடித்த சனியனைப் போல் விளங்கினாள். வீதியில் போகிற சண்டையை விலைக்கு வாங்குவதில் பேர் பெற்றவள். புருஷனும் மனைவியுமாகக் கூடி முதல் தாரத்தின் மகளை மாற்றித் தங்களுடைய மூத்த மகனுக்குக் கலியாணத்தை முடித்துவிட வேண்டுமென்று தீர்மானித்திருந்தார்கள். ஆனால் மேலமாகாணம் ராமநாதன் செட்டியார் மிகுந்த யோக்கியர். அவர் மனைவியும் மிகச் சிறந்தவளாக விருந்தாள். அவ்விருவரும் தங்கள் மாப்பிள்ளையாகிய மன்னைகட்டிக் கருப்பன் செட்டியாரிடத்தில் நம்பிக்கை கொள்ளாமல் தங்கள் மகள் இறந்த காலத்திலேயே சீதனப் பணம் முதலியவற்றையும் தாங்கள் கொடுத்த சாமான் நகை முதலியவற்றையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். பெண்ணையும் தங்கள் வீட்டிலேயே வைத்து வளர்த்து வந்தார்கள். பெண் பெரிய மனுஷியாகி இரண்டு வருஷங்களாகிவிட்டன. இப்போது அப்பெண்ணிற்கு வயது பதினைந்திருக்கலாம். மிகச் சாதுவான குணமும் அடக்கமும் ஒழுக்கமும் நிரம்பியதாக அப்பெண் விளங்கியது. மாற்றிச் செய்ய ராமநாதன் செட்டியார் விரும்பவில்லை. சும்மா செய்வதற்குக் கருப்பன் செட்டியார் இசையவில்லை. இந்தக் காரணத்தால்தான் இவ்வளவு நாள் வரை கலியாணம் நடைபெறாமற் கிடந்தது. இந்த இடத்தில் புகுந்து வேலைசெய்வதென்று நமது ரங்கன் பெற்றோர் ஆரம்பித்தார்கள். வேண்டிய ஆட்களைக் கொண்டு முயற்சி செய்தார்கள். பெண்ணின் பாட்டனருக்கு ரங்கன் தகப்பனை நன்று

கத் தெரியும். சோணசலச் செட்டியார் மிக நல்ல வரென்றும் பணம் நிறைய விருக்கிற தென்றும் இழுவை யின்றிப் பணத்தை வைத்திருக்கிறாரென் றும் தெரிந்தவராதலால் இசைந்து விட்டார். அவர் மனைவியார் நமது மெய்யம்மை ஆச்சிக்குச் சிறிது பயந்தாள். பிறகு குற்றம் பார்த்துக் கொண்டிருந் தால் கல்யாணம் எப்படி நடக்கப் போகிற தென்ற கவலை பெரிதாகி விட்டது. பெண் பெரிதாகி விட்ட படியாலும் வேறொன்றும் இத்தனை கூட நல்லதாகக் கிடைக்காதபடியாலும் 'மெய்யம்மை ஆச்சி முந்தித் தான் மிகப் பொல்லாதவளாக விருந்தாள்; இப்போது அவ்வளவில்லை' யென்று பலர் சொல்லுவதாலும், பிரியாதவளா யிருப்பதை விடப் பொல்லாத வளாயி ருப்பது குற்றமில்லை யென்று ஒருவாறு மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு சம்மதித்து விட்டாள். மன்னைகட்டிக் கறுப்பன் செட்டியாரையும் அவர் மனைவியையும் எப்படித் திருத்துவ தென்று நமது மெய்யம்மை ஆச்சி யோசித்தாள். சில ஆட்களையனு ப்பி ரகஸியமாகச் செய்தி சொல்லி யனுப்பினாள். அவர்களும் எப்படியோ ஒருவாறாகக் கறுப்பன்செட் டியாரை மட்டாத்தி விட்டார்கள். ஒருநாள் இரவு எட்டு மணி யிருக்கும். கறுப்பன் செட்டியாரும் அவர் மனைவியுமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

கறுப்பன் செட்டியார்:—பெண் பெரிய மனுஷியாகி இரண்டு வருஷமாகி விட்டது; இனியும் கலியா ணஞ் செய்யாவிட்டால் நல்லாய்ப் போகாது. ஊ ரெல்லாந் தூற்றுது.

அவர் மனைவி :—அதுதான் உங்களுக்கு ராவும் பகலும் நினைப்பா யிருக்கிறது. இப்போது இரண்டு பிள்ளையைப் பெற்று வைத்திருக்கிறீர்களே ; அதற்கு என்ன செய்கிறது என்ற கவலை உங்கட்குக் கிடையாது.

கறுப்பன் செட்டியார் :—நினைப்பில்லாமலா விருக்கிறேன்? வளர்த்தவர்கள் ஒத்துக் கொள்ள வில்லையே. நாமாகக் கல்யாணஞ் செய்ய முடியுமா ?

அவர் மனைவி :—அப்படியானல் சும்மா கிடக்கட்டும். நமக்கென்ன ? வளர்த்தவர்களுக் கில்லாத அக்கரை நமக்கென்னத்துக்கு ? பேசாமலிருங்கள்.

கறுப்பன் செட்டியார் :—(சிறிது யோசித்து விட்டு) இப்பொழுது ஒரு மாதிரியாகப்பேச்சு வருகிறது. செல்வராஜபுரம் சோணசலச் செட்டியார் மகனுக்குப் பேச வந்திருக்கிறர்கள். வளர்த்தவர்கள் ஒத்துக்கொண்டு விட்டார்களாம். நம்முடைய நோக்கத்தைக் கேட்கிறர்கள்.

அவர் மனைவி :—நல்லா செய்துகொள்ளட்டும் ; நமது பையனுக்கு அவர்களே கலியாணஞ் செய்து வைத்து விடட்டும்.

கறுப்பன் செட்டியாா :—அப்படிச் சொல்லலாம். அவரும் பணக்காரர்தான். ஒரு வேளை ஒத்துக்கொண்டாலும் ஊர் ஜனங்கள் தூற்றுவார்களே ! பெற்ற கடனைத் தவிர நாம் வளர்க்கவுமில்லை ; இப்பொழுது கலியாணத்துக்கு அரைக்காசுக்குச் சாமான் வாங்கவுமில்லை ; கலியாணச் செலவுக்குப் பணம் கொடுக்கப் போகிறது மில்லை. இப்படி யிருக்க

நாம் மேற்கொண்டு எழுதிக் கேட்கலாமா? ஊர் சுட்டுப் பொசுக்கி விடுமே!

அவர் மனைவி:—அப்படியானல் ரகசியமாக ஏதா வது பார்த்துக் கொள்ள வேண்டும். இப்பொழு து விட்டு விட்டால் பிறகு வராது. மாப்பிள்ளைக் குத்தாயார் பொல்லாதவளென்றுதான் வேருெருவ ரும் கல்யாணம் செய்ய முன்வர வில்லை. ஆகை யால் சரிபண்ணிக் கொள்ளலாம். ஏமாந்து போ காதீர்கள்!

இவ்வளவோடு சம்பாஷணை முடிந்தது. கருப் பன் செட்டியாரும் சோணுசலச் செட்டியாருடன் கலந்து பேசினர். பேச்சு முடிந்தது. பிறகு அடு த்த நாளன்று சோணுசலச் செட்டியாரும் மேல மாகாணம் ராமநாதன் செட்டியாரும் மன்னைகட்டிக் கருப்பன் செட்டியாரும் ஆலங்குடியில் மிகக் கீர்த்தி வாய்ந்திருந்த பஞ்சாங்கம் சுப்பண்ணுவீட்டுத் திண் ணையில் உட்கார்ந்தார்கள். அப்போது காலையில் ஒன்பதரை மணியிருக்கலாம். கருப்பன் செட்டி யார், 'அம்மா! சாமி யிருக்கிறார்களா?' என்று கேட் டார். 'கண்ணப்ப செட்டியார் வீட்டுக்குப் போயி ருக்கிறார்; அங்கே திதி' யென்ற பதில் வீட்டினுள் ளே யிருந்து வந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த வீட்டினுள்ளே யிருந்து ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, புகையிலை வகையறுவைக் கொண் டுவந்து சுப்பண்ணு மகன் கிட்டு இம்மூவருக்கும் முன்னல் வைத்தான். மூவரில் இருவர் வெற்றிலை போட்டுப் பழக்கமில்லாதவர். முதலில் மூவருமே

வெற்றிலே போட்டார்கள். மன்னேகட்டிக் கருப்பன் செட்டியார் பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு பெரிய புகையிலேயை யெடுத்துக் காம்பைக் கிள்ளி விட்டுச் சுருட்டி மடக்கி வாயினுள் வைத்துத் திணித்துக் கொண்டார். மேலமாகாணம் ராமநாதன் செட்டியாரும் அவருக்கு இளேத்தவரல்லர். புதிதாக வெற்றிலே போட்ட சோணுசலச் செட்டியார் கொஞ்சம் செருமினர்; பலமாகச் செருமினர். முற்றிப் போன வெற்றிலேயைப் போட்டு மொறு மொறென்று மென்று விழுங்கிய படியால் அந்தத் தூள் தொண்டையில் மாட்டிக் கொண்டது. முன்னும் போகவில்லே; பின்னும் வரவில்லே. திருடன் மாதிரி விழிக்கிருர். கண்ணிலிருந்து தண்ணீர் பெருகுகிறது. நாட் பார்க்க வந்த விடத்தில் இப்படியாய் விட்டதே யென்று வேறே வருத்தம். உடனே மன்னேகட்டிக் கறுப்பன் செட்டியார் சோணுசலச் செட்டியாரைப் பார்த்து, 'என்ன மச்சான்! ஒரு நாளும் சிரியாதவன் திருநாள் கடையில் சிரித்த மாதிரியிருக்கிறது' என்று சொன்னர். வாய் நிறைய வெற்றிலே பாக்குப் புகையிலேயும் எச்சியுமிருந்தபடியால் கொள கொள வென்று பேசியது அவ்வளவாக விளங்காததோடு வாயிலிருந்த எச்சில் வேட்டியிலும் வடிந்தது. அய்யர் வீட்டினுள்ளிருந்து செம்பில் தண்ணீர் கொண்டு வரச் செய்து சோணுசலச் செட்டியார் வாயைக் கொப்பளித்தார். கறுப்பன் செட்டியாரும் வேட்டியைக் கசக்கினர். அப்பொழுது ராமநாதன் செட்டியார், 'கொடுக்கிற—வாங்கு

கிற முறைகளைப் பற்றிப் பெண்பிள்ளைகள் பேசி முடித்துக்கொள்ள வேண்டுமே' என்று கேட்டார். அதை யெல்லாம் பேசி முடித்துக் கொண்டு விட்டார்கள் என்று சோணசலச் செட்டியார் சொன்னார். 'மெய்யம்மை மெத்தக் கெட்டிக்காரி' என்று கருப்பன் செட்டியார் புகழ்ந்தார். இந்தச் சமயத்தில் தலையிலே ஒரு பெரிய கடகமும் அதில் நிறைய அரிசி காய்கறி வகையரு சாமானும், அதன்மேல் ஒரு இலைக் கட்டும், ஒரு கையில் நெய்ச் சட்டியும் மற்றொரு கையில் தயிர்ச்சட்டியும் தாங்கிக்கொண்டு உடலெல்லாம் வெயர்வை வடியப் பதினைந்து மைல் வேகத்தில் கீழ் மூச்சும் மேல் மூச்சும் முழுவாங்கு வாங்க, சுப்பண்ணு வீட்டில் வந்து நுழைந்தார். நுழையும் போதே ' வரணும், வரணும், எல்லாருக்கும் ஆசிர்வாதம். வாடாப்பா சோணசலம். எப்பொழுது வந்தே. ராம. எப்பொழுது ? கருப்பன் செட்டி!என்ன, கலியாணப் பேச்சு முடிந்ததாமே?' என்று கேட்டுக்கொண்டே வீட்டினுள் நுழைந்தார். உள்ளே சென்று மூட்டை முடிச்சுகளை வைத்து விட்டு வெளியே வந்து திண்ணையில் உட்கார்ந்தார். 'என்ன, சாமி! ஒரே அடியாகக் காக்க வைத்து விட்டீர்கள்? காலையில் ஒன்பதரை மணிக்கு வந்தோம். இப்போது மணி பன்னிரண்டாகி விட்டது' என்று கருப்பன் செட்டியார் சொன்னார். ' எனக்குத் தெரியுமடப்பா, வாசலில் துப்பிக் கிடக்கிற போதே எவ்வளவு நேரமாச் சென்று தெரியாதா ?' என்று சுப்பண்ணு பதில் சொன்னார். 'சரி, சரி,

சங்கதியைச்சொல்லுங்கள்' என்றார் ராமநாதன் செட்டியார். 'சங்கதி என்ன சங்கதி! பெண்ணுக்குக் கலியாணம் பேசி முடிந்த தென்று கேள்விப்பட்டேன்? சோணாசலமும் வந்திருக்கிற போதே சரி தான் நாள் பார்க்கத்தான் வந்திருக்கிறீர்க ளென்று தெரிந்து விட்டது. ஏன், அதுதானே சங்கதி' என்று சொல்லி சுப்பண்ணா சிரித்துக் கொண்டே பஞ்சாங்கத்தின் தாள்களைப் புரட்டினார். 'சாமிக்குத் தெரியாத சங்கதி உலகத்தில் ஏது' என்று பல்லைத் திறந்தபடியே கருப்பன் செட்டியார் சொன்னார். சுப்பண்ணாவும் புரட்டிப் புரட்டிப் பார்த்துப் பல நாள்களைச் சொன்னார். மூன்று பேருமாக யோசித்து ஒரு மாத சாவகாசமாவது வேண்டுமென்று முடிவு கட்டிச் சித்திரை மாதக் கடைசியில் இருந்தால் பாதகமில்லை யென்றார்கள். உடனே சுப்பண்ணா ஒரு ஓலையும் எழுத்தாணியும் கொண்டு வந்தார். வாரிச் சுத்தஞ் செய்து பின்வருவாறு அந்த ஏட்டில் எழுதினார்:—

"கரஸூ சித்திரைமீ பத்தாந் தேதி மங்களவாரமும், பரணி நக்ஷத்திரமும், திரிதியை திதியும், மகர லக்கினமும், சித்த யோகமும், ராஜச வேளையும், நிஷ்பஞ்சகமுங் கூடிய சுபயோக சுபதினத்தில், உதயாதி நாழிகை நாற்பத்து நாலுக்கு மேல் நாற்பத்தேழே முக்காலுக்குள் செல்வராஜபுரம் சோணாசலம் மகன் ரங்கநாதனுக்கு ஆலங்குடி கருப்பாத்தான் மகள் சீதையை விவாகஞ் செய்து திருப்பூட்ட உத்தமம். கக-ந்தேதி சௌமிய வாரமும், கார்த்திகை நக்ஷத்திரமும், சதுர்த்தி திதியும், கன்னியா லக்கினமும், சித்த யோகமும், தாமஸ வேளையும், நிஷ்பஞ்ச

கமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை இருபத்து நாலரைக்குமேல் இருபத்தெட்டே காலுக்குள் மண்வறை செய்ய உத்தமம்.''

இது எழுதி முடிவதற்குள் பையன் அரைத்த மஞ்சளை ஒரு வெற்றிலையில் கொண்டு வந்து வைத்தான். அந்த ஏட்டில் தடவி ஏதோ சமஸ்கிருதத்தில் சொல்லிக் கொண்டே மன்னை கட்டிக் கறுப்பன் செட்டியார் கையில் கொடுத்தார். வாங்கிக் கொண்டு 'சாமி, போய் விட்டு வருகிறோம்' என்று சொல்லிக் கொண்டு மூவரும் புறப்பட்டார்கள்.

அத்தியாயம் ச.

கல்யாண வைபவம்.

மாலை ஐந்தரை மணி யிருக்கலாம். ஆலங்குடி யிலுள்ள ஒரு நடுத்தரமான வீட்டின் முகப்பில் மட்டக் காவணம் போடப்பட்டிருந்தது. அதில் வாழை மரங்களும் கூந்தலும் மாவிலையுங் கட்டப்பட்டிருந்தன. பக்கத்தில் எச்சிலிலையும் சில நாய்களும் பார்ப்பவர் கண்ணுக்குத் தோற்றும். சில குறவர்கள் சுரைக் குடுக்கையைக் கையில் தாங்கிக் கொண்டு நின்றார்கள். அந்த வீட்டிற்கு முன்னால் மேளகாரன் மேளத்தை ஊதிக் கொண்டு நின்றான். தவில் காரன் டொம் டொம் என்று தட்டிக் கொண்டிருந்தான். சாலராச்சிறுவன் அங்கு நடந்த நாய்ப் போரைக் கூர்ந்து கவனித்துக் கொண் டிருந்தானயி

னும், அவன் கையிலிருந்த தாளங்கள் ஒன்றோடொன்று தட்டிக் கொண்டே யிருந்தன. இப்படி யிருக்கும்போது மன்னைகட்டிக் கருப்பன் செட்டியார் தலையில் ஒரு பெரிய தலைப்பாகையுடன் வெளியே வந்தார். அவர் பிறகே மேலமாகாணம் ராமநாதன்செட்டியாரும் இன்னும் சுமார் இருபது ஆண் மக்களும் வந்தார்கள். 'என்ன, பிள்ளைகாள்! வர மாட்டேனென்கிறீர்கள்' என்று ராமநாதன் செட்டியார் உரத்துக் கூவினர். அதற்கு யாரும் பதில் சொல்வார் கிடையாது. அரைமணி நேரம் நின்றார்கள். மணியும்ஆறுகிவிட்டது. கருப்பன்செட்டியாருக்கும் ராமநாதன் செட்டியாருக்கும் அடக்க முடியாத கோபம் வந்து விட்டது. உள்ளே சென்று காச்சு மூச்சென்று இரைச்சல் போட்டார்கள். அதன் பிறகு, நமது கருப்பன் செட்டியாரின் மறுதார மனைவி வெற்றிலை பாக்கால் நிறைந்த வாயினுல் சிரித்துக் கொண்டு 'எல்லாரும் சேலை கீலை உடுத்துக் கொண்டு தானே வரவேணும்' என்று அழுத்தந் திருத்தமாக மெல்லிய குரலில் சொல்லிக்கொண்டு கடைக் கண்ணால் கருப்பன் செட்டியாரைத் திரும்பிப் பார்த்தாள். அவள் கட்டியிருந்த குறநாட்டுப் பட்டும் நெற்றியில் தீட்டி யிருந்த பொட்டும் புன்முறுவலும் கருப்பன் செட்டியாருடைய புத்தியைத்தொலைத்து விட்டன. சில பெண்கள் தண்ணீர்க் குடங்களை எடுத்துக் கொண்டனர். சிலர் தாம்பாளங்களில் வெள்ளிப் பாத்திரங்களையும் வெளி நாடுகளிலிருந்து வாங்கி வரப்பட்ட சில்லரைச் சாமான்கள் நிறைத்து

வைக்கப்பட் டிருந்த தாம்பாளங்களையும் தூக்கிக்கொண்டனர். எல்லோரும் வெளியே வந்தார்கள். பாண்டுவாத்தியக்காரர் மடார் மடாரென்று போட்டு அடித்துத் தீர்த்தார்கள். தீவட்டிகள் கொளுத்தப்பட்டன. அந்த ஊரிலுள்ள வீதிகளில் ஒன்று தவறாமல் சுற்றிச் சுற்றி நடந்து ஒரு வீட்டில் புகுந்தார்கள். அங்கு இந்தச் சாமான்களை வைத்தார்கள். அங்கு நூற்றுக் கணக்கான பாத்திரங்களில் தானிய வகைகள் பொறுக்கி யெடுத்து நிரப்பப் பெற்றிருந்தன. மரச் சாமான்கள் சொல்ல முடியாது. மெத்தை தலையணை பாய் தடுக்கு முதலிய சாமான்கள் எண்ணத் தொலையா. சுருக்கமாகச் சொன்னால் அது ஒரு பெரிய கண்காட்சி சாலையாக விருந்தது. அதனைப் பார்ப்பதற்கு நூற்றுக் கணக்கான பெண் மக்கள் வந்து கொண்டே யிருந்தார்கள். அவைகளைப் பார்த்துப் பலரும் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். கருப்பன் செட்டியாரும் அவர் மனைவியும் இந்தக்கலியாணத்துக்கு ஒரு வேலையும் பார்க்கவில்லை யென்றும் ஒரு காசு கூடக் கொடுக்க வில்லை என்றும், பெண்ணின் தாயாரின் சீதனப் பணம் ஐம்பதாயிரம் ரூபாயிருக்கிற தென்றும் அது முழுமையும் இந்தக் கலியாணச் செலவுக்கும் சீர் முறைக்குமாகச் செலவழிக்கப் போகிறார்களென்றும், கலியாண வேலைகள் பூராவும் ராமநாதன் செட்டியாரும் அவர் மனைவியுந் தான் பார்த்தார்களென்றும், இப்படிச் சாமான் சேர்க்க ஒருவராலும் முடியா தென்றும் பலர் பேசினார்கள். 'சுடு சுடு என்று மூஞ்சி

யைக் காட்டுகிறவள் (கருப்பன் செட்டியார் மனைவி) இன்றைக்குச் சந்தோஷமாக வந்த காரண மென்ன? மாற்றிச் செய்யவேண்டு மென்று சொல்லி இரண்டு வருஷமாக வைத்திருந்த பெண்ணைச் சும்மா செய்ய எப்படி ஒத்துக் கொண்டாள்.' என்ற பேச்சு வனுத்தது. 'ரகசியமாகப் பெருந் தொகையை வாங்கி யிருப்பார்கள்; மெய்யம்மை ஆச்சியும் சரியான ஆள்' என்று முடிவு செய்தார்கள். 'தாயில்லாத பெண்ணுக்கு மாமியாளும் ராணி; ஆம்பிளையானுங் காலி' என்று பலரும் பேசிக்கொண்டார்கள்.

இப்படிப் பலரும் பலவாறுகப் பேசிக் கொண்டிருக்கிற பொழுது முற்றத்தில் நின்றவர்களின் கண்ணுக்குச் சிலஅவிட்டு வாணங்களின் அழகிய தோற்றம் தெரிந்தது. ராமநாதன் செட்டியார் மற்றவர்களைப் பார்த்து 'நேரமாய் விட்டது; மாப்பிள்ளை அழைக்கப் போக வேண்டும், வாருங்கள்' என்று கூறினர். எல்லோரும் புறப்பட்டுப் பெண் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். பிறகு உடைகளெல்லாம் புதிதாக உடுத்துக் கொண்டு மேளகாரனும் பாண்டுக்காரனும் முன்னே செல்ல எல்லோரும் பின்னே சென்றுர்கள். அவ்வூரின் ஊரணிக் கரையில் பாய் விரித்திருந்தது. அதன் நடுவில் நமது ரங்கன் மாப்பிள்ளைக் கோலத்தோடு வீற்றிருந்தான். நல்ல உயர்ந்த பீதாம்பர மொன்று அவன் உடலில் போர்த்தப்பட்டிருந்தது. மெல்லிய கெண்டை வேட்டியை அரையிற் கட்டி யிருந்தான். தலையில் ஒரு தலைப்பாகையை அணிவித்தார்கள். வயிரமும் சிவப்பும்

வைத்திழைத்த பல நகைகள் அவன் உடம்பை அலங்கரித்தன. இத்தனை அலங்காரமும் சிறப்பாக இருந்ததற்குக் காரணம் அவனுடைய அயோக்கியத்தனம் அடங்கி மறைந்து கிடந்ததே யாகும். அவனுடைய வாலைச் சுருட்டி மடக்கிக் கட்டி வைத்துக் கொண்டு தலையை நிமிர்த்திக் கையை விறைக்க நீட்டிக் கொண்டு மாப்பிள்ளையாக உட்கார்ந் திருந்தான். அவனைப் பார்த்த பெண்கள் யாவரும் 'மாப்பிளை சிட்டுச் சிட்டாக, செங்கழு நீராக இருக்கிறது' என்று சொல்லி விட்டார்கள்.

மேளகாரன் மேளத்தை வாசித்தான்; தவில்காரன் படுவாங்கு வாங்கினான். பாண்டுக்காரன் மனம் போனபடி வெளுத்து வாங்கினான். வாணமொரு பக்கம்; தீவட்டி ஒரு பக்கம், 'பாயைச் சுருட்டு; சேட்டை எடு; மரவையைத் தூக்கு; புறப்படுங்கள்; புறப்படுங்கள்' என்று காச்சு மூச்சென்ற சத்த மொருபுறம். ஒருவர் சொல்வது மற்றவருக்குக் கேட்க வில்லை. எப்படியோ யாவரும் புறப்பட்டு மட மட வென்று கண்காட்சிசாலை போல சாமான்களால் நிரப்பப் பட்டிருந்த வீட்டினுள் நுழைந்தார்கள். அந்த வீடுதான் மாப்பிள்ளை வீட்டாருக்காக ஜாகை அமர்த்திய வீடு. இந்த வீட்டுக்கும் மன்னைகட்டிக் கருப்பன்செட்டியார் வீட்டுக்குமாகப் பலமுறை மேளகாரனைக் கூட்டிக் கொண்டு போவதும் வருவதுமாக மறுநாட் பகற்பொழுது முழுமையும் கழித்தார்கள். இரவு ஏழு மணி யிருக்கலாம்.

அந்த ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் யாவரும் வந்தார்கள். முகூர்த்தம் இரவு பன்னிரண்டு மணிக்கென்று சொன்னபடியால் திரும்பி அவர்கள் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். ஐயர் பார்த்த நாழிகையும் நெருங்கி வந்து கொண்டிருந்தது. 'திருப்பூட்டப் போக வேண்டும். சேலையை உடுத்துங்கள்' என்று ராமநாதன் செட்டியார் சொன்னார். பெண்கள் எல்லாரும் அவசர அவசரமாக அலங்காரஞ்செய்துகொண்டிருந்தார்கள். படுத்து உறங்கினவர்களை யெழுப்பினார்கள். சிலர் படுத்துக்கொண்டே 'வந்து விட்டேன், கொல்லாதீர்கள்' என்றார்கள். சிலர் 'இதென்னடா சனியன் பிடித்த இழவு; திருப்பூட்டவும் வேண்டாம் ஒரு சனியனும் வேண்டாம்; நீங்கள் தொலைந்து போங்கள்; நான் வரவில்லை' என்றார்கள்.

சிலர் எழுந்து மெத்தையில் உட்கார்ந்து கொண்டே தூங்கிவிழுந்தார்கள். வேறு சிலர் எழுந்துநின்று தூண்களில் சாய்ந்து கொண்டே தூங்கினார்கள். உறக்கத்தோடு உறக்கமாக ஒரு சிறு பெண் வெளியேசென்றது. ஆங்கே இருட்டில் பதுங்கி நின்ற ஒரு நல்ல பாம்பு அந்தப் பெண்ணின் காலில் நன்றாகக்கடித்துவிட்டது. ஆ! ஊ! பா! பா! சா! சா! என்று பிள்ளை துடித்தது. பெண்ணின் குரல் கேட்டவுடன் துடித்துக் கொண்டு அதன் தாயார் வீதிக்கு வந்தாள். அவள் கண்ணில் பாம்பைக் கண்டு விட்டாள். பாம்பைக் காணவே உடலெல்லாம் வெயர்த்து விருவிருத்துப் போய்விட்டது. பம்! பம்! பம்!

பாம்! பாம்! பாம்! என்று கத்தினுள். பயம் நிறைந்து விட்டபடியால், 'பாம்பு' என்று சொல்ல வரவில்லை. இவள் போட்ட கூப்பாடு மிகப் பெரிதாகி விட்டது. உள்ளே யிருந்த ஆண் பெண் பிள்ளைகுட்டியாவரும் வெளியே வந்துவிட்டனர். வாயில் நுரையைக்கக்கிக் கீழேவிழுந்து கிடந்த பெரிய ஆச்சியைக் கைத்தாங்கலாகத் தூக்கி, 'என்ன சங்கதி' யென்று கேட்டார்கள். 'மகளைப் பாம்பு கடித்து விட்டது' என்றாள். 'உன்னைக் கடிக்க வில்லையே' என்றார்கள். 'நல்ல வேளை; இதற்குத் தானு இந்த அமர்க்களம்?' என்று சிலர் பேசிக்கொண்டார்கள். உடனே வைத்தியருக்கு ஆள் அனுப்பப்பட்டது. ஒரு வண்டி வேப்பங் குழை ஒடித்து வரப்பட்டது. நாலு பேர் இருந்து மந்திரித்தார்கள். மண்டை யோட்டைக் கீறி மருந்து போடப்பட் டிருந்தது. பல் கிட்டிப் போய் விட்டபடியால் வாய் வழியாக மருந்து கொடுக்க முடியவில்லை. 'இந்தப் பெண் பிழைப்பாளா? ஐயா! கலியாணஞ் செய்து ஆறுமாதங்கூட ஆகவில்லையே! செத்துப் போனல் அந்தக் குடி முழுகிப்போமே! ஊர் கிடக்கிற மாதிரிக்கு மறுதாரத்துக்கு வழியில்லையே! அவன் ஆண்டியாகப் போக வேண்டியது தான். கையிலிருந்ததும் போகக் கடனும் வாங்கிக்கொடுத்து இந்தப் பெண்ணைக் கொண்டானும். பாவம் பறிபட்டுப் போச்சு' என்று பல பெண்கள் வருந்தினுர்கள். சிறிது நேரஞ் செல்லவே விஷம் ஒருவாருக இறங்க ஆரம்பித்தது. அந்தப் பெண்ணுக்கு ஒருவாறு ஸ்மரணை யுண்டாயிற்று. இந்த

சந்தர்ப்பத்தில் ஒரு பெண், 'ஐயோ! ஆத்தி! என்ன பண்ணப் போகிறேன்; என்னைக் கொன்று விடுவார் களே! வைரக் காப்பைக் காணோமே! இந்த இடத் தில் தானே வைத்து விட்டுப் பாம்பு கடித்தப் பிள்ளை யைப் பார்க்க வெளியே வந்தேன். காணோமே! என்ன பண்ணுவேன்? என் உயிர் போகப் போகி றதே' என்று துடித்தாள். 'யாரெடுத்தது? எவ ரெடுத்தது?' என்று கேட்டார்கள். நடக்குமா? வைரக் காப்பை எடுத்தவர்கள் லேசில் கொடுப்பார் களா? இந்த இரைச்சல் அடங்க அரைமணி நேரஞ் சென்றது. இந்த அமளியை யொருவாறுகச் சமா தானப் படுத்திக் கொண் டிருக்கும்போது, 'பார்த்த நாழிகை யாய்விட்டதே' என்று சோணாசலச் செட் டியார் தன் அருமை மனைவி யிடத்திற் சொன்னர். 'நாமென்ன செய்கிறது? விடிகிறதற்குள் தாலியைக் கட்டினல் சரிதான்' என்று பதில் கூறினள். பிறகு எல்லாரும் அலங்காரஞ் செய்து கொண்டு திருப்பூட் டப் புறப்பட்டார்கள்.

அப்பொழுது விழித்திருந்தவர் யாவரும் சென் றுவிட்டார்கள். மெத்தையில நெருப்புப் போட்டுக் கொளுத்தினலும் திரும்பிப் படுத்துக் கொள்ளுகிற வர்கள்தாம் • மிச்சமாகக் கிடந்து தூங்கினர்கள். என்ன செய்தாலும் கேட்பார் கிடையாது. விழித் திருப்பவரில் நமது ரங்கன் ஒருவன் தான் மிஞ்சி யிருந்தான். சந்தர்ப்பம் வாய்த்தால் அதை வீணக்கி விடுகிற குணம் நமது ரங்கனிடத்தில் எப்போதுமே கிடையாது. அவன் தனக்குக்கிடைக்கிற ஒவ்வொரு

நிமிஷத்தையும் உபயோகிப்பதில் நிபுணனாக விளங்கினான். அங்கு படுத்து ஆனந்தமாகத் தூங்குகிற கும்பகர்ணனது தம்பிமார்கட்கு அலங்காரஞ் செய்ய ஆரம்பித்தான். ஏற்கனவே தயாரில் வைத்திருந்த நாமக்கட்டியை யெடுத்துத் தண்ணீரில் குழைத்து எல்லாருக்கும் நாமம் போட்டான். நூலில் முடிந்து வைத்திருந்த கற்களைக் கொண்டு வந்து எல்லாருடைய காதுகளிலும் மெதுவாக முடிந்து தொங்கவிட்டான். கனுக் கால்களில் எட்டுக்கயிறுகளைக் கட்டிப் பக்கத்தில் இருந்த தூண்களில் முடிந்து விட்டான். இந்த வேலைகளை முடித்து விட்டு எவருக்கும் தெரியாதபடி ஒரு மூலையில் சென்று படுத்திருந்தான்.

திருப்பூட்டச் சென்றிருந்த யாவரும் பெண் வீட்டில் பெண்ணுக்குத் திருமாங்கல்ய தாரணம் செய்து விட்டுத் திரும்பி வந்தார்கள். மாப்பிள்ளை வீட்டினுள்ளே நுழைந்தார்கள். மணி ஆறாகி விட்டது. பாண்டு வாத்தியமும், மேள வாத்தியமும் படு அடியாகத் தாள நிலை கடந்து அடிக்கிறபடியால் அங்கிருந்த எல்லோருடைய குறும்பியும் பிய்த்துக் கொள்ளும்போலிருந்தது. இவர்கள் போட்ட போட்டில் தூங்கிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் 'சனியன் பிடித்தவன்கள்; கொல்லுறானையா; தூங்க விடுகிறானில்லை' என்று கோபமாகத் திரும்பிப் படுத்தார். ஒரு காதில் கட்டப்பட்டிருந்த கல் படாரென்று அடித்தது. புருவத்தில் கல் அடிபட்டு ரத்தம் கொட்டிற்று. வேட்டியை வைத்தார்; முழுமையும் நனை

ந்து போயிற்று. 'காமாட்டிப் பறப்பயல்; யாரடா கல்லைக் கட்டினவன்?' என்று கோபமாக எழுந்தார். காலிசண்டும் தூணில் கட்டி யிருந்தது அவருக்குத் தெரியாது. படீரென்று எழுந்திருப்பதற்குக் காலை வெட்டி யிழுக்கவே ஏட்டுக் கயிறு வலுவாக இருந்த படியால் கால் தோலை அறுத்து விட்டது. அந்த இடத்திலிருந்து ரத்தம் கொப்புளித்தது. எழுந்து உட்கார்ந்து திட்டிக்கொண்டே கயிற்றைஅவிழ்த்தார். உருவாஞ் சுருக்காதலால் நன்றாக இறுகிப் போய்விட்டது. இந்த சமயத்தில் அவருக்கு மைத்துனன் முறையுள்ள ஒருவர் முன்னாலே வந்து, 'என்ன, மச்சான்! தூக்கம் பலமாக விருந்ததோ?' என்று கேட்டுக்கொண்டு உட்கார்ந்தார். உட்கார்ந்தவுடன் நெற்றியிலுள்ள நாமத்தைப் பார்த்துவிட்ட படியால், 'ஆஹா! நமது மச்சான் இரவெல்லாம் பெருமாளைப் பூசை பண்ணி யிருக்கிறார். பலே! ஐயங்கார் சுவாமிகள்!' என்று சொல்லி மிகப் பலமாகச் சிரித்தார். தூங்கு மூஞ்சுக்குப் பொறுக்க வில்லை. கோபம் பொங்கி விட்டது. 'அடே! கால்மாட்டிப் பயலே! நீதானா என்னைக் கேலிபண்ணுகிறவன்; ராத்திரி இவ்வளவும் செய்து விட்டு விடியுமுந்திக் கேலிபண்ண வந்து விட்டாய்' என்று சொல்லிப் பளீரென்று வந்தவரின் கன்னத்தில் ஒரு அறை கொடுத்தார். வந்தவரும் இளைத்தவ ரில்லை. 'நானடா உனக்கு நாமம் போட்டேன்? அயோக்கியப் பயலே!' என்று கயிறு அவிழ்ப்பவர் கன்னத்தில் விட்டார் ஒரு அறை. ஏகக் கலகமாகப் போய் விட்டது. எல்லோரும் வந்து

சமாதானம் செய்தார்கள். பக்கத்தில் தூங்கியவர்களை எல்லாம் எழுப்பி அவர்களுக்குச் செய்திருந்த ராத்திரி அலங்காரத்தைக் கலைத்துக் காலை அலங்காரஞ் செய்தார்கள். இரவு நடை பெற்ற காரியங்களைப் பற்றியே பலரும் பேசிக் கொண்டிருந்தார்கள். காலையில் பல காரியங்கள் நடை பெற்றன. பகல் பன்னிரண்டு மணிக்கு மணவறைக்கு நாழிகை பார்த்திருந்தபடியால் அந்த நேரத்திற்கு நமது ரங்கனை அலங்காரஞ் செய்து குதிரையிலே தூக்கி வைத்துப் பெண் வீட்டுக்குக் கொண்டு போனார்கள். அங்கு மணையில் அவனை உட்கார வைத்தார்கள். பெண்ணைக் கூட்டி வந்து மாப்பிள்ளையின் வலப் புறத்தில் உட்கார வைத்தார்கள். நமது ரங்கனை அவன் மாமக்காரர் நன்றாக நிமிர்ந்து உட்காரும்படி சொன்னார். அவனும் உடலை நிமிர்த்துக் கையை விறைப்பாக நீட்டி முழங்காலைத் தொட்டுக் கொண்டு சம்மணம் போட்டு மாப்பிள்ளை மாதிரி மணையில் உட்கார்ந்திருந்தான். பெண்ணும் அவனுக்கு அடுத்தாற்போல் தலையைக் குனிந்து கொண்டு உடலையும் முன்னாலே வளைத்துச் சுருட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண் டிருந்தது. அப்படி யிருக்க வேண்டுமென்று அவளைச் சார்ந்தவர் சொல்லி யிருந்தார்கள். இப்பொழுது மாப்பிளையும் பெண்ணும் உயரம் ஒத்திருந்தார்கள். இவர்களிருக்கிற மணையின் முன்புறத்தில் அரசாணிக்கால் முதலியன அழகாக அமைக்கப் பட்டிருந்தன; பல பிராமணர்கள் உட்கார்ந்து கொண்டு வாயில் எதேதையோ சொல்லி ஓமம் வளர்த்தார்கள். சடங்குகள்

முடிந்தன. மாப்பிள்ளை கையையும் பெண்கையையும் ஒன்றின்மேலொன்றாக வைத்து இருவருடைய மாம க்காரரும் பிடித்துக் கொண்டு மணையையும் அரசா ணிக்காலையும் பிராமணர்களையும் அவர்களுடைய ஓம குண்டம் முதலியவற்றையும் சேர்த்துச் சுற்றிக்கொ ண்டு வந்தார்கள். இப்பொழுதும் பெண் குனிந்து கொண்டுதான் சுற்றினாளாயினும் மாப்பிள்ளையை விட ஐந்தாறு விரற்கடை உயரமாக விருந்தாள். எட்டுக் கைகளை ஒன்று சேர்த்துக் கட்டியதுபோல நான்கு பெயர்களும் ஒன்று சேர்ந்து நடந்து செல்ல மிகக் கஷ்டப்பட்டுத் தத்தித் தத்தி நடந்து இரண்டாவது சுற்று வந்து கொண்டிருந்தார்கள். இந்தச் சந்தர்ப் பத்தில் அழகான டில்வி மட்டம் பூட்டிய டாக்கார்ட் ஒன்று வாசலில் வந்துநின்றது. அதிலிருந்து ஒரு செட்டியார் இறங்கினர். அவர் கூத்தளூரில் மிகப்புக ழ்பெற்று விளங்கினர். பாரம்பரையாகப் பணமும் புகழுமில்லா விட்டாலும் இப்பொழுது செய்கோன் கடையில் சக்கை போடாக லாபம் வந்து விட்டது. புதுப் பணம் வந்தது முதல் இவரைக் கைகளில் பிடி க்க முடியவில்லை. ஏகதடபுடல். இப்பொழுதும் இவர் நல்ல மெல்லிய கும்பகோணம் கெண்டை வேட்டி கட்டி யிருந்தார். ஒரு சாண் அகலக் கெண்டை யுள்ள கோயமுத்தூர் துப்பட்டா ஒன்றை விசிறி மடி மடித்துக் கழுத்தைச் சுற்றித் தொங்க விட்டிரு ந்தாராயினும், அதனுள்ளே போட்டிருந்த வயிரக் கெவுடு நன்றாக வெளியே தெரிந்தது. அரையில் வயிர முகப்பு வைத்த அரைஞாணும், கையில் வயி

ரப் பட்டைக்காப்பும், விரல் நிறையப் பல வயிர மோதிரங்களும், நல்ல சில்க் சட்டையும் பிறவும் அணிந்திருந்தார். வண்டியை விட்டுக் கீழே யிறங்கி தடபுடலாக வீட்டினுள்ளே நுழைந்தார். அங்கிருந்த யாவரும் 'வாருங்கள், வாருங்கள்; இருங்கள், இருங்கள்; அடே! யாரடா? சர்பத்துக் கொண்டாடா! சந்தனம் கொண்டாடா! வெற்றிலை பாக்குத் தட்டெடுத்தா!' என்று கதறினர்கள். சில கிழவர்கள் இவருடைய ஆபரணங்களைக் கண்டு மயங்கினர்கள். அங்கிருந்த பெண் மக்கள் எல்லோரும் 'இவர்தான் கூத்தனூர்ச் செட்டியார்' என்று பேசிக்கொண்டார்கள். இவர் வந்தவுடன் பலரும் கசகச வென்று எதையோ பற்றிப் பேசிக்கொண்டார்கள். இத்தனை சங்கதியும் வந்த இவர் காதில் விழவில்லை. அவர் யாரையோ தேடுபவர் போலும் கடுமையான கோபங்கொண்டவர் போலும் தோன்றினர். வந்து உட்கார்ந்து இரண்டு மூன்று நிமிஷங்கள் தாம் ஆயின. புலிபோல் எழுந்து வேகமாகப் பெண்கள் கூடியிருக்கிற இடத்திற்கு வந்து அங்கு உட்கார்ந்திருந்த ஒரு அழகான பெண்ணைக் கையைப் பிடித்து இழுத்து வாசலில் நிறுத்தித் தடபடவென்று முதுகில் நாலைந்து அடி சுருளச் சுருள அடித்து நொறுக்கி விட்டார். அந்தப் பெண் 'அப்பா! ஆத்தா! செத்தேன், செத்தேன்' என்று கதறித் துடித்தது. மேனு மேலும் அடிக்கவே, அப்பெண் மயங்கிக் கீழே விழுந்து விட்டது. பிறகும் 'களவாணிக் கழுதாய்! சாதி கெட்ட நாயே! பல சாதிக் குரங்கே! வயி

ரக் காப்பை வைத்து விட்டு, எந்த அப்பனைப் பார்க்கப் போகிறது? உன் அப்பன் வீட்டுச் சொத்தாக இருந்தால் தெரியும்' என்று சொல்லிக் கொண்டே போட்டு வயிற்றில் மிதித்துக் கொண்டு நின்றான் புதுப்பணக்கார ராக்ஷசன். பலரும் வந்து விலக்குவதற்குள் இவ்வளவு காரியங்கள் நடந்துவிட்டன. பிறகு தண்ணீர் தெளித்துக் களைப்பாற்றி அந்தப் பெண்ணை எழுப்பிக் காயத்துக்கு ஒற்றிடங்கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இதனை எல்லாரும் பார்க்கிறபொழுது நமது ரங்கன் கண்கள் சும்மாவிருக்குமோ? மாப்பிள்ளை பெண் மாமக்காரர்கள் எல்லாரும் இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தார்களாயினும், காரியங்கள் நடந்து கொண்டேயிருந்தன. அரசாணிக் காலுக்குப் பக்கத்தில் சரவிளக்கொன்று ஏற்றப்பட்டுத் தொங்கியது. அதன் கீழே குனிந்து செல்ல வேண்டுமென்பதை மறந்து விட்டான் நமது மாப்பிளை ரங்கன். பெண்டாட்டியைப் புதுப்பணக்கார மிருகம் அடிப்பதைக் கவனமாகப் பார்த்துக் கொண்டே நடந்து சர விளக்கின் அடிப்பாகத்தின் விளிம்பில் சடாரென்று முட்டினான். நெற்றியில் ஓங்கி யடிபடவே, அரை இஞ்சு ஆழம் பதிந்து போய் விட்டது. இப்படி அடிப்பிடம் அடிபடவே மேலே எரிந்து கொண்டிருந்த திரியும் எண்ணையும் நமது ரங்கன் தலைப் பாகையின் மேல் ஒழுகின. மெதுவாக நெருப்புப்பிடிக்க ஆரம்பித்ததைக் கண்டு பக்கத்திலிருந்த ஒருவர் ஒரே தட்டாகத் தலைப் பாகையைக் கீழே விழத் தட்டினார்.

நெற்றியிலிருந்து ரத்தம் பெருகியது. பல பெயர் வந்து ரத்தத்தைத் துடைத்தார்கள். தடைபட்ட பாடாயில்லை. பெண்ணின் புடவையிலும் மாமக்கார ருடைய வேஷ்டிகளிலும் ரத்தம் நிறைந்து விட்டது. ரங்கன் நிலைமை மோசமாகிவிட்டது. நெற்றியில் வைத்தியர் வந்து ஒரு நாளுக்கு இருமுறை கட்டவிழ்த்துக் கட்டினர். வேறு கல்யாணச் சடங்குகள் அவ்வளவு விசேஷமாக நடைபெற முடியவில்லை. சரிக்கட்டிக் கலியாணத்தை முடித்து விட்டார்கள்.

அத்தியாயம் ரு.

தொலையேறித் திரும்பியது.

கலியாணம் முடிந்து ஒரு மாத காலமிருக்கலாம். நமது ரங்கன் தகப்பனர் சோணசலச் செட்டியாருக்குப் பதிலாளா யிருந்தவர் நடத்தை கோணிப்போய் விட்டா ரென்றும், அவரிடத்தில் கணக்குகளை வாங்குவதற்கு உடனே புறப்பட வேண்டுமென்றும் முதலாளி கடுதாசி யெழுதிக் கொடுத்து விட்டிருந்தார். அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டுத் தன் மனைவி யிடத்தில் சோணசலச் செட்டியார் விஷயத்தைச்சொன்னர். மெய்யும்மை ஆச்சி மிகக் கெட்டிக்காரி யல்லவா? பயலை யெப்படியாவது ஊருக்குக் கூட்டி விட்டால் நல்ல தென்று நினைத்துக் கொண்டிருந்தாள். கணவன் புறப்பட்டால் கூட ரங்கனையும் தொலைத்து விடலா மென்று நினைத்தாளாயினும் முதல் வருஷ வேலை இறங்கிக்

கொண்டு புறப்பட்டால் நல்லதென்று கூறினாள். அவசர மாதலால் புறப்பட வேண்டியது தான் என்று சோணாசலச் செட்டியார் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நல்ல நாள் பார்த்து வைகாசி-மீ கஉ-யைக் குறிப்பிட்டார்கள். அன்று அதிகாலையில் தகப்பனும் மகனுமாகப் புறப்பட்டுச் சென்றார்கள். நாகபட்டினம் வந்து கப்பலேறிப் பினாங்குத் துறை முகம் வந்து சேர்ந்தார்கள். வந்த சில நாளில் பழய கணக்கு ஆளிடமிருந்து கணக்குகளை வாங்கிக் கடையை நடத்த ஆரம்பித்தார் சோணாசலச் செட்டியார். அவர் மிக யோக்கியராகவும், பிறர் சொத்துக்கு ஆசைப்படாதவராகவும், தொழில் முறையில் மிக்க அனுபவம் பெற்றவராகவும், உதாரகுண முடையவராகவும் இருந்தபடியால், அவரை எல்லாரும் போற்றினார்கள். நமது ரங்கனும் ஒரு மாதம் வரை வாலைச் சுருட்டிக் கொண் டிருந்தான். சோணாசலச் செட்டியார் பெரிய கடைக்குக் கூட்டாளியாக விருந்தபடியால் ஆங்கிலந் தெரிந்தால் தற்காலத் தொழிலுக்கு எவ்வளவு சாதகமாயிருக்கு மென்பதை அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொண்டிருந்தார். ஆதலால் தன்னுடைய அருமை மகனுக்கு ஆங்கிலம் படிப்பிக்க வேண்டு மென்று கருதினார். அங்கு மிகச் செல்வாக்குள்ளதான மாக்பேல் கலா சாலைக்கு அழைத்துச் சென்று உபாத்தியாயரிடம் விவரத்தைச் சொன்னார். பையனுக்கு வயது பதினொன்றுக்கு மேலாகி விட்டபடியால் சேர்த்துக் கொள்ள முடியா தென்று

சொல்லி விட்டார்கள். பிறகு அங்குள்ள ஆங்கிலோ வைனிஸ் கலாசாலையில் சேர்த்து விடலாமென் றெண்ணினர். அப்பொழுது நமது சோணசலச் செட்டியாருக்கு நேசரான அரசனூர் முத்தையா செட்டியாரென்பவர் 'நம்மிடத்தில் பற்று வரவு செய்கிற ஐயரொருவர் ஆங்கிலோ வைனிஸ் பள்ளிக்கூடத்தில் வாத்தியாராக விருக்கிறார்; அவரைக் கேட்போம்' என்று சொன்னர். சரி யென்று அவரைக் கண்டு கேட்டார்கள். அவரும் பையனைப் பரிசோதித்தார். 'ஒன்றுந் தெரியாமல் சேர்த்துக் கொள்ள மாட்டார்களாதலால் ஒரு மாதமாவது வீட்டிலேயே வைத்து எழுத்து முதலிய வற்றைச் சொல்லிக் கொடுத்துப் பிறகு பள்ளிக்கூடத்தில் சேர்ப்போம்' என்று சொன்னர். அப்படியே நடவடி நடத்தப் பட்டது. இருபத்தா றெழுத்தையும் ஒரு மாதத்தில் படித்துக் கொண்டான் பையன். இதற்குள்ளாக வாத்தியார் ஐயருக்குப் பாதி உயிர் போய் விட்டது. இந்தச் சனியனைக் கட்டிக்கொண் டழுவதைவிடப் பள்ளிக் கூடத்தில் தொலைப்பது நலமென்று கருதித் தலைமை உபாத்தியாயரிடத்தில் சொல்லி முதற் கிளாசில் சேர்த்து விட்டார். உடனே பையனுக்குக் கால்சட்டை மேல் சட்டை ஸ்டாக்கிங் பூட்ஸ் தலைக்கு ஒரு தொப்பி தபால்காரன் மாதிரி தோளில் ஒரு புத்தகப்பை எல்லாம் தைத்து அலங்காரஞ் செய்யப் பட்டது. இந்த அலங்காரம் தனக்கு வந்தது பூர்வ புண்ணிய வசமென்று ரங்கன் கருதினன். ஆதலால் நாள்தோறும் பள்ளிக்கூடத்திற்குத் தவறாமல் போய் வந்து

கொண்டிருந்தான். பள்ளிக்கூடத்தில் விசேஷமாகப் படிப்பதில் புத்தி செல்லாவிட்டாலும் குறும்பு சிறிது அடங்கி யிருந்தது. எதனாலென்றால் இவனுக்குத் தமிழ் தவிர வேறு பாஷையில் பேசத் தெரியாது. அந்தப் பள்ளிக்கூடத்தில் வேறு தமிழ்க் குழந்தைகள் கிடையா. ஏதாவது குறும்பு செய்தால் சீனப் பயல்கள் போட்டு அடித்துக் கொன்று விடுவார்களென்று பயந்தான். இப்படியே ஆறு மாதங்கள் சென்றன. மலாய் பாஷையைப் படித்துக் கொண்டான். இதற்குள்ளாகப் பல சீனப் பயல்களும் சிநேகமானார்கள். சிகரெட் குடிப்பதில் இவன் கைகாரனென்று பேர் வாங்கினான். பள்ளிக்கூடம் விட்ட பிறகு திடரில் எல்லாப் பையன்களும் பந்தடிப்பது வழக்கம். இவன பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்தவுடன் நேரே வீட்டுக்கு வருவ தில்லை. ஊரைச் சுற்றிவிட்டு சோற்று நேரத்திற்குத்தான் வருவான். வரவரப் படிப்பிலே புத்தி செல்லாமல் விளையாட்டிலேயே புத்தி சென்று கொண்டிருந்தது. இதனைச் சோணாசலச் செட்டியார் தெரிந்து கொள்ள வில்லை. நேரந் தவறாமல் பள்ளிக்கூடத்திற்குப் போய் விடுகிறானென்பதில் அவர் மனம் மகிழ்ச்சி யடைந்து விட்டது. அங்கு போய்ப் பையன் என்ன செய்கிறானென்ற விஷயத்தைப் பற்றிக் கவனிக்கவே யில்லை. பையனுடைய வகுப்பு வாத்தியார் பிள்ளைக்கு நன்றாகச் சொல்லிக் கொடுக்க வேண்டு மென்று கருதிச் சுமார் ஐந்நூறு வெள்ளி வரை அவருக்குக் கடனுங் கொடுத்திருந்தார். அதனையும் அவ்வளவாகக் கண்

டித்துக் கேட்க வில்லை. இதனுற்றான் அவ்வுபாத்தியாயர் நமது ரங்கனை வெளியே துரத்தாமலிருந்தார். இத்தியாதி காரணங்களால் ரங்கன் பள்ளிக்கூடத்தில் பண்ணின அக்கிரமங்கட்குக் கணக்கே யில்லை. தின்னைப் பள்ளிக்கூடத்தில் செய்த குறும்புகளில் பலவற்றை அவன் நினைவிற்குக் கொண்டு வந்தான்; செய்கைக்குக் கொண்டு வரவும் ஆரம்பித்து விட்டான்; வாத்தியார் கோபித்தார்; நாக்கை நீட்டினுன்; நாற்காலியின் மேல் நிற்க வைத்தார்; இருந்த பையன்கள் சிரித்தார்கள். அவர்களுள்ளும் ஒரு சினப் பையன் மிகக் கேலி செய்தான். ஆனுல் ரங்கனுக்கு நாற்காலியின் மேல் நிறுத்தியது வருத்தமாகத் தோன்ற வில்லை. எதிரே யிருந்து அதிகமாகச் சிரித்தவனைக் கொன்று தீர்த்துவிட வேண்டுமென்றெண்ணி விட்டான். உபாத்தியாயர் உட்காரச் சொன்ன பிறகு உட்கார்ந்தான். சாயுங்காலம் எல்லாப் பையன்களும் பந்தடிக்கச் சென்றுர்கள். ஊக்கமாக விளையாடிக் கொண்டிருக்கிற பொழுது பள்ளிக்கூடத்தில் இவனைப் பார்த்துச் சிரித்த சினப் பையன் இவனருகில் ஓடிச் சென்றுன். உடனே அவன் காலினுள்ளே இவனுடைய காலைக் கொடுத்து வாரிவிட்டான். சினப்பையன் ஓடிச் சென்ற வேகத்தில் திடீரென்று குப்புற விழுந்தான். மூக்கு அப்படியே நசுங்கிப்போன தோடு முழங்கால் கைகள் முதலிய பல விடங்களிலும் காயங்கள் பட்டன. உடனே பலருங்கூடி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்விட்டனர். அதன் மேல் ரங்கன் அங்கு விளையாடக் கூடாதென்றும்

விளையாடும்போது ஒரு நாளும் இவனைச் சேர்ப்பதில்லை யென்றும் முடிவு கட்டி இவனைத் துரத்தி விட்டனர். ரங்கனும் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். மறுநாள் பள்ளிக்கூடத்திற்குப் போகவில்லை. தலை வலிக்கிற தென்று சொல்லி மேல் வீட்டில் படுத்து விட்டான். இப்படியே இரண்டு மூன்று தினங்கள் சென்றன. நான்காம் நாள் எழுந்து வெளியே வந்தான். பயம் அதிகரித்து விட்டது. ரங்கன் நடுங்கினான். ஏனெனில் காயம் பட்ட சீனப் பையனின் தமையனொருவன் இருந்தான். அவன் மகா பொல்லாதவ னென்பது ரங்கனுக்குத் தெரியும். அவனையும் அவனுடைய நண்பர்களையுந்தான் சமுசியப் பயல்களென்று எல்லாருங் கூறுவார்கள். அதனால்தான் ரங்கன் தன்னுயிர் போய்விடு மென்று எண்ணினான். அப்படியே ரங்கனைக் கொன்றுவிட வேண்டுமென்றெண்ணிக் கொண்டு அந்தச் சீனன் தேடிக் கொண்டிருந்தான். ரங்கனும் வெளியே செல்லாமற் கவனமாக விருந்தான். இந்தப் பயமானது வரவர அதிகரிக்கவே ரங்கனுடைய உடல் இளைத்தது. நோய்வாய்ப் பட்டவன் போலாகி விட்டான். அதனால் அவன் தகப்பனார் பள்ளிக்கூடத்திற்குப் போகும்படி சொல்லவுமில்லை. இப்படிச் சில நாட்கள் சென்றன. ஒரு நாள் சீமையி லிருந்து பெரிய சண்டைக் கப்பல் ஒன்றுவந்திருந்தது. அந்த மாதிரியான கப்பல் அந்த நாட்டுக்கு அதுவரை வந்ததில்லை யாதலால், அரசாங்கத்தினர் பெரு மதிப்புச் செலுத்தியது மல்லாமல் ஊரிலுள்ள ஜனங்க ளெல்லோரையும் இலவசமாகக்

சென்று பார்த்து வரும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். இதனைப் பார்ப்பதற்காக ரங்கன் தகப்பனாரும் வேறு பல சிநேகிதர்களோடு ரங்கனையும் கூடவே அழைத்துச் சென்றார். எல்லாருங் கடற்கரைக்குச் சென்றார்கள். துறைமுகத்திற்கு வெகு தூரத்திலேயே சண்டைக் கப்பல் நிறுத்தப் பட்டிருந்தது. அதனிடம் கொண்டு சேர்க்கும் படகுகள் பல விருந்தாலும் ஜனத்திரள் மிக அதிகமாகி விட்டபடியால் துறைமுகத்தில் வெகுநேரம் காத்திருக்க வேண்டிய தவசியமாகி விட்டது. இப்படிக் காத்துக் கொண்டு நிற்கும்போது ரங்கனால் கீழே தள்ளப்பட்ட சீனப் பையனின் தமயன் அங்கு ஒரு மூலையில் வேறு சிலரோடு நிற்பதை ரங்கன் கண்டு விட்டான். உடல் நடுக்குற்று வாய் நீர் வற்றிப் போய் விட்டது. அன்று தான் சாவுகால மென்று ரங்கன் கருதிவிட்டான். எப்படியாவது கொன்று தீர்த்து விடுவானென்ற எண்ணம் உண்டாகி விட்டது. சீனனைக் கூர்மையாகப் பார்த்த வண்ணமாகத் தகப்பனாரின் கையை விட்டு விட்டான்; மெதுவாக நடந்தான். பக்கத்திலே யிருந்த பெரிய அல்லூரை (ஊர்க்கழிவு தண்ணீர் வருகிறதூம்பை)க் கண்டான். வேகமாக அதற்குள்ளே புகுந்து விட்டான். இவன் அல்லூரிற் புகும்போது காலை எழு மணி யிருக்கும். அதனுள்ளேயே நமது கூழை ரங்கன் பதுங்கி யிருந்தான். சோணாசலச் செட்டியாரும் அவர் நண்பர்களும் அங்குமிங்குந் தேடிப் பார்த்தார்கள். ரங்கனைக் காணாவில்லை. 'போக்கிரிப் பயல்! எங்காவது தொலைந்

திருப்பான்' என்று சொல்லிக் கொண்டே படகிலே றிக் கப்பலைப் பார்த்து விட்டுத் திரும்பி வீடு சேர்ந் தார்கள். வீட்டிலும் ரங்கன் இல்லை. சாப்பாட்டு நேரமாகிவிட்டது. மணியும் மூன்ருகி, நாலாகி விட் டது. ரங்கன் வரவில்லை. சோணுசலச் செட்டியா ருக்குச் சந்தேக முண்டாகி விட்டது. ஐந்தாறு நாளாக இவன் வெளிச் செல்லாதிருந்ததும் திருடன் மாதிரி விழித்துக் கொண்டு பதுங்கிப் பதுங்கி நடந் ததும் ஞாபகத்துக்கு வந்தன. தானுகச் செல்பவன் ஏன் இன்றையதினம் கையைப் பிடித்துக் கொண்டு மறைந்து மறைந்து தொடர்ந்து வந்தா னென்று எண்ணினுர். சந்தேகமும் பயமும் அதிகரித்து விட்டன. நாலு பக்கத்திலும் ஆட்களை விட்டுத் தேடினுர். மணியும் ஆருகி விட்டது. எங்கு தேடி யும் ரங்கனைக் காண முடியவில்லை.

இரவு மணி பதினென்றிருக்கலாம். இந்த நேர த்தில் தான் சமைற்காரர் யாவரும் ஒன்று கூடிப் புற ப்படுவது வழக்கம். அப்படியே சமையல் செய்து எஜமானர்கட்கு உணவளித்துத் தாங்களும் உண்டு விட்டுப் புறப்பட்டார்கள். சண்டைக் கப்பலில் விளக் குகள் போட் டிருந்ததால் இரவிற் பார்ப்பதற்கு மிக அழகாக விருக்கிற தென்று பலர் பேசிக் கொண்டிரு ப்பதைக் கேட்டுக் கடற்கரைப் பக்கமாகச் சமையற் காரர்கள் திரும்பினுர்கள். தலையில் வேட்டிகளைக்கட் டிக்கொண்டும், மணிலாச் சுருட்டைச் சிலர் வாயில் வைத்துக் கொண்டும், மற்றுஞ் சிலர் புகையிலையோடு கூடிய தம்பலம் போட்டுக்கொண்டும், வாய்க்கு வந்த

பாட்டைச் சிலர் பாடிக் கொண்டும் கண்டபடியாகப் பேசி சிரித்துக்கொண்டு வந்தார்கள். இவர்களுடைய பேச்சு தூப்பாய்க் குழி ரங்கனதருக்குக் கேட்டது. "சரி, இப்போது மணி பதினொன்றிருக்கும் போலிருக்கிறது இவர்கள் துணையை விட்டால் தப்பிப்பிழைக்க முடியாது" என்றெண்ணி ரங்கன் வெளியே தலையை நீட்டினன். நீட்டும்போழுதே அவனுடைய உயிரில் பாதி போய்விட்டது. எங்கே சினப்பயல் நிற்கிருனே வென்ற எண்ணம் தலைமேலேறி நின்றது. எனினும் வேறு வழி யில்லாதபடியாலும் சமையற்காரர் இருபது பேருக்குமே விருப்பதாலும் ஒருவாறு தப்பிவிடலாமென்றெண்ணி வெளியே வந்தான். சினனைக் காணவில்லை. மெதுவாகச் சமையற்காரருகில் சென்று "என்னை வீட்டிலே கொண்டு போய் விடுங்கள்" என்று சொன்னன். இவனுடைய கோலத்தைக் கண்டு "உங்கள் செட்டியார் இன்று முழுமையும் தேடிக் கொண்டிருக்கிருர்களே; நீ எங்கேபோய்ச் சாக்கடையில் விழுந்துவிட்டு வருகிருய்" என்று கேட்டார்கள். "அதெல்லாம் பேசாமல் என்னைக்கொண்டு போய் வீட்டில் விடுங்கள்; சினன் அடிக்க வருகிருன்" என்று சாகிறவனைப் போல தீன சுரத்தில் சொன்னன். சரி யென்று எல்லாச் சமையற்காரனுமாக இவனை நடுவேவிட்டுச் சூழ்ந்து கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள். வீட்டிலிருந்த எல்லாருமாக ரங்கனுக்குச் சாப்பாடு போட்டு நடந்ததைக்கேட்டார்கள். ஒன்று விடாமல் சொன்னன். பகைகாரச்சினனுடைய பெயரைக் கேட்டவுடன் எல்லாரும்

நடுங்கிப் போனார்கள். சோணாசலச் செட்டியார் உட்கார்ந்து அழ ஆரம்பித்து விட்டார். அவரென்ன செய்வார்! பாவம்! நல்ல மனிதன்.

கெட்ட பிள்ளை பிறந்திருக்கிறதே யென்ற வருத்த மொருபுறம். இவனைக் கொன்று விட்டால் வேறென்ன செய்வ தென்று அழுதார். எல்லாரும் யோசித்து அடுத்த நாள் புறப்பட்ட ஊர்க் கப்பலில் ஏற்றி விடுவதென்று தீர்மானித்தார்கள். மறுநாள் ஒருவருக்கும் சொல்லாமல் பகல் பன்னிரண்டு மணிக்கு, கப்பல புறப்பட பத்து நிமிஷங்கட்கு முன்னதாக தூப்பாய்க் குழி ரங்கனை மூடு காடியில் வைத்துக் கொண்டு வந்து கப்பலி லேற்றினார்கள். எனினும் கப்பலில் சீனன் ஒளித்துக் கொண்டிருந்தா லென்ன செய்கிறதென்று யோசித்தார்கள். விஷயத்தைச் சொல்லி கப்பல் இன்ஸ்பெக்டர் வசம் ஒப்புவித்ததோடு நெடு நாளாக இருந்த சமயற்காரனையும் துணைக்கு அனுப்பினார்கள். கப்பலும் சரியாகப் பன்னிரண்டும் பத்துக்கு நாக பட்டினம் துறை முகத்தை நோக்கிப் புறப்பட்டது.

அத்தியாயம். கூ.

தனி வாழ்க்கை.

கப்பலானது குறித்த நாளில் நாகபட்டினம் துறை முகத்திற்கு வந்து சேர்ந்தது. நமது ரங்கன் கையில் சாமான்கள் அவ்வளவாகக் கொண்டு வர வில்லை யென்றாலும் நேரே விடுதிக்கு வர முடிய வில்லை. இவனோடு வந்த பலருடன் செல்ல வேண்டு

மென்று எண்ணினன். சீனனுடைய ஆட்கள் நாக பட்டினத்திலும் இருக்கலாமென்று பயந்தான். காலை எட்டு மணிக்கு வந்த பிரயாணிகளை மாலை ஆறு மணிக்குத்தான் துறை முகத்தினின்றும் வெளியே விட்டனர். அதன் பிறகு விடுதிக்குச் சென்று சிறிது நேரமிருந்து தலையை முழுகி உணவு கொண்டான் நமது ரங்கன். உடனே இரவு ரயிலில் புறப்பட்டு மூன்று நாள் ஊர் வந்து சேர்ந்தான். தாயாரான மெய்யம்மையாச்சி பிள்ளையைப் பார்த்துப் பார்த்து அழுதாள். "உடலெல்லாம் வற்றிப் போய் விட்டதே; என்ன செய்வேன்?" என்று சொல்லிச் சொல்லி அழுதாள். முதல் நாளே மேல மாகாணத்துக்கு ஆள அப்பி ரங்கன் மனைவியை அழைத்து வந்திருந்தார்கள். நமது ரங்கன் இப்போது முதல் தரமாகச் சலவை செய்யப்பட்ட கும்பகோணம் வேட்டி அரையில் கட்டியிருக்கிறான். கோயமுத்தூர் கெண்டைத் துப்பட்டாவை விசிறி மடி மடித்து மேலே போட்டிருக்கிறான். பேஷான மஸ்லின் சட்டை போட்டிருக்கிறான். கையிலே வைரக் காப்பு. மற்றொரு கையிலே வயிரச் சங்கிலியோடு கூடிய ரிஸ்ட் வாட்ச் கட்டியிருக்கிறான். அவன் கையிலுள்ள பத்து விரல்களில் ஆறு விரல்கள் மோதிரங்களைச் சுமந்து நின்றன. அவற்றுள் நான்கு வயிரமோதிரங்களென்று சொல்ல வேண்டியதில்லை. அவன் கழுத்தில் விளங்கிய கெவுடு மட்டும் க௩௦௦ ரூபா விலை மதிக்கப்பட்டது. இடையில் போட்டிருந்த அரைஞாண் முகப்பு ௫௦௦ வெள்ளிக்கு வாங்கியது. காலில் பூட்ஸ் கிச்சு

மூச்சென்று சத்தமிட்டு நின்றது. கையிலொரு சைகோன் பட்டுக்குடை. இப்பொழுது நமது ரங்கனுடைத் தவிர அவன் அணிந்திருந்த ஆடையாபரணங்கள் சுமார் இருபதாயிரம் ரூபா பெறுமென்று அந்த வூரிலுள்ள ரத்னப் பரிக்ஷை முத்துராமன் செட்டியார் மதிப்பிட்டிருந்தார். அவனுடைய மனைவி சீதையென்ற பெண் மிக நல்லவள். வீட்டு விஷயத்தைச் செவ்வையாகப் பார்த்து விட்டு விதியை யெண்ணி இருந்தாள். படவத்திர காளியாக விருக்கிற மாமியார் சொல்வதைக் கேட்டுக் கொண்டும், அவள் திட்டுவதை யெல்லாம் அர்ச்சனையாக எண்ணிக் கொண்டும், அவள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்து கொண்டு மிருந்தாள். ஜாதி வழக்கம் போல் புருஷன் தொலைக்குப் போனது முதல் பாட்டியார் வீட்டிலேயே இருந்து வந்தாள். இப்போது கணவன் வரப்போகிறுனென்று ஆள் வந்ததால் அங்கிருந்து புறப்பட்டு வந்திருக்கிருள். அப்பெண்ணிற்கு ஒரு நகையாவது சோணுசலச் செட்டியார் வீட்டிலிருந்து வாங்கிக் கொடுத்தது கிடையாது. எல்லாம் அவளுடைய தாயாரின் பணத்திலிருந்தே கொடுக்கப் பட்டது. இயல்பாகவே சிதை மிக்க அழகுள்ளவள். பொன்னிற மேனி. நாவற் பழம்போன்ற கண்ணின் கறுப்பு நிறமும், புருவ வொழுங்கும், மூக்கின் அழகும், கன்னத்திற் காட்டும் ரோஜாப் பூவினது ஒளியும், பவளப் பெட்டியில் முத்துச் சரத்தை வைத்ததை யொத்து விளங்கிய அழகிய பல் வரிசையும், அவற்றிற் கேற்ற பிற அங்க நலன்களும் பார்ப்ப

வரைக் கொள்ளை கொண்டன. நமது நாட்டில் பெண் மக்களின் தலைமயிர் செம்மறியாட்டு வால் நீளம் வளருவது கூடக் கஷ்டமாக இருக்கிறபோது இந்தப் பெண்ணுக்கு வாரி முடிக்கக் கூட முடியாதபடி வளர்ந்திருப்பதைப் பலர் எண்ணி யாச்சரியப் படுவார்கள். இப்பெண்ணின் அழகிய காதுகளில் இரண்டு வயிரக் கம்மல்கள் சந்திரனையும் சூரியனையும் ஒளி மழுங்கச் செய்து விடும்போ லிருந்தன. அழகான வயிர அட்டிகையும், ஒரு வயிரச் சங்கிலியும், மாணிக்கம் அழுத்திய சிறு தாலியும் கழுத்தில் விளங்கின. கைகளில் வயிரக் காப்பும், கால்களில் வெள்ளித்தண்டைகளும் காணப்பட்டன. அப்பொழுது மிகப் பேர் பெற்ற குறநாட்டுப் பட்டுக் கட்டியிருந்தாள். இந்த மயில் போன்ற பெண் இவ்வளவு நகை போட்டிருந்தாலும் இவளுடைய உடலின் அழகானது நகையின் விலை மதிப்பைக் கருதாதபடி செய்து கொண்டிருந்தது. என்றாலும் அவள் உடல் தாங்கி யிருந்த நகைகளின் மதிப்பு ரத்னப் பரீக்ஷை முத்துராமன் செட்டியாரின் மதிப்புப்படி ரூபா இருபதாயிர மிருக்கலாம். மாப்பிள்ளை ரங்கனுதனும் பெண் சீதையும் நகை போட்டிருந்ததில் ஒத்துப் போனார்களாயினும், கழுகும் அன்னப் பக்ஷியும் போலவே காணப்பட்டனர். உடல் நலமும் உயிர் நலமும் வேறுபாடடைந் திருந்தன. உலகில் உள்ள மக்கள் கலியாணஞ் செய்கிறோமென்று சொல்லி நல்லவர்களுடன் சனியனை பலரைச் சேர்த்துப் பூட்டிவைத்து விட்டுச் சாகிறவரை 'இதுதான் உன் தலை விதி' யென்று கூறி ஜாதிக்

கட்டுப் பாட்டால் அவர்கள் உயிரையும் உடலையும் வாட்டி விடுகிறார்கள். "பணப்பேயின் ஆட்டத்தின் வசப்பட்ட பெற்றார்செய்யும் கொடுமைகட்கு உட்பட வேண்டியதே தருமம்" என்று கூறுகிற நூல்களைப் பொசுக்கிவிட்டாலும் நல்லதென்றே நமது கதா நாயகர்களைப் பார்த்த ஒவ்வொருவரும் சொன்னார்கள். இப்போது ரங்கநாதனுக்கு வயது பன்னிரண்டு முடிந்து விட்டதென்பதையும், அவன் மனைவிக்கு வயது பதினாறுக்கு மேல் நடக்கிற தென்பதையும் மறந்துவிடக் கூடாது. இருவருங் கூடி வாழ்க்கையை நடத்த ஆரம்பித்து விட்டார்கள்.

இப்போது நமது ரங்கநாதனைக் குத்தகைக்கு விட்டாய் விட்டது. வருஷத்திற்கு மூன்று பொதி நெல்லும் முப்பது ரூபாவும் பெரிய வீட்டி லிருந்து ரங்கநாதன் மனைவி யிடம் கொடுத்து விடுவதென்றும் அவர்கள் குடும்பத்தைத் தனியாக நடத்துவ தென்றும் ஒப்பந்தமாகி விட்டது. இப்பொழுது ரங்கநாதனும் அவனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்ணுமாகக் குடித்தனம் நடத்த ஆரம்பித்தார்கள். இந்த மாதிரியாக சீதையையும் ரங்கநாதனையும் வேறு வைத்து விட்டபடியால் மெய்யம்மை ஆச்சி பாடு கொண்டாட்டமாயிருந்தது. இந்தப்பெண்ணை எப்படிக் கோளாறு சொல்லலா மென்று யோசனை செய்வதும் சண்டை பிடிப்பதுமாகவிருந்தாள். சிறிய குடும்பத்திற்கு வேண்டிய சாமான்கள் யாவும் மேல மாகாணத்தி லிருந்து வந்து கொண்டிருந்தன. நமது ரங்கநாதனுக்கு நாலு காலத்திற்குக் குறையாமல் நைவேத்தியம் நட

க்கும். காலையில் ஏதாவது நெய்யில் பலகாரம் செய்ய வேண்டும்; நடுப் பகலில் கொழுத்த சாப்பாடு, மாலை நாலு மணிக்குப் பலகாரம் காபி; இரவில் நல்ல சாப்பாடு; அதற்குமேல் வற்றக் காய்ச்சியப் பால் அரைப் படி. இவைகளைக் கணக்கிட்டால் மாதம் ஒன்றுக்கு ரூபா ஐம்பதுக்கு மேலாகிறது. இதற்கு மேல் விருந்தாளிகளுக்கும் போட வேண்டும். சில சமயங்களில் பெண்டாட்டியிடம் நமது ரங்கனுதன் கைமாற்றும் வாங்குவான். ஆனால் அதனை ஒரு போதும் திருப்பிக்கொடுப்பதே கிடையாது. அடிப்பானென்று பயந்து அந்தப் பெண் இவனைக் கேட்பது மில்லை. தினந்தோறும் எப்படியாவது நெய்யும் பாலுமாக ஊற்றி மொழுமொழென்று தேகம் வளரும்படிசெய்து சீக்கிரமாகப் பெரிய ஆளாகும்படி ரங்கனுதனை ஆக்கிவிட வேண்டு மென்பது சீதையின் விருப்பமாக விருந்தது. சட்டி முட்டி அரிசி பருப்பு முதலிய எல்லாப் பொருள்களும் மேலமாகாணத்தி லிருந்து தான் வந்துகொண்டிருந்தன. வீடு தவிர பாக்கி யாவும் சீதையின் சீதனப்பொருளே யாகும். இப்படியாகக்கொண்டுவந்து பொங்கிப் போடும்போது ஒவ்வொருநாளும் பலகாரம் செய்து மெய்யம்மை ஆச்சிக்குக் கொடுக்கவேண்டும். அதுவும் நிறையக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கிற பலகாரத்தில் எந்த விதமான குறைபாடு மிருக்கக் கூடாது. ஆகவே அந்தக் குடும்பத்தின் செலவு முழுமையுமே மேலமாகாணத்திலிருந்து வர வேண்டிய தாயிற்று. இப்படிப்போட்டழுது கொண்டிருக்கும்போதே மெய்யம்மையின்

வாயானது இந்தப் பெண்ணைப் பற்றிக் குறை கூறுவதையும் திட்டுவதையுமே தொழிலாகக் கொண்டது. அந்தப் புண்ணியவதி படுத்திய பாடுகளை விரிக்க இங்கே இடம் போதாது.

நமது கதா நாயகன் ரங்கனாதன் பெரிய பிள்ளையாகி விட்டான். அதாவது வயது பதின்மூன்றாகிவிட்டது. இப்போது அவனுக்கு எல்லாக் காரியங்களும் தெரியும். இவனுடைய பழய நேசரில் கிஷ்கிந்தாபுரி ராமன் ஒருவன் தான் இப்போது இவனோடு வந்து சேர்ந்திருந்தான். ராமனைப் பற்றி வாசகர்கட்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. முன்னர் கற்றிருந்த வித்தைகளோடு வண்டி யோட்டுவதிலும் நிபுணனாகி விட்டான். அவன் வந்து சேரவே நல்ல பந்தய மாடு வாங்கவேண்டு மென்று ரங்கனாதனுக்கு யோசனை சொன்னான். ரங்கனாதனும் யோசித்துப் பார்த்தான். பொழுது போவதே பெரிய கஷ்டமாக விருந்தது. ஏதாவதொரு தொழில் வேண்டு மல்லவா? என்ன செய்யலா மென்றிருந்த நமது கதா நாயகனுக்கு இந்த வார்த்தையானது மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது. உடனே இருவரும் மாடு பார்க்கப் புறப்பட்டார்கள்.

அத்தியாயம் எ.

வண்டியோட்டிய வைபவம்.

காலை ஐந்து மணி யிருக்கும். ரங்கன் எழுந்து வெளியில் வந்தான். அதே சமயத்தில் கிஷ்கிந்தாபுரி

அ

ராமனும் எதிரே வந்தான். இருவரும் பயணத்திற்குத் தயாரானார்கள். வீட்டு வாசலில் அழகான இரண்டு மாடுகள் பூட்டிய புருக்கூட்டு வண்டியொன்று வந்து நின்றது. அதன் முகவணையில் ஒரு மகமதியன் ஒரு அங்குல நீளம் தாறு வைத்த கொண்டைக் கம்பையும் மாடுகளின் பிடி கயிற்றையும் பிடித்துக் கொண்டிருந்தான். மாடிரண்டும் திமிறிக் கொண்டு நின்றன. உள்ளே சென்ற ரங்கன், மனைவி படுத்திருந்த விடத்திற்குச்சென்று தூங்குகிற அப்பெண்ணைக் காலால் ஒரு மிதி மிதித்தான். அவள் புரண்டு எழுந்துநின்றாள். "ஏன் பலகாரம் செய்யவில்லை; இப்பொழுது வெளியே போகப் போகிறேன்; மூன்று பேருக்குப் பலகாரம் கொண்டு வா" என்று சொல்லிக் கை சலிக்கும் வரை அடித்தான். அவள் திருப்பி யடித்திருந்தால் இவன் செத்தே தீர்ந்திருப்பான். புருஷனைப் பெண்டாட்டி அடிக்கப் படாதென்ற மரியாதைக்காகப் பொறுத்திருந்தாள். கண்ணீரை மட்டும் தாரை தாரையாக வடித்துக் கொண்டு அடுப்படிக்குச்சென்று பலகாரஞ் செய்வதற்குத் தீ மூட்டினாள். முதல் நாளே பலகாரம் வேண்டுமென்று சொல்லியிருந்தால் முன்னதாகவே எழுந்து செய்திருப்பாள். இவன் சொல்லவுமில்லை. வேறு அவ்வூரில் காபி கிளப் முதலிய இடங்களு மில்லை. ராமனைப் பார்த்துப் 'புறப்பட்டு போவோமா?' என்று கேட்டான். "பலகாரமில்லாமல் போனால் செத்துப் போக வேண்டியதுதான்" என்று ராமன் பதில்சொன்னான். அரைமணி நேரம் காத்திருந்தார்கள். பலகாரம் வந்தது. மூட்

டை கட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். வண்டி பற ந்து விட்டது. பத்து மைல் தூரத்திலுள்ள மங்கலம் பட்டி யென்ற சிறு கிராமத்தைக் கண்டார்கள். வண் டியும் நின்றது. கிழே இறங்கினார்கள். மங்கலம்பட்டி மிகச் சிறிய கிராமம். அந்த ஊரைச் சுற்றிப் பெருங் காடு சூழ்ந்திருந்தது. திருடர்களில்பெரிய கைகாரர் கள் எல்லோருமே அவ்வூரில்தான் வசித்து வந்தார் கள். கன்ன மிடுவதிலும் மாடு பிடிப்பதிலும் அவ்வூ ரார்தான் பேர் பெற்றிருந்தார்கள். வண்டியை விட்டு இறங்கி நாலடி தூரம் நடப்பதற் குள்ளாக கிருதா மீசைக்காரரான நான்கு பேர் எதிர் கொண்டழைத் தார்கள். ரங்கன் புதிய பேர்வழி யாதலால் சிறிது பின்னாடியே சென்றான். முன்னாலே சென்ற ராமன் "என்ன சேதி, கறுப்பண்ண னம்பலம்! நம்மள் சோணாசலச் செட்டியார் பிள்ளை வந்திருக்கிறார்கள்; தெரியுமா?" என்று புன்னகையோடு சொன்னான். "சின்னப் பிள்ளையாயிருக்கும்போது பார்த்தது; பின் னாலே வந்தால் போனால் தானே தெரியும்" என்று கறுப்பண்ணனம்பலம் சொன்னான். எல்லாருமாகச் சென்று அங்கிருந்த மூளைப் பொட்டல் திண்ணையில் உட்கார்ந்தார்கள். "சின்ன முதலாளி வந்திருக்கிறார் கள்; வெற்றிலை பாக்குக் கொண்டு வாடா!" என்று ஒருவனைப் பார்த்து அம்பலகாரர் சொல்லி விட்டு "ஏதாவது தாகத்துக்கு வேண்டுமா?" என்று ரங்க னைக் கேட்டார். "வேண்டாம்" என்று சிறிது சங் கோசத்துடன் ரங்கன் சொன்னான். "புதுப்பிடி! அப் படித்தா னிருக்கும். இனித்தானே பழக வேண்

டும்" என்று ராமன் சொன்னான். இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே இரண்டாள்கள் பனை நுங்கைக் கொண்டு வந்து போட்டுக் கொண்டிருந்தார்கள். இரண்டு பெயர் அரிவாளைக் கொண்டு சீவிச் சீவி வைத்தார்கள். ராமன் சுமார் நாற்பது நுங்கைத் தட்டி விட்டான். ரங்கனும் ஐந்தாறு சாப்பிட்டான். "மாடு பார்க்க வந்திருக்கிறோம்" என்று ராமன் சொன்னான். "எந்த மாட்டைப் பார்க்க வேண்டும்? இங்கே கொண்டு வரச் சொல்லிப் பார்க்கலாம். நமக்கென்ன மாட்டுக்குக் குறை?" என்று அம்பலகாரர் தடபுடலாகக் கூறினார். ராமன் எழுந்து அம்பலகாரர் கையைப் பிடித்தான். அவரும் எழுந்தார். கொஞ்ச தூரம் சென்று சிறிது ஏதோ ரகசியமாகப் பேசினான். "எல்லா மாட்டையும் ஓட்டிக் கொண்டு வாடா" என்று சொன்னார் அம்பலகாரக் கருப்பண்ணன். நமது ரங்கனுக்கு வேறு மாடுகளைப் பார்க்கவே இஷ்டமில்லை. தான் வந்த வண்டியில் பூட்டியிருந்த, ரிஷபம் போன்ற அழகான மயிலை இரண்டையுந்தான் வாங்க வேண்டுமென்று கருதி யிருந்தான். சிறிது நேரத்தில் ஐந்தாறு ஜோடி மாடுகள் கொண்டு வரப்பட்டன. ஒவ்வொரு மாடாக நடக்க விட்டுப் பார்த்தார்கள். அவற்றுள் ஒன்றைச் சுழிக் கெடுதலென்றும், மற்றொன்றை திருகு கொம்பென்றும், பிறிதொன்றைக் கால் சுத்தமில்லை யென்றும், வேறொன்றை ஜோடி ஏற்றத் தாழ்வா யிருக்கிறதென்றும், இணை யடிக்கிற தென்றும், கூட்டுக் காலென்றும், தாடி தொங்குகிற தென்றும், தலை யெடுப்புப்

போதா தென்றும், லம்பாடி ஆகா தென்றும், இள மாடாக வேண்டு மென்றும் குற்றஞ் சொல்லி எல்லா வற்றையும் கழித்து விட்டு ஒரு சிவலையையும் மயி லையையும் பொறுக்கி எடுத்தான் நமது கிஷ்கிந்தாபுரி ராமன். அந்த இரண்டு மாட்டையும் வண்டியில் பூட் டினார்கள்; ரங்கனாதனும் ஏறினான். இரண்டு மாட் டையும் படு விரட்டாக விரட்டினார்கள். ஒரு மாட்டு க்கு மூக்குக் கயிறு உருவிக் கொண்டது. கயிறந்த மாடு படுபோக்காகப் போகிறது. வண்டியை நிறுத்த முடிய வில்லை; மூன்று மயில் போன பிறகு தாமாக மாடுகள் நின்றன. வேண்டு மென்றே அந்த மாட்டு க்கு ராமனுடைய சூழ்ச்சியால் உருவாஞ் சுருக்குப் போடப்பட் டிருந்தது. வண்டி நின்றதும் ராமன் கீழே இறங்கினான். மறுபடியும் கயிற்றை மாட்டின் மூக்கிலே கோர்த்தான். வண்டியி லேறினான். ஐந்து நிமிஷத்தில் மூலைப் பொட்டல் வந்து சேர்ந்தார்கள். நடந்த சங்கதியை அம்பலகாரரிடத்தில் சொல்லவே அவர், "செத்தாலும் இந்தத் தோசியை வாங்கப்ப டாது; இது கெட்டது கழுதை; நான் வாங்கித் தரு கிறேன் முதல் தரமான ஜோடி. முதல் முதலில் கயி றந்த கழுதையைத் தொடப்படாது" என்று கண்டிப் பாகச் சொல்லி விட்டார். "நீங்கள் ஒரு நாளைக்கு உங்கள் முதலாளி வீட்டுக்கு வரப்படாதா?" என்று அம்பலகாரரைப் பார்த்து ராமன் கேட்டான். 'நாளை நின்று கட்டாயம் வருகிறேன்; முதலாளி வீட்டைப் பார்த்து ரெம்ப நாளாகி விட்டது' என்று அம்பல காரர் பதில் சொன்னார். உடனே வந்த வண்டியில்

ஏறினார்கள். வண்டி புறப்பட்டது. வண்டிக்கார சாய புலிடத்தில் 'மெதுவாக விடு' என்று சொன்னார்கள். கயிற்றை இழுத்துப் பிடித்து ஓட்ட முடியவில்லை. வண்டிக்காரன் வெகு கஷ்டப்பட்டுக் கொண்டே ஓட்டிச் சென்றான். பாதையில் எங்கும் குடங் கவிழாமல் வீடு வந்து சேர்ந்தார்கள். வண்டிக்காரன் வண்டியைக் கொண்டு போய் விட்டான். நமது ரங்கன் ராமனைப் பார்த்து, "ராமா! இந்த மாடு இரண்டும் என்ன விலையாகிறது, தெரியுமா?" என்றான்.

ராமன்:—நீ விடுகிற கயிறு எனக்குத் தெரியுமே! இந்த மாடு உனக்குப் பிடித்து விடுமென்று அப்பொழுதே நான் தெரிந்து கொண்டு விட்டேன். துலுக்கன் உயிரும் பிராணனுமாக வைத்திருக்கிறான். அதிலே ஆசை வைத்து விட்டாயா?

ரங்கன்:—இல்லையடா. அது நல்ல போக்குப் போகுது. தவிர பார்வையாகவு மிருக்கிறது. தலையெடுப்பு என்ன முறுக்கு! எப்படியும் சொல்லி அதைத்தானடா வாங்க வேணும்.

ராமன்:—அவனைப்போய் யார் கேட்கிறது? அவன் பொல்லாத போக்கிறி. அந்த மாட்டைப் பிள்ளை மாதிரி வளர்க்கிறான். நம்மாலே முடியாதப்பா இந்தவேலை.

ரங்கன்:—அப்படியானால் மங்கலம்பட்டி அம்பலகாரரை விட்டுக் கேட்கச் சொன்னால் கட்டாயம் ஒத்துக் கொள்வான். அப்போது நீயுங் கூட இருந்தால் தட்டி விடலாம். பணத்தைக் கூடக் குறையக் கொடுத்தாலும் பாதகமில்லை. நல்லமாடு கிடைக்காது.

ராமன்:—நீ ரூபாயை மாத்திரம் நீட்டினல் நடக்கு மென்பதை விட்டு விடு, தம்பி! அதிலே மசியாது; அம்பலகாரர் வந்தாலும் சரிதான். அதற்கு மேல் பட்ட ஆள் வந்தாலுஞ் சரிதான். பிச்சை சங்கதி உனக்குத் தெரியாது! வாங்குகிற சங்கதி யிருக்க ட்டும். அந்த மாட்டை யார் கயிறு பிடிக்கிறது? அதற்கல்லவா முன்னலே வழி பார்கக வேண்டும்? பிச்சை கையிலே கயிறு இருந்தால்தான், தம்பி, வண்டிக்குள் ஆள் இருக்கலாம், தெரியுமா?

ரங்கன்:—இதென்னடா சனியன். பிச்சை வருவான வண்டியோட்ட? துலுக்கனை யெப்படி வேலைக்கு வைத்துக் கொள்ளுகிறது? என் தாயார் வேறே சண்டைக்கு வருவாளே! என்னடா சங்கடம்!

ராமன்:—சரி! சரி! உன் சங்கதி இவ்வளவுதான? தாயாசா! தாயாருக்குப் பயந்தால் வண்டி மாட் டை வாங்கி யென்ன செய்கிறது? அதெல்லாம் மறந்து விடு தம்பி. ஆண் பிள்ளைகள் காரியத்தில் பெண் பிள்ளைகள் வரப்படாதே! அதை யோசித் துக் கொண்டு மாட்டுச் சங்கதியைப் பேசு. துலுக் கன் என்றல் என்ன? அவன் பாடு மாட்டைப் பா ர்க்கிறன். வண்டியை யோட்டுகிறன். இதற்கா இவ்வளவு யோசனை! மாடு தச ஒத்துக் கொள்ளு கிறதோ இல்லையோ, அதுவேசந்தேகம். அப்பால் அவன் வண்டி யோட்ட உன்னிடத்தில் லேசில் வருவா னென்று நினைத்திருக்கிறய்போ லிருக்கி றது. கிடைத்தால் உனக்கு அதிஷ்டந்தான்!

ரங்கனுக்கு எப்படியாவது இந்த மாடு இரண்டை யும் வாங்கிவிட வேண்டுமென்ற தாகம் அதிகப்பட் டுவிட்டது. ராமனும் தான் செய்த சூழ்ச்சி யாவும் பலித்து விட்டதென்று உள்ளுக்குள்ளே சந்தோஷ மாக விருந்தான். அடுத்த நாள் பொழுது போவது பெருங் கஷ்டமாக விருந்தது. அன்று முழுமையும் பிச்சை ராவுத்தனுடைய மாடுகளின் பெருமையை யும், அது பந்தயங் கெலித்த விதத்தையும், அது கால் போடுகிற விமரிசையையும், களவாணி வரும் போது தப்பிச் சென்றதையும் பற்றிப் புளுகித் தள் ளினன் நமது கிஷ்கிந்தாபுரி. இவற்றைக் கேட்டுக் கேட்டுக் கிறுக்குப் பிடித்தவனைப் போலாகிவிட்டான் நமது ரங்கன். மறுநாளும் விடிந்தது; காலைப்பொழு தும் சென்றது. பகல் மூன்று மணியிருக்கலாம். ரங் கன் வீட்டு முகப்பில் மணிபோட்ட மாடுகள் பூட்டிய வண்டி யொன்று வந்து நின்றது. ஒரு மனிதன் உள் ளிருந்து இறங்கி வாயிற்படியில் ஏறினர். அவருக்கு சுமார் நாற்பது வயதிருக்கலாம். நல்ல நாவற்பழக் கறுப்பு. அதைவிடக் கறுப்பான மீசையானது அடர் ந்து கொழுத்து நிமிர்ந்து பார்ப்பவரைப் பயக்கடலி லாழ்த்தும்படி விறைப்பாக முறுக்கி விடப்பட்டிருந் தது. கறுத்த விழிகளும், நெஞ்சில் அடர்த்தியான உரோமக்காடும், மிக வெண்மையான பற்களும், திணிந்த கட்டுறுதி யுள்ள உடலும், உடலில் பல பா கங்களில் வெட்டுக் காயத்தின் தழும்புகளும் உடை யவராகக் காணப்பட்டார். அரையில் ஒரு மல் பீசு வேட்டியும், வலக் கையில் ஒரு பட்டைக் காப்பும்,

கைவிரலொன்றில் ஒரு வயிரமோதிரமும், இடையில் ஒரு பெரிய வெள்ளி அரைஞாணும் கழுத்தில் ஒரு பெரிய தங்கச் சங்கிலிக் கெவுடும் காதுகளில் ஐந்து ஐந்து தொங்கற் கடுக்கன்களும் அணிந்திருந்தார். அவருடைய உடலில் புனித வெண்ணீறு குழைத்து இடப்பெற்றுப் பேரழகு செய்து கொண்டிருந்தது. காலில் ஒரு பழய சிங்கப்பூர் மிதியடியைப் போட்டுக் கொண்டு உள்ளே சென்ருர். "வாருங்கள்! வாருங்கள்! சொன்னபடி தவருமல் வந்து விட்டீர்களே! ரெம்ப சந்தோஷம்!" என்று ராமனும் ரங்கனுமாகப் பெரிய வரவேற்புப் பத்திரம் படித்தார்கள். பலகாரம் காபி தயாராக விருந்தன. மூவரும் சாப்பிட்டார்கள். வெற்றிலைப் பெட்டியைக் கொண்டு வந்து அம்பலகாரருக்கு முன்னல் ராமன் வைத்தான். அம்பலகாரர் ஒரு பாக்கை வாயில் போட்டுக் கொண்டு, "என்ன சேதி! வேறு மாடுகள் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

ராமன்:—உங்கள் முதலாளியின் கண் சரியான இடத்தில் விழுந்து விட்டது. முடிக்க வேண்டிய பொறுப்பு உங்களிடத்தில்தான் இருக்கிறது. எப்படியாவது முடித்து விடுங்கள். செட்டியார் கிறுக்குப் பிடித்தவர் போலிருக்கிருர்.

அம்பலகாரர்:—சரி! சரி! துலுக்கனுக்கு அதிட்டந் தான். அந்தப் பயலுக்கு வேணும்! நான் எத்தனை முறை கேட்டேன். கிடையாதென்று தட்டி விட்டான். இனி என்ன செய்கிறது? மாடென்ருல் அதுதான் மாடு. முதலாளியெப்படியோ வென்று

நினைத்தேன். புலிக்குப் பிறந்து நக மில்லாமல் போகுமா? ராஜாங்கத்துக்கு இந்த மாடுதான் சரி. மற்ற மாடெல்லாம் சும்மாடுதான்.

ராமன்:—என்ன அம்பலம்! பாட்டெல்லாம் பாடுகிறீர்களே! எப்படி? "மற்ற மாடெல்லாம் சும்மாடுதான்" பலே! ஏது கவிராய ராகிவிட்டாற் போலிருக்கிறது.

ரங்கன்:—என்ன! அம்பலம்!! நீங்கள் கேட்டதற்கு மா கிடையா தென்று சொல்லி விட்டான்? ஒரு வேளை தரமாட்டானோ?

அம்பலகாரர்:—கடுமைதான். இருந்தாலும் இவடத்திலே கருநுகிறபோது அதை வாங்காமல் நாங்கள் அம்பலகார ரென்றிருந் தென்ன பிரயோசனம்? எப்படியாவது வாங்கி விடுவோம். யோசிக்க வேண்டாம். எல்லாம்......அதிலேதான் இருக்கிறது.

ராமன்:—அடடா! அதைப்பற்றித்தான் கவலையில்லையே? இதொரு தாக்கலென்று சொல்லுகிறீர்களே! அது கிடக்கிறது. ஆயிரம் ஐநூறு என்ன செய்யும்? வேலையைச் சீக்கிரமாக முடிக்கப் பாருங்கள்.

இவ்வளவோடு ராமனும் அம்பலகாரருமாகப் புறப்பட்டார்கள். அந்தச் செல்வராஜபுரத்தின் வடக்குக் கடைசியிலுள்ள ஊருணிக்கரையி லிருந்த அரசமரத்தின் குறட்டின் மேல் இருவரு மிருந்து கொண்டு பிச்சை ராவுத்தனுக்கு ஆளனுப்பினார்கள். அவன் வந்து பக்கத்தில் நின்றான்.

அம்பலகாரர்:—உன்பாடு அதிட்டந்தான்! செட்டியார் தலையில் கட்ட வழி பார்த்து விட்டாய்! என்னடா விலை வேணும்?

பிச்சை:—அவடத்திலே சொல்கிறது சரி. நானும் ஏழை. இதுதான் கதியாக இருக்கிறேன். வேறு பிழைப்புமில்லை. எங்கள் சாதியாருக்கும் வேண்டாதவனாகப் போய் விட்டேன். காப்பாற்ற வேணும். நானூறுக்கு வாங்கினது. புலிக் குளத்து மாட்டை மாற்றும் போது ஐம்பது மேல் விலை கொடுத்தேன்.

அம்பலகாரர்:—(ராமனை நோக்கி) பஞ்சைப் பாட்டுப் பாடுகிறான். ஐநூறு தொலைக்க வேண்டியதுதான். இல்லையா?

ராமன்.—அடே! பிச்சை! ஐநூறு ரூபா உனக்கு. மாதம் ஒன்றுக்குச் சம்பளம் பதினைந்து ரூபா. இதற்கு மேலே வருவதெல்லாம் தெரியுமா?

பிச்சை:—சரி; உத்தரவு. எல்லாம் அம்பலகாரரைத் தான் நம்பி யிருக்கிறேன்.

அம்பலகாரர்:—வாய் நம்பிக்கையில் பலனில்லை. நல்ல இடங் கிடைத்திருக்கிறது. ஒழுங்காக இருந்தால் பிழைக்கலாம். பார்த்துக் கொள். ராமன் செட்டியாரை லேசாக நினையாதே! உஷார்!

அம்பலகாரரும் ராமனுமாக ரங்கன் வீட்டுக்கு வந்தார்கள். வரவை யெதிர்பார்த் திருந்த ரங்கன் "என்ன சேதி? காயா, பழமா?" என்றான்.

அம்பலகாரர்:—(புன்சிரிப்போடு) அரைப் பழமாக விருக்கிறது. இனி நான் வேண்டியதில்லை. ராம.

வே முடித்து விடுவார்கள். எல்லாம் அதில்தான் இருக்கிறது. ஏழைப் பயல். ஆசைப்படுகிறான். அவனுக்கே தொளாயிர ரூபா அடக்கமாகிறதாம். ராமனுக்குக் கூடத் தெரியுமென்று ஒத்துக் கொள்கிறார்கள். என்னவோ கொஞ்சம் முன்பின்னாக முடித்து விடுங்கள். நல்ல ஜோடி. அலைய வேண்டாம். இப்படி ஜெண்டையாக அமையாது.

ராமன்:—என்னத்துக்கு மறைப்பானேன்? சரியாக ஒரு பிள்ளையார் வைக்காமல் முடியாது. அதற்குக் குறைந்தால் நடவாது. அதற்கும் கட்டிக் கொண்டுதான் அழ வேண்டும். ஆமென்றால், நாளை வெள்ளிக் கிழமை; தரமாட்டான். இப்பொழுதே கொண்டுவர வேண்டியதுதான். என்ன சேதி?

ரங்கநாதன் செட்டியார் யோசித்துப் பார்த்தார். அம்பலகாரரும் வந்து இவ்வளவு தூரம் பிரயாசைப் பட்டுப் பேசின பிறகு மாட்டேனென்பது மரியாதையாக விராதென்ற எண்ணம் வலுத்தது. மாட்டிவிடத்தும் மோகம் அதிகமாகவிருந்தது. அறையினுள்ளே சென்றார் செட்டியார். இரும்புப் பெட்டியைத் திறந்தார். பச்சை நோட்டுகளாக அன்றுதான் பினாங்கு உண்டியல் மாற்றி வைக்கப் பட்டிருந்தன. எடுத்தார். கொடுத்தார் கிஷ்கிந்தாபுரி கையில். அதை ராமன் மடியில் வைத்துக் கொண்டான். அம்பலகாரரை வண்டியிலேற்றி அனுப்பினார்கள். கடைசியாக வண்டி புறப்படும்போது, “நாளை மரியாதையை அனுப்புகிறேன்” என்று ராமன் சொன்னான். ரங்கநாதன் செட்டியாருக்கு விளங்கவில்லை. “வண்டி மாடு

பேசி முடித்து விட்டதற்குத்தாகு கொடுக்கவேண்டு மல்லவா? கொடுக்கா விட்டால் மதிப்பாக விராது; அதைத்தான் சொன்னேன்" என்றான் ராமன். எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று செட்டியார் கேட்டார். "அதென்ன? ஒரு பச்சை நோட்டுக் கொடுத்தால் போதும்" என்று கிஷ்கிந்தாபுரி சொல்லிக் கொண்டே போய் மாடுகளைப் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தான். இப்போது மாடுகள் அவ்வளவு முறுக்காக விருக்கவில்லை. "ராமா! இதென்னடா அழகாயில்லை. முந்தா நாள் லட்சணமாக விருந்ததே" என்றார் செட்டியார். உள்ளபடியே அழகாகத் தானில்லை. பிடி கயிறு, மூக்குக் கயிறு, வெண்டயம், அரசிலை முதலிய அலங்காரங்கள் பிரிக்கப் பட்டு விட்டன. "நாளை அழகு படுத்தி விடுவோம்." என்று ராமன் சொன்னான். மறுநாள் பிச்சையும் வந்து சேர்ந்தான். சம்பளம் முப்பது தரவேண்டு மென்று பிச்சை கேட்டான். செட்டியார் அதிகமா யிருக்கிற தென்றார். "இவனில்லாவிட்டால் மாடு வாங்கியும் பயனில்லை. மூன்று நாளில் கழுவாக் கரைந்து விடும்" என்றான் ராமன். கடைசியில் இருபத்தைந் தென்று முடிவு செய்தார்கள். தங்க அரசிலைகளும் பட்டு நூலில் பின்னப்பட்ட மூக்குக் கயிறு, மண்டைக் கயிறு, பிடிகயிறுகளும் வெள்ளி வெண்டயமும் கழுத்திற்குச் சங்கிலிகளும் தயார் செய்யப் பட்டன. உள்ளபடியாகவே அந்த மாடுகளின் அழகை வருணிப்பது முடியாத காரியம்.

வண்டிமாடு வாங்கினதி லிருந்து ஆள் கூட்டத்திற்குக் குறைவில்லை. எப்போதும் ராமன் இங்கே

தான் இருக்கை. அம்பலகாரரும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார். அடிக்கடி பந்தயத்திற் கும் போவதுண்டு. அநேகமாகப் பந்தயத்தில் இந்த ஜோடிதான் வெற்றிமாலே சூடி வருவது வழக்கம். வெற்றிபெற்று வந்தவுடன் நூற்றுக் கணக்கான ஜன ங்கள் கூடுவார்கள். எல்லாருக்கும் பலகார விருந்து நடக்கும். பெரும்பாலாக சாதாரண நாட்களில் கிஷ் ங்கிதாபுரி ராமன் தான் வண்டி யோட்டுவான். முக்கி யமான சமயங்களில் பிச்சை ராவுத்தர் கயிறு பிடிப் பது வழக்கம். இப்படிச் சில மாதங்கள் சென்றன. ரங் கனுதன் தாயார் இந்த நாலைந்து மாதங்களிலும் வீட் டிலில்லே. இருந்தால்சிறிது சங்கடமாயிருந்திருக்கும். அவள் காசி யாத்திரை சென் றிருந்தாள். யாத்திரை முடிந்து வந்து வீட்டி லுள்ளே நுழையும்போது அவள் பயந்து போனுள். முகப்பில் வெற்றிலே யெச் சில் பார்க்க முடியாதபடி துப்பிக் கிடந்ததைக் கண் டதும் மோசம் வந்துவிட்டதென்றெண்ணினுள். உள் ளே சென்ருள். மருமக ளிருந்தாள். "இதென்ன! வீடா? சாடா? கேள்வி முறையில்லாமல் இப்படி ஆட் டம் போட வேண்டிய காரண மென்ன?" என்று உறுமினுள். "எல்லாம் உங்கள் மகன் செய்கிற அநி யாயந்தான். நானென்ன செய்வேன். என்னல் அடி தாங்க முடியாது" என்று மெல்லிய குரலில் சீதை சொன்னுள். கண்ணி லிருந்து தாரை தாரையாக நீர் கொட்டியது. மெய்யம்மை யாச்சி பார்த்தாள். இனி அந்தப்பெண்ணின் உடலில் எலும்புந் தோலுந்தானி ருந்தன. உடலெல்லாம் காயப்பட்டிருந்தது. சரி, வர

ட்டும் பயலென்று முனங்கிக் கொண்டிருந்தாள். பிள்ளையாண்டான் வந்தான். 'அடே! மூதேவி! இதென்னவென்று நினைத்தாய்! வீட்டை நாசம் பண்ணிவிட்டாயே! ஊரிலிருக்கிற காலிப் பயல்களையெல்லாம் வரச் சொல்லிப் பணத்தை எல்லாந்தொலைக்கிறயே! நாயே! வெளியே போ!' என்று பழய அதிகாரத் தொனியில் சொன்னள். பழய ரங்கனு? இப்போது ரங்கனுதன் செட்டியாராய் விட்ட கதை அவளுக்குத் தெரியாது. நமது ராமன் சரியாகத் தாயார் செய்து விட்டானல்லவா? தாயார் சொன்ன சேதியைக் கேட்டார் ரங்காநாதர். கோபம் பொங்கி விட்டது. என்னையா அடா பிடா என்று பேசுகிருய்! செருப்பினலே அடிப்பேன். ஒழுங்காயிருந்தால் காலந் தள்ளலாம். இல்லாவிட்டால் ஒரு ராத்திரியிலேயே சரிக்கட்டி விடுவேன், உஷார் !'' என்று சொன்னன். இருவருக்கும் பலமான சண்டை நடந்தது. இரண்டு கையும் இனைத்தவையல்ல. பக்கத்து வீட்டிலுள்ளவர் வந்து சமாதானம் செய்தார்கள். நடவடிக்கையெல்லாம் தன் பெண்டாட்டிதான் சொல்லிக் கொடுத்து விட்டாள் என்று ரங்கனுதன் நினைத்திருந்தான். நாட்கள் கழிந்தன. ஒவ்வொரு நாளும் இருபது ஆட்கட்குக் குறையாமல் பலகாரம் தின்ன வந்து உட்காருவார்கள். சில நாட்களில் நாலைந்து பேரோடும் நின்று விடுவதுண்டு. எத்தனை பேர் வந்தாலும் சரி; எண்ணி இலை போடவேண்டும். அவன் மனைவி என்ன செய்வாள்? எத்தனை பேர் வருவார்களென்று முன்னல் சொல்வதுமில்லை. வந்திருப்பவருக் கெல்லாம் கொண்டு வா பல

காரம் என்றால் என்ன செய்ய முடியும்? கொஞ்சங் குறைந்தாலும் அடித்துக் கொன்று விடுவான். இதற்காக இருபது பேருக்குத் தினந்தோறும் பலகாரஞ் செய்வாள். அப்படி யிருக்கும் போதும் சில நாட்களில் அதிகமாக ஆட்கள் வந்து விடுவார்கள். அன்று அந்தப் பெண்ணின் கதி அதோகதிதான். இப்படியேதான் சாப்பாட்டு நேரத்திலும். வர வர அடியும் உதையும் அதிகரித்து விட்டன. மேல மாகாணத்திலிருந்து இவ்வளவுக்கும் சரக்கு தயாரித் தனுப்ப முடியவில்லை. இவனும் வீட்டுச் செலவுக்குக் கொடுப்பதாகவில்லை. மேல மாகாணத்தி லிருந்து வருகிற வரும்படி குறையஆரம்பித்தது. செட்டியாரின் ஆடம்பரம் வர வர வலுத்தது. பெண் என்ன செய்யும்? வழியில்லை. சாப்பாடு முட்டுப்பட்டது. ஒரு நாள் 'நெய்யில் பணியாரம் சுடு இருபது பேருக்கு' என்று உத்திரவு போட்டான். வீட்டில் நெய்யில்லை. வாங்குவதற்கு ரூபாயு மில்லை. என்ன செய்வதென்று அந்தப் பெண்ணுக்குத் தெரியாமல் விழித்தாள். இதனைக் கிஷ்கிந்தாபுரி ராமன் கண்டான். உடனே ரங்கனுதனிருக்கு மிடத்திற்குச் சென்று அங்கிருந்தவர்களிடம் "இனி நம்மள் சம்பம் பலிக்காது; செட்டியாரவர்களும் அடங்க வேண்டியதுதான்" என்று சொன்னான். இது தாங்குமா செல்வக் குழந்தைக்கு! "அதென்னடா, அப்படிச் சொன்னாய்! சிங்கத்துக்குப் பங்கமேதடா!" என்று உறுமினார் ரங்கனுதர். "அடுப்படிக்குப்போ" என்றான் ராமன். அடுப்படிக்குச் சென்று, சொன்னபடி பலகாரம் செய்யாமல்

பெண்டாட்டி அழுது கொண்டு இருப்பதைக் கண்டான். வந்து விட்டது கோபம். வேகமாகச் சென்று தாறுக் கம்பை எடுத்து வந்து முன்னும் பின்னுமாக ஐந்தாறு குத்துக் குத்திவிட்டான். ஐயோ! அந்தப் பெண்ணின் கதி யென்னே! தாங்க முடியாமல் கீழே விழுந்து விட்டது; துடித்தது; மயங்கி மூர்ச்சையாகி விட்டது. குத்திய விடமெல்லாம் ரத்தம் கொப்புளிக்கிறது. அந்தத் தாறுக்கம்பில் விஷந் தோய்ந்திருந்தபடியால் கடுப்புப் பொறுக்க முடியவில்லை. அங்கிருந்த கன்னெஞ்சர்கள் இதைப் பார்த்துக் கொண்டிருந்தும் வந்துவிலக்கவில்லை; அனுதாபங்காட்டவுமில்லை. அவர்கள்பாடு வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தப் பெண் சிறிது நேரங் கழித்து எழுந்தது. இனி இங்கிருந்தால் சகிக்க முடியாதென் றெண்ணிப் பின்கதவின் வழியாகச் சென்று மேல மாகாணம் போய்ச் சேர்ந்தது. மறு நாள் மங்கலம்பட்டி அம்பலகாரர் மாறலாக ஒரு சமயற்காரனை வரவழைத்தான் ராமன். அவனிருந்து மடைப்பள்ளி காரியங்களைப் பார்த்துவந்தான். இப்படிப் பல மாதங்கள் கழிந்தன. செலவுசெய்கிற பணத்திற்குக் கணக்கே யில்லை. பிச்சை ராவுத்தனும் அம்பலகாரரும் கிஷ்கிந்தாபுரி ராமனும் இவனைப் பிடுங்கித் தின்னும் கழுகுகளாக விளங்கினார்கள். சுற்றிப் பல காகங்களு மிருந்தன. வார மொன்றுக்கு வெற்றிலை பாக்குப் புகையிலை சுருட்டு மட்டும் சுமார் நூறு ரூபாய்க்குச்செலவாயின வென்றால், மற்ற கணக்கைப் பற்றி வாசகர்களே உணர்ந்து கொள்ள வேண்டும்.

மாதந் தோறும் கார்த்திகை யன்று குன்றக் குடிக்குப் போவது வழக்கம். அப்படியே வண்டி கட்டப் பட்டது. பிச்சை ராவுத்தர் முக்கணையிலிருந் தார். கையில் வெள்ளிப் பூண் பிடித்த தாருக்கம்பு தாங்கி யிருந்தார். தலையில் அழகான கோயம்புத்தூர் துப்பட்டாவை கிருக்கிக் கட்டாகக் கட்டி யிருந்தார். உள்ளே ராம. வும், ரெ. அவர்களும் இருந்தார்கள். கடுமையான திராட் பிடித்து வண்டி போய்க் கொண் டிருந்தது. பிச்சை ராவுத்தருக்குத் தாகம் அதிகமா கவிருந்தது. "என்ன சேதி, ராம! ஒன்று கொடுங் கள்" என்ருன் பிச்சை. உடனே ராமன் ஒரு போத் தலை நீட்டினுன். அந்தப் போத்தலின் மேல் George IV Whisky என்று போட்டிருந்தது. அதனை வாங்கி வண்டிச் சக்கரத்தில் தலையைத் தட்டி உடை த்து விட்டு அதன் மேல் ஒரு கைக் குட்டையைப் போட்டு மூடித் தலை கிழாகத் திருப்பினுன் பிச்சை ராவுத்தன். அந்தப் போத்தலினுள்ளே யிருந்தது பூ ராவும் பிச்சை ராவுத்தனுடைய வயிற்றி னுள்ளே போய்விட்டது. இந்த சமயத்தில் பின் வண்டிக் கார னெருவன் அட்டத்திலே ஓதுக்கினுன். பிச்சை ரா வுத்தனல்லவா நமது வண்டிக்காரன்! விடுவானு? இ ரண்டு ஊன்று ஊன்றினுன். ஒரே குத்த வைப்புத் தான்! எவ்வி முன்னுலே விழுந்தது! "என்ன கியா லப்! சக்கைப் போடு போட்டாய்! பலே பிச்சை! நீ தான் வண்டிக்காரன்! அச்சா! அச்சா!" என் று சொல்லி பிச்சையை ராமன் தட்டிக் கொடுத் தான். இவ்வளவுதான் நடந்தது. ஒரு பெரும் பள்ள

த்தில் இரண்டு நேயர்கள் கிடந்ததைத் தோற்றுப் போன வண்டிக்காரர்கள் கண்டார்கள். கொஞ்ச தூர த்தில் ரங்கனாதன் செட்டியாருடைய வண்டி உருளை யொன்று தனியாக ஓடிக்கொண் டிருந்தது. வண்டி யை ஒரு சக்கரத்தோடு மாடுகள் இழுத்துக் கொண் டு ஓடின. பிச்சை ராவுத்தர் போனவிடந் தெரிய வில்லை. பள்ளத்தில் கிடந்த இருவரில் ராமனுக்குக் காயம் அதிகமில்லை. ரங்கனாதன் செட்டியாருடைய முழங்கால் புரண்டு போய் விட்டது. மெதுவாகத் தூக்கினார்கள். தோற்றுப் போன ஒருவருடைய வண்டியிலேயே போட்டு வீட்டுக்கு அனுப்பி விட் டார்கள். முடமெடுத்து வைத்துக் கட்டப்பட் டிருக் கிறது.

அத்தியாயம். ௮.

செட்டியார் சிவபத மடைந்தார்.

ரங்கனாதன் செய்த அடம் பொறுக்க முடிய வில்லை. மெய்யம்மை ஆச்சியின் சம்பம் மகனிடத் தில் பலிக்க வில்லை. ஆகவே தன் கணவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதில் பிள்ளையாண்டான் நிலை மை மேற்போய் விட்டதென்றும், தாமதித்தால் வீடு வாசல் இருப்பதும் போய் விடுமென்றும், உடனே புறப்பட்டு வரவேண்டு மென்றும் எழுதப்பட்டன. உள்ளபடியே சோனாசலச் செட்டியார் சென்று வரு ஷம் மூன்றாகி விட்டது. மேலும் உடம்புக்கு முடி யாமல் அடிக்கடி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

இந்தக் கடிதங் கண்டதும் அவருக்கு வருத்தம் மே விட்டு விட்டது. எப்போதுமே ரங்கனிடத்தில் நம் பிக்கை கிடையாது. மிக வருந்தினர். பக்கத்திலிருந் தவர்களிடம் யோசனை கேட்டார். போதிய வயது வரவில்லை யாதலால் வீடு வாசல்களை ஒன்றுஞ் செய்ய முடியாது என்று முடிவு கட்டினார்கள். ஆகவே பதி லாள் வந்தவுடன் புறப்படுவ தென்று தீர்மானித்து விட்டார். அப்படியே பதிலும் எழுதினர். ரங்கனாத னுக்கும் கடிதமெழுதி, அதில் வீட்டுக் காரியங்களை ஒழுங்காகப் பார்த்து வரும்படியும், குடும்பத்தில் ஒற்றுமையாக விருக்கும்படியும், நல்லவர்களுடன் நேசம் வைத்துக் கொள்ளும்படியும் தெரிவித்திருந் தார். ரங்கனாதனுக்குக் காயம் மிகப் பெரிதாதலால் கால் ஊன்றுதற்கே மாதமிரண்டாகி விட்டது. ஆட் கள் வருவதும் சற்று குறைவாகவே யிருந்தது. இந் தக் காலத்தில் ரங்கனாதன் சரித்திரத்தில் ஒன்றும் விசேஷம் நிகழ வில்லை. மூன்று மாதங்கள் சென் றன. சோனாசலச் செட்டியாரும் மிகுந்த வியாதி யோடு வந்து சேர்ந்தார். வந்து நுழைந்தவுடன் மெ ய்யம்மையாச்சி சென்று, 'ஐயோ, அப்பா' வென்று அழுதாள். வேண்டியவரை வார்த்தைகளைச் சொல்லி ச்சோனாசலச் செட்டியார் சமாதானப் படுத்தினர். ரங்கனாதர் சிறிது அடங்கி விட்டார். ராமன் அந்தப் பக்கத்தில் தலை காட்டுவதில்லை. அம்பலகாரர் மட் டும் ஏகதேசத்தில் வருவார். சோனாசலச் செட்டி யார் அதிகமான காலத்தை வெளி நாடுகளிலேயே தள்ளி வந்தவராதலாலும் அகட விகட சாமர்த்திய

செட்டியார் சிவபத மடைந்தார். என

மில்லாதபடியாலும் அம்பலகாரர் முதலியோர் சிநே கத்தைப் பெற்றிருக்கவில்லை. என்றாலும் செல்வராஜ புரத்தில் களவு முதலியன நடை பெற்றால் மங்கலம் பட்டி அம்பலகாரரை அழைத்து வந்து விசாரணை நடத்துவது வழக்கம். அந்தக் காலங்களில் நமது சோணாசலச் செட்டியாரும் உடனிருப்பார். இவர் நல்ல மனித னென்பதனாலும், பணக்கார ரென்பத னாலும் அதிக மதிப்பிருந்தது. அம்பலகாரரும் மதி ப்பாகவே எண்ணியிருந்தார். ரங்கன் அம்பலகாரரு டன் நேசமாயிருப்பதில் மட்டும் சோணாசலச் செட் டியாருக்குச் சந்தோஷமாக விருந்ததன்றி மற்ற விஷ யங்கள் எதுவும் பிடிக்கவில்லை. பிச்சை ராவுத்தனைச் சோணாசலச் செட்டியார் நீக்கி விட்டு வேறொரு ஆள் சேர்த்து விட்டார். ஒரு மாதம் சென்றது. நிலைமை முழுமையும் தெரிந்து கொண்டார். இரும்புப்பெட் டியிலிருந்த இருபத்தையாயிரம் ரூபா நகையும் அங் கில்லை. ரங்கனுதனைக் கேட்டதற்கு ஒன்றும் பதிலி ல்லை. எங்கும் ஒன்றுக்குப் பத்தாக எழுதிக் கொடு த்து வேறெ வாங்கி யிருப்பதாகவும் தெரிந்தது. புட வைக் கடை, பலசாக்குக் கடை முதலிய கடைகாரர் கள் ஆயிரக் கணக்காகப் பாக்கி யெழுதிக் கொண்டு வந்து கேட்டார்கள். இவைகளைப் பார்த்துங் கேட் டும் சோணாசலச் செட்டியாரின் மனம் புண்பட்டு வெறுத்துத் போய் விட்டது. இந்தக் கவலையும் சே ரவே நோய் வர வர வலுத்தது. மேல மாகாணம் ஜமன் செட்டியாருக்கு ஆள் அனுப்பி வரவழைத் தார். பெண்ணின் விஷயத்தைக் கேட்டு மிக வருந்தி

ஞர். இனிப் பிழைக்க மாட்டோமென்பதை நன்கு தெரிந்து கொண்ட சோணசலச் செட்டியார் தமது பணத்தில் ஒரு லட்சம் ரூபாவைக் கோவில் கட்டுவதற்காக வென்று சில பெரிய மனிதர்களின் பொறுப்பில் கொடுத்து விட்டார். மெய்யம்மையாச்சிபேரால் இருபத்தையாயிரம் ரூபாவும் சீதை பேரால் இருபத்தையாயிரம் ரூபாவும் துண்டுபண்ணிவிட்டார். சீதையின் பொருட்டுக் கொடுத்த தொகையை மேல மாகாணம் ராமனாதன் செட்டியார்வைத்துக் கொள்வதென்றும் சீதைக்குப் பிள்ளைபிறந்தால் அந்தப்பிள்ளைக்கும், இல்லாவிட்டால் ஏதாவது தருமத்துக்கும் கொடுக்கும்படி சொல்லிவிட்டார். ரங்கனாதனைக் கூப்பிட்டுக் கடன் எவ்வளவு வாங்கியிருக்கிறாய் என்று கேட்டார். கணக்கு எழுதி வைக்கவில்லை யாதலால் தெரியாதென்று சொன்னான். விசாரித்துப் பாக்கியுள்ளவர்கட்குப் பூராத் தொகையும் தெரிந்து சுமார் இருபதாயிரம் ரூபா கொடுத்தார். இப்படியாக இரண்டு லட்சம் போக இன்னும் மூன்று லட்சம் ரூபா விருக்கிறது. இப்படியே நோய் வாய்ப்பட்டுக் கிடந்து சில மாதங்களில் சோணசலச் செட்டியார் சிவபத மடைந்தார். யாரையாவது மகனுக்குக் கார்டியனாக நியமித்துவிட வேண்டுமென்று வெகுபாடு பட்டும் பயன்படவில்லை. ஒருவரும் உடன்பட மாட்டோமென்று சொல்லி விட்டார்கள்.

சோணசலச் செட்டியார் இறந்த வுடனே ராமனும் வந்து சேர்ந்தான். பசுத்தானம்செய்ய வேண்டுமென்று பஞ்சாங்கக்கார சுப்பண்ணாவுக்கு ஆளனுப்

பினர்கள். இரவு பதினேருமணி யிருக்கலாம். சுப் ண்ணு எழுந்து வெகு வேகமாக வந்து சேர்ந்தார். வரும்போதே ஏகோதிட்டம் நாராயணய்யர் படுத் திருந்த விடத்தைத் தேடி பிடித்துக் கொண்டுவந்து சேர்ந்தார். பசு மாட்டைப் பிடித்து ஏகோதிட்டம் நாராயணய்யர் கையில் கொடுத்தார்கள். பசு மாடு மட்டும் நாராயணய்யருக் கென்பதும், கூடக்கொடுத் த தக்ஷிணை ரூபா நூறு பஞ்சாங்கக்காரருக் கென்ப தும் ராமனுக்கு மட்டுந்தான் தெரியும். பஞ்சாங்கக் காரர் புறப்பட்டுப் போய் விட்டார். சொந்தக்காரரு க்கு ஓலைகள் எழுதப்பட்டன. அம்பலகாரருக்கும் ஓலை யெழுதப்பட்டது. காலை ஆறரைமணிக்குக் கொ ம்பு பறை முதலிய வத்தனங்களுடன் சுமார் மூந் நூறு பறையர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவ ர்களைக் கண்டு அந்த ஊர் ஜனங்கள் மெய்மறந்து போயினர். உள்ளபடியாகவே சின்ன ஊர்களில் ஒரு வர் இறந்துபோனல் யாவரும் அந்த வீட்டில்தான் இருப்பார்கள். அதிலும் பணக்காரர்; நல்ல மனித னைவர் இறந்துபோனல் கேட்க வேண்டுமா? அ தோடு மூந்நூறு பேர் ஏக காலத்தில் கொம்பு தப் படித்துக் கொண்டு வரும்போது பாக்கி யிருக்குமா? எல்லா ஜாதி ஜனங்களும் திரண்டு நின்றூர்கள். இந்த மூந்நூறு பறையர்கட்குப் பின்னர் நூறு பேர்கள் வந்தார்கள். அவர்களின் நடுவே நமது கருப்பண ணம்பலம் வந்து கொண்டிருந்தார். 'மங்கலம்பட்டி அம்பலகாரர் வருகிறூர்' என்ற செய்தி யெங்கும் பர வி அடுத்த ஊர்கட்கும் சென்றது. அம்பலகாரர் யா

வரும் ரங்கனுதன் செட்டியாருடைய வீட்டினுள்ளே சென்று துக்கம் விசாரித்தார்கள். "மேலே ஆக வேண்டியவற்றைத் தாமதியாமல் செய்யுங்கள்! வேறென்ன தேவை?" என்று கிஷ்கிந்தாபுரியை அம்பலகாரர் கேட்டார்.

"சாமான்கள் முதலியவற்றை ஒரு நிமிஷத்தில் தயார் செய்து விடுவோம். அதற்கொன்றும் நேரஞ் செல்லாது. அந்தப் பிள்ளை சிதையைக் கூட்டிவர பெரிசு ஆள் போயிருக்கிறது. வர வேண்டியது தான்" என்று ராமன் பதில் கொடுத்தான். சிறிது நேரத்தில் மேல மாகாணம் ராமனுதன் செட்டியார் அவர் மனைவி, மன்னைகட்டிக் கறுப்பன் செட்டியார், அவர் மனைவி, சிதை, பிள்ளை குட்டிகள் யாவரும் வந்து சேர்ந்தார்கள்.

அந்தப் பக்கத்தில் மிகக் கை தேர்ந்தவரும் நமது ராமனுக்கும் அம்பலகாரருக்கும் நன்கு தெரிந்தவருமான ராமண்ணு வையருக்குக் காலையில் ஆளனுப்பி யிருந்தபடியால் அப்பொழுது அவரும் வந்து சேர்ந்தார். வேண்டிய சாமான்கட்கு ஆளனுப்பி வரவழைத்தார்கள். ராமண்ணுதான் அன்றைய வேலைகள் யாவும் பார்த்தார். ராமண்ணு பலே ஆசாமி! எந்தக் காரியத்தையும் சாதிக்கக் கூடிய சாமர்த்தியும் அவருக்குண்டு. எப்படியாவது ரங்கனுதனுடைய நேசத்தைப் பெற வேண்டுமென்று காத்திருந்தார். ராமனும் அம்பலகாரரும் நினைத்தால் அது முடியுமென்று அவர்களை வேண்டிக் கொண்டேயிருந்தார். இப்பொழுது சந்தர்ப்பம் வாய்த்து விட்

செட்டியார் சிவபத மடைந்தார். அக

டா! இந்த நாட்டி லுள்ள பல வூர்களிலு மிருந்து பெரிய மனிதர்கள் யாவரும் வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்திருந்த கூட்டத்தை அந்த ஊர் தாங்க முடியவில்லை. சமையல் செய்வதற்குப் பேர் பெற்ற பிராமணாட்களை ராமண்ணா திட்டம் செய்திருந்தார். எல்லாக் காரியங்களும் முடிந்து பகல் போஜனம் ஒன்றரை மணிக்கு நடந்தது. வந்திருந்தவர்கள் யாவரும் இப்படிச் சாப்பாடும் விசாரணையும் எவராலும் செய்ய முடியாதென்று பேசிக் கொண்டார்கள். இச்சொற்கள் ரங்கனையும் அவன் தாயாரையும் சந்தோஷக் கடலுள் அமிழ்த்தி விட்டன. ராமனும் ராமண்ணாவும் அம்பலகாரருந்தான் இவற்றிற்குக் காரணர்களாதலால் இம்மூவரிடத்திலும் அளவிலாத பிரியம் ரங்கனுக்கு உண்டாகி விட்டது. அன்று பகல் பறையர்களுள்பட சாப்பிட்டவரின் தொகை ஆயிரத்து நானூற்று எழுபத்தாறு என்று ராமன் கணக்கெடுத்தான். மாலையில் "வேண்டியவற்றுக்குத் தெரிவியுங்கள்" என்று அம்பலகாரர் சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

இப்போது ராமனும் ராமண்ணாவும் ரங்கனுக்குப் பக்கத்திலிருக்கிறார்கள். இரண்டு மூன்று நாட்கள் சென்ற பிறகு ஒருநாள் பஞ்சாங்கம் சுப்பண்ணா வந்திருந்தார். "சபிண்டிகரணத்திற்கு வேண்டிய காரியங்களைக் கவனிக்க வேண்டு மல்லவா?" என்று கேட்டார். சடாரென்று, "ஆமாம், ராமண்ணாவையும் கலந்து பட்டியல் போட வேண்டியதுதான்", என்று கிஷ்கிந்தாபுரி சொன்னான். இந்த வார்த்தை

நமது சுப்பண்ணு தலையில் கல்லைத் தூக்கிப் போட்டார்போலிருந்தது. சுப்பண்ணு பேராசை பிடித்தவர். எவ்வளவு கிடைத்தாலும் திருப்தி கிடையாது. இன்னொருவனுக்கு அரைக்காசு கூடக் கொடுக்கச் சம்மதிக்கமாட்டார். எல்லா வீடுகளிலும் ஏகபோகமாகக் கொள்ளை யடிப்பது வழக்கம். ஒவ்வொரு தானத்திற்கும் வேறு வேறு ஆள் வைக்க வேண்டு மென்பதற்காகத்தான் எவனையாவது உட்கார வைத்து அவனுக்கு கால் அரை கொடுத்து விட்டு பாக்கியை அடித்து வருவது வழக்கம். எல்லாவற்றிற்கும் ஒருவர் இருந்து வாங்கலா மென்றால் தாமே உட்கார்ந்து வாங்கத் தயாராக விருந்தார். இந்த மாதிரியாகத் தானத்தை வாங்கிக் கமிஷனை யெடுத்துக் கொண்டு பாக்கியைத் தம் வீட்டிற் கொண்டு வந்து தரும்படியாகப் பல ஆட்களை அவர் தயார் செய்து வைத்திருந்தார். அந்த ஆசாமிகட்கும் வேறு போக்கிடம் கிடையாமையால் நமது சுப்பண்ணுவைச் சுற்றி வாயைப் பிளந்து கொண்டு நிற்பார்கள். இப்பொழுது சுப்பண்ணு சம்பம் பலிக்க வில்லை. ராமண்ணுவுக்கும் பஞ்சாங்கக்காரருக்கும் கொஞ்சங்கூடப் பிடிக்காது. ராமண்ணு தானம் வாங்குவதில்லை யென்றாலும் சுப்பண்ணுவுக்கு ஒன்றுங் கிடைக்க விட மாட்டா ரென்பதை சுப்பண்ணு நன்றாக உணர்ந்திருந்தார். ரங்கனின் முகத்தையே பஞ்சாங்கக்காரருடைய கண்கள் பரிதாபக் குறியுடன் பார்த்துக்கொண்டிருந்தன. "அது சரிதான்; அப்படியே நாளை மாலையில் வேண்டியவற்றைச் செய்வோம்" என்று ரங்கனுதர் பதில் சொன்

செட்டியார் சிவபத மடைந்தார். அங்

ஞர். பஞ்சாங்கக்காரர் இடது கையைத் தூக்கிய வண்ணமாக ரங்கனுதனைப் பார்த்து, 'நல்லது' என்று சொல்லி விட்டு வீடு சேர்ந்தார்.

ராமண்ணு மிகக் கெட்டிக்காரன்! ஆனல் அயோக்கியன்! அவனுக்கு இப்போது வயது முப்பத்தொன்று. கலியாணம் இன்னும் ஆக வில்லை. வேண்டிய தில்லை யென்று தீர்மானித்து விட்டான். தாயார் தகப்பனர் யாவரும் இறந்து போய் விட்டார்கள். இவனுடைய தமைய னொருவ னிருந்தான். அவன் பரம சாது. அவனும் பத்து வருஷங்கட்கு முன்னர் இறந்து போய் விட்டான். தமையன் மனைவி தான் இவனுக்குச் சாதம் பொங்கிப் போடுகிருள். இவன் ரங்கூனுக்குப் போய் வந்தபடியாலும், பலருடைய சிநேகத்தைப் பெற்று மற்ற பிராமணர்கட்குக் கேடு செய்கிறபடியாலும் அந்தச் சாதியார் இவன் குடும்பத்தைத் தள்ளிவைத்து விட்டார்கள். ராமண்ணுவும் ராமனும் வெகு நெருக்கம்! அத்தியந்த விசுவாசமாகப் பழகி யிருந்தார்கள்.

சோணசலச் செட்டியார் இறந்த பதினுரும் நாள் நெருங்கி வருவதால் அவர்கள் வீட்டின் வாசலில் தினந்தோறும் நூற்றுக்கணக்கான பிராமணர்கள் நுழைவதும் வெளியில் வருவதுமாக விருக்கின்றனர். பஞ்சாங்கம் சுப்பண்ணுவையும் போக்கிரி ராமண்ணுவையும் கிஷ்கிந்தாபுரி ராமனையும் பிரபு ரங்கநாதனையும் பார்த்துக் கொண்டு பதினுறு பல்லையும் திறந்தபடியாகப் பல பிராமணா ரிருந்த காட்சி பரிதாபமாக விருந்தது. நாளும் நெருங்கி விட்டது

சபிண்டிக்கு முதல்நாள் இரவு பத்துமணிக்குப்பிரபு ரங்கனுதன் செட்டியாரும் கிஷ்கிந்தாபுரி ராமனும் ராமன்ணுவும் பஞ்சாங்கம் சுப்பன்ணுவும் வேறு சிலருமாக நடு வாசலில் ஒரு விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு உட்கார்ந்தார்கள். கணக்கப்பிள்ளை யொருவர் ஓலையைவாரி ஒரு கையிலும் எழுத்தாணியை மற்றொரு கையிலும் வைத்துக் கொண்டிருந்தார். பிராசு கடுதாசிக் கட்டுகளை யெடுத்துப் பிரித்து ராமன்ணு ஒவ்வொன்ருகப் படிக்க ஆரம்பித்தார். கடுதாசிக் கட்டுகளைக் கண்டவுடன் பஞ்சாங்கக்காரரின் அடிவயிற்றில் நெருப்புப் பிடித்த மாதிரி யிருந்தது. ஆனுல் ஒன்றும் கண்டிப்பாகச் சொல்ல முடியவில்லை. மெதுவாக பிராசுக் கடுதாசிகளைக் கடைசியில் தானங்களில் வைத்துக் கொள்ளலாமே என்று கூறினர் பஞ்சாங்கக்காரர். இராமன்ணு பஞ்சாங்கக்காரரைப் பார்த்து, “வெறுமேயிரும்; பிராசுக்கு எழுதி விட்டு மிச்சந்தான் மற்றவருக்கு” என்று சொன்னர். பஞ்சாங்கத்துக்கு நாலு இலை தவிரப் பாக்கியை யாவது எழுதுங்கள்” என்று முணங்கிக் கொண்டே யிருந்தார் “பஞ்சாங்கம் சுப்பன்ணு. ஒருவாருகப் பெரிய இடத்துச் பிராசுகட்கு முக்கியமான வரும்படிகள் எழுதப்பட்டன. பாக்கியுள்ள சுமார் இருநூறு பிராசுகட்கு ஆளுக்கு ஐந்து ரூபா கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. பொழுதும் விடிந்தது. காலை மணி ஆறுதானிருக்கும். வீட்டுவாசலில் சுமார் இருநூறு பிராமணர்கள் வாயிற்படியை மறித்துக் கொண்டு, ஒரு

செட்டியார் சிவபத மடைந்தார். அரு

வரை யொருவர் தள்ளிக்கொண்டு நின்றனர். ஒருவராவது பல் துலக்க வில்லை. வாயிலைத் திறந்த கிஷ்கிந்தாபுரி ராமன் அப் பிராமணர்களை நோக்கி "ஐயா! ஏன் வீணாகக்கிடந்து கஷ்டப்படுகிறீர்கள்? எல்லாம் நேற்றிரவே யெழுதியாய் விட்டன. சாயுங் காலம் கோவிலுக்குப் பக்கத்தில் பூரி கொடுக்கப் படும். அங்கே வந்து சேருங்கள். இங்கு காத்திருப் பதில் ஒன்றும் பயனில்லை" என்று சொன்னான். இந்த வார்த்தைகள் மிக உரத்துச் சொல்லப் பட்டா லும் கேட்பார் ஒருவரு மில்லை. அவர்கள் பாடு ஒரு வரை யொருவர் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைவ தற்கு முயன்றுகொண் டிருந்தார்கள். ராமன் அவர் களை உள்ளே விடாமல் தடுத்துக் கொண்டிருந்தான். இப்பொழுது நமது ராமண்ணாவையர் வந்து சேர்ந் தார். உடனே யாவரும் ஒதுங்கிக் கொண்டு வழி விட்டனர். "அடாடா! இதென்ன இது! கொஞ்ச மாவது புத்தி யில்லையே! மனுஷ்யாளுக்கு ஒரு தரம் சொன்னால் தெரியாதோ? சாயுங்காலம் பூரி கொடுப்பார்கள்; சுவாமிகள் யாவரும் போய் விட்டு வாருங்கள்!" என்று அதிகாரத் தொனியில்ராமண் ணா சொன்னார். இதை யாவருங் கேட்டனர். ஆனால் ஒவ்வொருவரும் வாயிலுள்ள பற்கள் முழுமையும் வெளியே தெரியும்படியாக 'ஏதாவது ஒரு தானத் திலாவது போட வேண்டும். ராமண்ணா! பிள்ளை குட்டிக்காரன். நீங்கள் நினைத்தால் முடியும்" என் று சொல்ல ஆரம்பித்தார்கள். இப்படியே நேரம் ஆக ஆக ஆட்களின் கூட்டம் வலுத்து விட்டது.

மணி ஒன்பதிருக்கலாம். பிராமணக் கூட்டம் சுமார் ஆயிரத்துக்கு மேலிருக்கும். இவர்களில் பெரும்பாலார் 'இரண்டும் ஒன்றும் பூரி கொடுக்கப் படுகிறது. மத்தியானத்திற்குச் சாப்பாடும் உண்டு' என்று கேள்விப்பட்டே வந்திருக்கின்றனர். ஆயினும் தானத்திலும் கொஞ்சம் பார்க்கலாமென்ற ஆசையானது தூண்டினபடியாலும் வேறு வேலை யொன்று மில்லாதபடியாலும் வாயிற்படியிலேயே பழியாகக் கிடக்கிறார்கள். கூட்டம் ஜாஸ்தியாகி விட்டபடியால் ஒருவரையொருவர் தள்ளவே ஒரு சிறுபையன் தடுமாறிக் கீழே விழுந்து விட்டான். அவனை ஒரு ஆசாமி மிதித்து விட்டான். பையன் நசுங்கி மூச்சு விட மாட்டாமல் கிடக்க வேறொருவர் எடுத்து விசிறிக் களைப்பாற்றிக் கொண்டிருந்தார். இதைப்பற்றிப் பெரிய இரைச்சல் கிளம்பி விட்டது. வாயில் வெற்றிலை பாக்குப் புகையிலை போட்டுக் கொண்டிருந்த ஒருவர் ஏதோ கோபமாகப் பேசவாயைத் திறந்து கொள்ள கொள்ள வென்றார். வாயிலிருந்த அமிர்தம் எதிரே யிருந்தவர் தலையில்வடிந்தது. அவர் தமது எருமைமாட்டுத் தொண்டையைத் திறந்து இரைச்சல் போட்டார். இன்னு மொருவர் மூக்குப் பொடியைப் போட்டுக் கொண்டு கையை உதறியபோது பக்கத்தி லிருந்தவர் கண்ணில் தூள் தெறிக்கவே பொடி போட்டுக் கொண்டிருந்தவர் கன்னந் திரும்பிப் போகும்படி விட்டார் ஒரு அறை. அவரும் இவருக்கொன்று திருப்பிக் கொடுத்தார். இப்படி இரைச்சலும் கலகமும் வலுத்தன. வாயிற்படியில் சரிபான ஆள் வைக்

செட்டியார் சிவபத மடைந்தார். அவ

க வேண்டு மென்று சொல்லிக் கொண்டே பஞ்சாங் கம் சுப்பண்ணு உள்ளே நுழைந்தார். மங்கலம்பட் டியிலிருந்து வந்திருந்த சின்னக்கறுப்பன் என்பவ னை வாயிற்படியில் நிறுத்தினுர்கள். அவன் மகா பொல்லாதவன்; தாக்ஷிண்யம் என்பது அவனுக்கு அறவே தெரியாது. நல்ல கறுப்பு நிறத்தோடு கூடிய உறுதியான உடலைப் பெற்ற நமது சின்னக்கறுப் பனைக் கண்டு சிறிது அஞ்சித்தான் நின்றூர்களாயி னும், ஆசை உள்ளே இழுத்துக் கொண்டிருந்தபடி யால் முட்டிக் கொண்டும் மோதிக் கொண்டு மிருந் தார்கள். வீட்டினுள்ளே சபிண்டிக் காரியங்கள் ஆர ம்பிக்கப் பட்டன. பஞ்சாங்கம் சுப்பண்ணுவைப் பொம்மையாக வைத்து ராமண்ணுதான் நடவடிக் கையை நடத்தினுர். இதுகாறும் இப்படியாகச் சுப்ப ண்ணுவை அவமானப் படுத்தியவர் கிடையாது. இங் கே இரவு எட்டில் குறிக்கப் பட்டவர்கட்கே தானங் கள் வகையறு கொடுக்கப்பட்டபடியால் வெளியே நின்ற கூட்டம் இதனைக் கண்டும் கேட்டும் புழுங் கிக் கொண்டிருந்தது.

இந்தக் கூட்டத்தார் இல்லாவிட்டால் இறந்து போனவருடைய ஆன்மா மோக்ஷமடையா தென்று குருட்டு ஜனங்கள் நம்பிக் கொண்டிருந்தனர். அத னுல்தான் அந்தக் கூட்டத்தார் மானத்தை விட்டுப் பல்லைக் காட்டிப் பரக்க விழிப்பதைத் தொழிலாகக் கொண்டனர். பாவம்! அறிவென்பதே இல்லாமல் எப்படியாவது தப்பான புகழ்ச்சி செய்து பொய்யும் புரட்டுஞ் சொல்லி வயிறு வளர்ப்பதற்கு வந்திருந்த

அக்கூட்டமானது பார்ப்பவருக்கு அருவருப்பையே தந்தது. மோக்ஷ கர்த்தாவான பஞ்சாங்கக்காரர் முதல் யாவரும் தலை முழுக வில்லை. சிலர் பல் துலக்கவுமில்லை. சிலர் விபூதியை மட்டுங் குழைத்துப் பூசிக் கொண்டிருந்தனர். பலருடைய முகத்தில் அருளென்பது சிறிதுந் தோற்ற வில்லை. பகல் மணி ஒன்றாகி விட்டது. அப்பொழுது பல் துலக்காமல் பொறுமை நிறைந்த முகத்தோடு நிற்கிற கூட்டத்தை அதிகாரத்தோடு விலக்கிக் கொண்டு உள்ளிருந்த பிராமணர்கள் வெளியே வந்தனர். அவர்கட்குப் பின்னர் ஓலைப் பெட்டிகளில் கணக்கற்ற சாமான்களை வேலையாட்கள் தூக்கிக் கொண்டு சென்றனர். இதனைக் கண்டு வெளியிற் கூடிக் கிடந்த கூட்டத்தார் மொறு மொறுத்து முனங்கிக் கொண்டும் வீட்டுச் செட்டியாரை மெதுவாகத் திட்டிக்கொண்டும் நின்றனர். உள்ளே யிருந்த யாவரும் மகிழ்ச்சியோடு மூட்டைகளைக் கட்டிக் கொண்டு சென்று விட்டார்கள். பஞ்சாங்கம் சுப்பண்ணாவும் இரண்டுவண்டி நிறையச் சாமான்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்டு விட்டார். புகையிலை ராமண்ணா வெளியில் வந்து "சரி, எல்லாரும் சென்று ஸ்நானம் செய்து ஆகாரம் செய்துகொண்டு மூன்று மணிக்குக் கோவிலுக்குப் பக்கத்தில் செட்டியாரவர்களுடைய தோட்டத்திற்கு வந்துசேர வேண்டியது" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். பிராமண போஜனம் மிக விமரிசையாக நடைபெற்றது. அன்று சுமார் ஆயிரத்தைநூறு பேர்வழிகட்கு லட்டு ஜிலேபியுடன் சாப்பாடு போடப்பட்

டது. சிலர் ஸ்நானம் செய்து சாப்பிட்டார்கள். சிலர் அதனை லக்ஷியம் செய்ய வில்லை. ஆனால் ஸ்நானம் செய்யாததற்குத் தக்க காரணம் சொன்னார்கள். ஒருவர் ''உடம்பு சௌகரியமில்லை'' என்றார். மற்றொருவர் ''இனிமேல் பூரி வாங்க வேண்டுமே, அங்கே இடிக்கிற இடி எல்லாம் இடித்து முடிந்த பின் ஒரே முழுக்காக முழுகி விடலாம்'' என்றார். வேறொருவர் ''சூத்திரான்ன மல்லவா? உண்டபின்தான் ஸ்நானம் செய்ய வேண்டும்'' என்றார். இப்படியாகப் பேசிக் கொண்டு மூக்குப் பிடிக்கத் தின்று தீர்த்தார்கள்.

பகல் மணி இரண்டரை இருக்கலாம். அவ்வூர் சிவன் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள பெரிய கோட்டைச் சுவரெடுக்கப்பட்ட தோட்டத்தின் வாயிலில் பிராமணக் கூட்டமானது சூழ்ந்து கொண்டிருந்தது. வரவர அதிகரித்துக் கொண்டிருந்தது. இந்தத் தோட்டம் பிரபு ரங்கனாதன் செட்டியாருக்குச் சொந்தமானது. வெளிச்சுவர் சுமார் மூன்று கஜ உயரமெடுக்கப்பட்டிருந்தது. வழுவழுப்பாகச் சாந்து பூசப்பட்டுச் சுவரின் மேற்பக்கத்தில் உடைந்துபோன பீங்கான் சில்லுகள் பதிக்கப்பட்டிருந்தன. இதனுள் பங்களா கட்ட வேண்டுமென்று பிரபு உத்தேசித்திருக்கிறார். சரியாக மூன்று மணிக்குப் பஞ்சாங்கம் சுப்பண்ணாவும் புகையிலை ராமண்ணாவும் அந்தத் தோட்டத்தின் வாயிற்படியில் நின்றார்கள். உட் புறமாகக் கதவின் ஓரத்தில் மங்கலம்பட்டிச் சின்ன கறுப்பன் நின்றான். ஒவ்வொருவராகப் பணங்கொடுக்கப்பட்டு உள்ளே விடப்பட்டார்கள். உள்ளேசென்றவர்களில்,

ஒருவர்:—ராமு! முழுமையும் கொடுத்து முடிவதற்கு ஆறு மணிக்கு மேலாகும்போ லிருக்கிறதே! என்னடா செய்கிறது?

மற்றவர்:—வெற்றிலே பாக்குப் புகையிலே அரை ரூபாய்க்கு வாங்கி வந்திருக்கிறே னென்பது தெரியாதா? அதனை யொரு கை பார்க்க வேண்டியதுதான்.

வேறொருவர்:—சரியான மேசை கொடுப்பதானால் என்னிடத்தில் குட்டைப் புராணமிருக்கிறது. வேண்டுமா?

முதலாமவர்:—நீ தாண்டா சரியான பேர்வழி! "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரி முன்னர், வைத்தூறு போலக்கெடும்." பரம்பரையாக ஆண்டியா, பஞ்சத்துக்கு ஆண்டியா? எடேண்டா?

என்று சொல்லிக் கொண்டே மேல் வேஷ்டியைத் தரையில் விரித்தார். அதற்குள்ளே இன்னும் நால்வர் வந்துசேர்ந்தனர். ஒரு ரூபா மேசை வைத்து ஆட்டத்தை ஆரம்பித்து விட்டார்கள். இம்மாதிரியாகச் சீட்டுக் கச்சேரி பல விடங்களில் நடைபெற்றது. விளையாடுபவர் ஐவர். அதை மேற்பார்ப்பவர் இருபது பேர். இப்படிப் பலமான சிரிப்புடனும் வசை மொழிகளுடனும் அடி உதையுடனும் இக்கோஷ்டிகள் நடைபெற்றன. வேறு பலர் பதினைந்து நாயும் புலியும் ஆடினார்கள். வேறு சில பேதைகள் ஆங்கு வந்திருந்த அழகிய பெண்மக்களைப் பார்த்து

க்கொண்டிருந்தனர். காதற் பேச்சுகள் மலிந்திருந் தன. இப்படியாக அவரவருடைய இயற்கைக்கும் பழக்கத்துக்கும் தக்கபடி காரியங்களை நடத்திக்கொ ண்டிருந்தனர். பூரி கொடுக்கும் சட்டப்படி கல்யா ணம் செய்யப்பெற்ற புருஷர்கட்கு இரண்டு ரூபாவும் பெண்மக்கட்கு ஒரு ரூபாவுங் கொடுக்க வேண்டும். ஆனால் வயது முதிர்ந்த பெண்களிடமே இச்சட்டம் அமுலி லிருந்தது. ராமண்ணாவுக்கு வேண்டியவர் கள் கைநிறையப் பணம் பெற்றார்கள். இதைக்கண்டு வெளியில் நின்ற கூட்டம் முறு முறுத்துக் கொண்டி ருந்தது. இப்பொழுது உள்ளிருந்த ஒரு குண்டுக் கட்டை பிராமணன் கோட்டைச் சுவரில் ஏற முயன் றான். கீழே ஒருவன் அவனைத் தன் தோளைக் கொடு த்து ஏற்றினான். சுவரில் பதிக்கப் பட்டிருந்த பீங் கானை ஒரு வெள்ளைக் கல்லினால் தட்டி உடைத்து விட்டு ஏற்கனவே இதற்கெனக் கொண்டு வந்திருந்த சாக்கொன்றை அதன்மேல் விரித்துக் கொண்டு ஏறி விட்டான். சுவரின் மேலிருந்த பிராமணனைக் கண்டு விட்டான் நமது சின்னக் கறுப்பண்ணன். பக்கத்திற் கிடந்த கல்லொன்றை யெடுத்துப் பலமாக சுவற்றின் மேலுள்ள ஆளைக் குறிவைத்து விட்டான்! ஐயோ! ஐயோ! என்று கதறிக் கொண்டு பிராமணன் வெளி ப்பக்கத்தில் குதித்தான். உடனே வெளிக் கதவைச் சாத்திப் பூட்டிக் கொண்டு ராமண்ணா உள்ளே வந் தார். விசாரணை நடைபெற்றது. வெளியே போன வன் யாரென்று தெரியாத வரையில் பூரி கொடுக்க முடியாதென்று சொன்னார். வெளியில் நிற்கிறவர்க

ளுள் பேரிரைச்சல் உண்டாகி விட்டது. உள்ளே இருக்கிறவர்கள் என்ன செய்வார்கள்? பகல் மூன்று மணி முதல் ஆறு மணி வரை அடைக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். இந்த வழக்கு எப்பொழுது தீருமென்று தெரியாமல் ஆண்களும் பெண்களும் ஒன்றாக அடைக்கப் பட்டிருப்பதால் அந்தக் கூட்டம் பட்ட கஷ்டம் சொல்ல முடியவில்லை. ஜனங்கள் மறுகுகின்றனர். ராமண்ணா தெரிந்தாலன்றி முடியாதென்று சொல்லி விட்டனர். பிறகு வெளியே போனவர் அடிபட்டபடியால் நடக்க முடியாமல் வீட்டி லிருக்கிறாரென்று சொன்னார்கள். பின்னர் பாக்கிப் பேருக்குப் பூரி கொடுக்கப்பட்டது. இரவு எட்டரை மணிக்கு யாவரையும் திறந்து விட்டார்கள். ஒரு காலித் தோட்டத்தில் ஆண்களையும் பெண்களையும் இரவு எட்டரை மணி வரை அடைத்து வைத்தால் என்ன விளையுமென்பதை யறியாமல் நமது ஜனங்கள் பூரிகொடுத்துப் புண்ணியம் சம்பாதிக்க நினைக்கின்றனர். இந்தப் பிராமணரிற் சிலர் இப்படி அடை படுவதற்குப் பதிலாக மண்ணைவெட்டிவயிறுவளர்ப்பதுகூட மேலாயிருக்கு மென்று சொல்லிக் கொண்டே போனார்கள்.

மத்தியான சாப்பாட்டுக்கு வேண்டியயாவற்றையும் நமது கிஷ்கிந்தாபுரி ராமன் செய்து முடித்திருந்தான். வெளியூர்களி லிருந்தும் உள்ளூரி லிருந்தும் வந்திருந்த ஜனத்திரளுக்கு நல்ல உணவு கொடுக்கப்பட்டது. பிராமணர்களைப் பொறுத்த மட்டில் புகையிலை ராமண்ணாவும், சொந்த ஜாதியாரைப் பற்றிய யாவற்றுப் பொறுப்பையும் கிஷ்கிந்தாபுரியும், பிற

ஜாதியாருக்கு வேண்டியவற்றை அம்பலகாரருமாக ஏற்றுச் சபிண்டியை வெகு சிறப்பாக முடித்தார்கள். இதிலிருந்து நமது ரங்கநாதன் செட்டியாருடைய பெயர் எங்கும் பரவத் தொடங்கியது. சோணாசலச் செட்டியார் இறந்து போன பிற்கு இவரே குடும்பத் தலைவராகி விட்டபடியாலும் கணக்கின்றிப் பணத்தை வாரி யிறைக்கிறபடியாலும் சோணாசலச் செட்டியார் இறந்த தினத்திலும் சபிண்டி. தினத்திலும் மிக விமரிசையாகக் காரியங்களை நடத்திய படியாலும் லட்சக்கணக்காகப் பணம் இருக்கிறதென்று யாவரும் கருத இடமிருந்த படியாலும் ரங்கநாதன் செட்டியாரின் பெயர் மிக எளிதாக எங்கும் பரவிவிட்டது. இதுவரை செய்து வந்த அட்டூழியங்கள் ஒருவாறு மறைந்தே நின்றன. பெரும் பணக்காரர் செய்கிற குற்றங்கள் வெளியே வருவதில்லை. ஏழைகள் சிறிது தவறு செய்தாலும் அதை உலக ஜனங்கள் பேசிப் பேசிப் பெரிதாக உலகிற் பரவச் செய்வார்கள். பணக்காரர் பெரிய குற்றங்களைச் செய்தாலும் அதனைப் பற்றிச் பேசப் பயப்படுவது இயல்பல்லவா? பணக்கார கோஷ்டியில் சேர்ந்த நமது ரங்கநாதரைப் பற்றிப் பஹிரங்கமாக எவரும் தூற்ற அஞ்சினார்கள். பணத்தை ஏராளமாகப் பலர்க்குக் கொடுப்பதால் அவர்கள் இவரைப் புகழ்ந்து கொண்டே யிருந்தார்கள். இன்னும் பலர் பண உதவி பெறலாமென்றெண்ணிப் புகழ்ந்து கொண்டு மிருந்தனர். இந்தப் பிரசாரம் பலமாக விருந்தபடியால் ஒருவாறு இவருடைய கெட்டகுணங்கள்வெளியே அதிகமாகப் பரவவில்லை.

அத்தியாயம் கூ.

தான தருமம்.

புகையிலை ராமண்ணு நடத்தையில் பிசகுடைய வரானுலும் உலக வியவகாரத்தில் மிகக் கெட்டிக்கா ராயிருந்ததால் முதலாளியின் நிலைக்கு உத்தியோ கஸ்தர்களுடைய உறவு மிக அவசியமாகுமென்று கருதினர். நடை தவறிப் பலவழிப்பட்டிருப்பவர்க்கு உத்தியோகஸ்தருடைய தயவு இன்றியமையாததென்பது ராமண்ணுவின் அபிப்பிராயம். ஆகவே அப் பகுதிக்குப் புதிதாக வேலை ஒப்புக்கொண் டிருந்த அரசாங்கத் தலையாரியைப் பார்ப்பதற்காக முதலாளி யும் தாமுமாகச் சென்றார்கள். தலையாரியும் ரங்கனு தரின் புகழை யறிந்தவராதலாலும்பணக்காரரென்று கேள்விப்பட் டிருந்ததாலும் செட்டியாருக்கு மிக்க மரியாதை செய்தார். சிறிது நேரம் பேசிக் கொண் டிருந்த பிறகு "அடுத்து வருகிற வெள்ளிக்கிழமை இரவு ஒரு நிலாபோஜனம் நடைபெற எற்பாடு செய் திருக்கிறேம்; அதற்கு அவசியம் வர வேண்டும்" என்று ரங்கநாதர் புன்சிரிப்போடு சொன்னர். தலை யாரியும் சந்தோஷமாக வர ஒப்புக் கொண்டார். மேற்படி தலையாரி செல்லமங்கலம் தாலுகாவில் முன் உத்தியோகம் பார்த்தவராதலால் அங்கு கிராமம் வாங்கி யிருந்த வையாபுரி செட்டியாருடன் அதிகப் பழக்கமுடையவராக விருந்தார். வையாபுரி செட்டி யாரிட மிருந்த பணம் இப்போது குறைவுபட்டு விட்

டாலும் மிக உன்னதமான குணங்களுடையவராக விருந்தார். வயதானவர். மிகுந்த யோக்கியர். ஏழைகளிடத்தில் மிக்க இரக்கம் வாய்ந்தவர். இவருடைய பொருளுதவியினுலேதான் செல்வராஜபுரத்தில் ஒரு நல்ல பசு மடம் நடைபெற்று வருகிறது. இலப்பட்டிருந்த அவ்வூர்ச் சிவன் கோயிலேயும் நன்ருகக் கட்டி அந்த ஊரணிக்குக் காட்டிலிருந்து மடை போட்டுத் தண்ணீர் வரவழைக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் இவருக்குச் சொந்தமான இரண்டு பெரிய கப்பல் முழுகிப் போய்விட்டபடியால் மிக நஷ்ட மடைந்து கடனுக்காளாகி விட்டார். ஆகவே இவர் அதிகமாகச் செல்வராஜபுரத்திற்கு வருவதில்லே. செல்லமங்கலத்தில் இவருக்கு நிலங்க ளிருந்தன. அவற்றைப் பார்த்துக் கொண்டு அங்கே தான் வெகுநாளாக வாசஞ்செய்து கொண்டிருக்கிருர். இவரிடத்தில் யாவருக்கும் மதிப்புண்டு. நமது சோணுசலச் செட்டியார், கோவில் கட்டுவதற்காக எடுத்து வைத்திருந்த பணத்திற்கு ஏற்படுத்தியிருந்த டிரஸ்டிகளில் இவருமொருவராவர். இப்போது இவருக்கும் நிலா போஜனத்திற்கு ரங்கநாதரின் அழைப்பு சென்றது. குறித்தபடி வெள்ளிக்கிழமை மாலேயிலேயே வந்து சேர்ந்தார்கள். கோவிலுக்குப் பக்கத்திலுள்ள தமது "மேனகா விலாஸ்" பங்களாவில் விருந்து நடைபெற்றது. ராமண்ணுவும் ராமனும் அம்பலகாரரு மிருக்கும்போது விருந்தைப் பற்றிக்கேட்கவா வேண்டும்? அற்புதமானசாப்பாடு. உண்டு முடிந்ததும் நல்லதொரு நிலாமணி முற்றத்

தில் ரத்தினக் கம்பளம் விரித்திருந்தது. காதவழி மணநாறும் சந்தனத்தை நிறையப் பூசிக் கொண்டு தலையாரி நடுவிலே வீற்றிருந்தார். பக்கத்திலே வையாபுரி செட்டியாரு மிருந்தார். வையாபுரி செட்டியார் மெதுவாக "ரங்கனுதன் நல்ல பிள்ளை; ஸ்தோத்திரப் பிரியன்; இந்த ஊரில் நல்ல தண்ணீரில்லாக் குறையை இவனைக் கொண்டு ஒழுங்கு செய்து விட வேண்டும்; சந்தர்ப்பத்தை விட்டு விடக் கூடாது; அவன் மிக உதாரகுணமுடையவன்; ஆனால் ராமண்ணுவை முன்னடியே தன்னக் கட்டிக் கொள்ள வேண்டியது மிக அவசியம்" என்று தலையாரி காதில் சொன்னார். தலையாரியும் இது சரியான வேலையென்று தீர்மானித்துக் கொண்டு புகையிலை ராமண்ணுவிடத்தில் "செட்டியார் பணம் பலவழியாகப் போகிறதே. அதிற் கொஞ்சத்தை உபயோகமான தருமவழியில் திருப்ப உத்தேசிக்கிறேன். வையாபுரி செட்டியாரும் அப்படியே என்னுகிறார்கள். வேறொன்றுமில்லை; அவர்களுடைய ஊருணியை நன்றாகச் சுத்தம் செய்து நல்ல தண்ணீர் தேங்கும்படி செய்யவேண்டும்" என்றார். ராமண்ணுவுக்கும் நல்லதென்று தோற்றியது. இதற்குள் ரங்கனுதரும் "உத்தியோகஸ்தர்கட்கு இந்த விருந்தெல்லாம் சாதாரணமாகத் தானிருக்கும்" என்று சொல்லிக் கொண்டே வந்து உட்கார்ந்தார்.

தலையாரி:—என்ன செட்டியாரவாள்! நீங்கள் உபயோகிப்பதெல்லாம் பாலும் பன்னீருந் தான்போலிருக்கிறதே?

செட்டியார்:—எனக்குப் பாலில் விருப்பம் அதிகந் தான்; இருந்தாலும் நீங்கள் சொல்லுவதை உபசாரமாகத்தான் கொள்ள வேண்டும்.

ராமண்ணு:—வேறு வழி! கிணற்றுத்தண்ணீர் முழு உப்பு. ஊருணித் தண்ணீரைப் பார்த்தால் உங்கள் தாயார் ஊட்டிய பால் கூட வெளியே வந்துவிடும்.

தலையாரி:—ஏன் அப்படி யிருக்கிறது? தண்ணீரில்லாமல் ஜனங்கள் என்ன செய்கிறார்கள்? குடிப்பதற்கு வகை யென்ன?

ராமண்ணு:—பேர்தான் செல்வராஜபுரம்! குடிக்கத் தண்ணீர் ஏது? நமது செட்டியார் இங்கே பிறந்திரா விட்டால் இது ஊரா? நமக்கு மட்டும் நான்கு மைலுக்கு அப்பால் உள்ள ஆற்றங்கரைத் தென்னந்தோப்பி லிருந்து தண்ணீர் வருகிறது.

தலையாரி:—தண்ணீர் குறைவுள்ள ஊரில் குடியிருப்பதே மகா பாவம்! அடடா! ஏழை யெளியவர்களெல்லோரும் என்ன செய்வார்கள்? தண்ணீர்க் கஷ்டத்தால் தான் இங்கு பல நோய்கள் தோற்றுகின்றன போலும்!

வையாபுரி செட்டியார்:—இதொரு பிரமாத மில்லை. ரங்கனுதன் நினைத்தால் உடனே முடியக் கூடிய காரியந்தான். எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கிறுன். இதிற் கொஞ்சம் செலவிட்டால் மதிப்புண்டு; புண்ணியமுமுண்டு. அவனுக்கு மனம் வர வேண்டும்.

இம்மட்டோடு சம்பாஷணையும் முடிந்தது. ரங்கனுதரும் உடன்பட்டார். வையாபுரி செட்டியாரும்

ராமண்ணாவும் மேற்பார்ப்ப தென்றும், அம்பலகாரர் ஆளனுப்புவ தென்றும், தலையாரி அவர்கள் குழாய் போடுவதற்கு நிலங் கிடைக்கும்படி ஜமீனில் உத்தி ரவு வாங்கிக் கொடுப்ப தென்றும் முடிவு செய்யப்ப ட்டது.

அந்த ஊரிலிருந்து சுமார் இரண்டு மைல் தூர த்திலுள்ள பெருங் காட்டின் நடுவில் பெரிய கம்வாய் வெட்டி அதில் மழைத் தண்ணீரைப் பெருக்கி அதி லிருந்து குழாய் போட்டுச் செல்வராஜபுரத்துக்கு நடுவில் கொண்டு வருவ தென்று முடிவு செய்தார் கள். ரங்கனுதருடைய முன்னோர்கள் அவ்வூரின் மத் தியில் ஒரு பிள்ளையார் கோவில் கட்டி அதற்கு முன் பாக ஒரு ஊரணியும் அமைத்திருந்தனர். அதிலு ள்ள தண்ணீர் உபயோகத்திற்காகாதபடியால் ஒருவ ரும் அதனைத் தொடவில்லை. அவ்வூருணியைச் சுத் தப்படுத்திப் புதிதாகச் சுற்றிலும் கல்வரி யெடுத்து அதிக ஆழம் வெட்டிப் புதிய மண்ணடித்து ஒழுங் கு செய்து காட்டுக் கம்வாயி லிருந்து குழாய் வழி யாகத் தண்ணீரைப் பெருக்கினார்கள். இந்த ஊருணி த்தண்ணீர் மிக அற்புதமாகி விட்டது. இதில் தான் நமது ரங்கனுதரின் புகழ் எங்கும் பரவி விட்டது. குடிக்கத் தண்ணீர் வசதி செய்ததொன்று; புராதன தருமத்தில் கவனம் செலுத்தியது மற்றொன்று; நவீ னதருமமென்றும், காலத்துக் கேற்ற பயனுடைய தருமமென்றும், எந்த உயிர்ப் பிராணிகட்கும் வித் தியாசமில்லாத தருமமென்றும் பலர் புகழ வாரம்பி த்தனர். இதற்குச் சுமார் அறுபதாயிரம் ரூபா செல

வாகி விட்டது. என்றாலும் சிறந்த மதிப்புண்டாகி விட்டபடியால் பிரபு சந்தோஷ மடைந் திருந்தார். ரங்கநாதருடைய புகழானது எங்கும் பரவவே தினந்தோறும் நூற்றுக் கணக்கான யாசகர்கள் வரத்தலைப்பட்டனர். அவர்கட்கும் இல்லை யென்னாது கொடுக்கவேண்டியதாக விருந்தது. இப்படியே சில நாட்கள் சென்றன.

மெய்யம்மை ஆச்சி மறுமையில் நல்வாழ்வு பெற வேண்டு மென்று ஆசை கொண்டவளாய்த் தினந்தோறும் தங்களுக்குச் சொந்தமாக விருந்த பிள்ளையார் கோவிலுக்கு மாலை நேரத்தில் சென்று வணங்கி வருவதை வழக்கமாகக் கொண்டார்கள். புதிதாக ஊருணியைச் சீர்படுத்திக் காவல் போட்டிருப்பதாலும் பிள்ளையார் கோவிலைப் பிரித்து அழகாகக்கட்டியிருப்பதாலும் பலர் அப்பகுதியில்வரப்போகவிருந்தனர். மெய்யம்மை ஆச்சிக்கு இந்தப் பிள்ளையார் கோவிலைக் கூட்டுவதும் மெழுகுவதும் கோலமிடுவதுமாகப் பொழுதிற் பெரும்பாகம் போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது பழய முரட்டுத் தனமும் சாமியாட்டமும் அடங்கி விட்டன. இந்தக் காலத்தில் ஒரு நாள் ஒரு அம்மாள் பிள்ளையார் கோவில் முகப்பில் வாடியமுகத்துடன் படுத்திருப்பதை மெய்யம்மை ஆச்சி கண்டு "யார் கோவிலில் வந்து படுத்திருப்பது?" என்று அதிகாரத்தோடு கேட்டாள். அதற்குப் படுத்திருந்த ஆளின் வாயிலிருந்து தீனசுரத்தில் "நான் ஒரு ஏழை; கஞ்சியைக்கண்டு மூன்று நாளாகி விட்டன; தொண்டைக்கும் நெஞ்சுக்கு

மாக மூச்சு ஓடிக்கொண் டிருக்கிறது; எழுந்திருக்க முடியவில்லை'' என்ற சொற்கள் வந்தன. பக்கத்தில் நின்ற ஆண்டிச்சி மெய்யம்மை ஆச்சியைப் பார்த்து, "இந்த அம்மாள் நேற்று இரவு என்னமோ பாட்டு பாடிக் கொண்டிருந்தாள். அழகாக விருந்தது. குயில்மாதிரிபாடினாள்; கொஞ்சம் கஞ்சி ஊற்றினால் பாட்டுக் கேட்கலாம்; சைவ வீட்டு அம்மாள் மாதிரி யிருக்கிறாள்'' என்று சொன்னாள். இதைக் கேட்டவுடன் மெய்யம்மை ஆச்சிக்குச் சிறிது இரக்கம் வந்துவிட்டது. ஆண்டிச்சியை அனுப்பி ராமண்ணா வீட்டிலிருந்து சாதம் கொண்டு வந்து கொடுத்து எழுந்தவுடன் கூட்டிக்கொண்டு வீட்டுக்கு வரும்படி உத்தரவு போட்டுவிட்டு மெய்யம்மை ஆச்சி வீடு சேர்ந்தாள்.

ஆச்சி சொன்னபடி ஆண்டிச்சி, சோறு போட்டு அழைத்துக் கொண்டு வந்தாள். மெய்யம்மை ஆச்சியும் வந்த புதிய அம்மாளும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். வந்த அம்மாளுடைய அழகிய உருவமும் அன்பு மொழிகளும் அடக்கமான தோற்றமும் இனிய மேன்மையான வார்த்தைகளும் இசை நலமும் மெய்யம்மை ஆச்சியைக் கிறு கிறுக்கச் செய்து விட்டன. ஊர் பெயர் முதலிய வரலாறுகளைக் கேட்ட மெய்யம்மை ஆச்சி தன்னோடிருக்கும்படி வேண்டிக் கொண்டாள்.

அம்மாள்:—எனக்கு வேலைகள் அதிக மிருக்கின்றன. இன்றைக்கே புறப்பட வேண்டும். உடலில் பல மிருக்கிற வரையில் உழைக்க வேண்டியதே மக்கள் கடமையாகும்.

ஆச்சி:—பிள்ளை குட்டி வீடு வாசல் முதலிய ஒன்று மில்லை யென்று சொன்னீர்களே? இப்போதுவேலை யிருக்கிற தென்று சொல்லுகிறீர்களே!

அம்மாள்:—அதுவும் பொய்யில்லை; இதுவும் உண்மை தான்.

ஆச்சி:—என்னம்மா நீங்கள் சொல்லுவது பெரிய பித்தலாட்டமாக விருக்கிறது. ஞானப் பயித்தியமோ?

அம்மாள்:—பயித்திய மில்லை. இந்த உலகத்தில் எனக்கு ஒருவருமில்லா விட்டாலும் இறந்த பிறகு நல்ல உலகத்துக்குப் போக வேண்டாமா?

ஆச்சி:—நிசந்தான். இங்கே நல்ல பிள்ளையார் கோயிலிருக்கிறது. அங்கு சென்று சாமி கும்பிட்டுவிட்டுப் பாட்டைப் படித்துக் கொண்டு நல்ல பொழுதாகப் போக்கிக் கொண்டிருந்தால் பற்றாதா?

அம்மாள்:—அதுவும் நல்லது தான்; இதை யெல்லாம் விட படிக்கிறது தான் மேலானது. நான் படித்திருப்பதை இன்னும் பல பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டு மென்று எனக்கு ஆசை யிருக்கிறது. ஆகையால் அதற்கு வேலை செய்யப்போகவேண்டும்.

ஆச்சி:—அதற்கு என்ன செய்ய வேண்டும்? உங்களுக்குச் சோற்றுக்குக்கூட வழியில்லையே!

அம்மாள்:—கடவுள் கொடுப்பார்! இன்று உங்கள் மூலமாகக் கடவுள் கொடுத்தா ல்லவா? இப்படி யேசுவாமியைப் பிரார்த்தித்து ஒரு பெண்பிள்ளைப் பள்ளிக்கூடம் வைக்கப்போகிறேன்.

இதைக் கேட்டவுடன் மெய்யம்மை ஆச்சியின் மனதில் யோசனை யுண்டாகி விட்டது. "பெண்பிள்ளைகளைப் படிக்க வைப்பதால் என்ன புண்ணியமுண்டாகும்? இதைப் பெரிதாகச் சொல்லுகிறீர்களே" என்று கேட்டாள்.

அம்மாள்:—படியாதவர்கட்கு அதிலுள்ள சுவை தெரியாது. படித்தவர்கட்கு அதிலுள்ள இனிப்பு அதிரசத்தில் கூடக் கிடையாது. கற்கண்டை விட அது இனிக்கும். தேவாரத்தையும் திருவாசகத்தையும் படித்து இன்புறுவது யாருக்கு முடியும்? முந்தின காலத்தில் மனிதரை வாழ்விப்பதற்காகக் கடவுள் உலகில் வந்த கதைகளைப் படியாதவர் எப்படி யறிவார்? கற்புக் கரசிகளின் சரித்திரங்களைப் படித்தறியும் பேறு சாதாரணப் பெண்கட்குக்கிட்டுமா? எவ்வளவு அருமையான நூல்க ளிருக்கின்றன? கண்ணிருந்தும் குருட்டுப் பெண்களாகவல்லவா நமது பெண்மக்க ளிருக்கிறார்கள். அவர்களுடைய கண்ணைத் திறந்து விடுவதைவிடப் புண்ணியம் வேறென்ன விருக்கிறது? எனக்கு இந்த உலகத்தில் வேறொன்றும் வேண்டாம். ஒரே ஒரு பெண் பள்ளிக்கூடம் வைத்து அதில் வாத்தியாராக விருந்து சொல்லிக் கொடுத்துச் சில பிள்ளைகளின் கண்ணைத் திறந்து விட்டால், அதுவே இந்த ஜன்மத்துக்குப் போதியதாகும்.

ஆச்சி:—அதற்கு எவ்வளவு பணம் வேண்டும்?

அம்மாள்:—பணம் அதிகமாக வேண்டியதில்லை. ஒரு கட்டிடம் வேண்டும். சொல்லிக் கொடுப்பதற்கு

ச்சுமார் ஆயிரம் ரூபாவுக்குள் சாமான்கள் வாங்கினால் போதும். எனக்குச் சோறும் துணியும்தானே தேவை!

ஆச்சி:—சரி; நான் இவைகளைத்தருகிறேன். இங்கேயிருக்கலா மல்லவா?

அம்மாள்:—நீங்கள் நன்றாய் இருக்கவேண்டும். இவ்வளவு அன்பு காட்டுதற்கு நன்றி செலுத்துகிறேன். இங்கேயே யிருப்பதில் தடையில்லை.

மெய்யம்மை ஆச்சி தனக்குள்ளே யோசித்து முடிவு செய்து விட்டாள். மகனிடத்தில் சொல்லிப் பார்க்கிறது; மாட்டேனென்றால் எடுத்து வைத்திருக்கிற பணத்தில் கொடுக்கிறதென்று தீர்மானித்து விட்டாள். அப்படியே சென்று சொன்னாள். கட்டிடம் தாயாருடைய பணத்தில் கட்டிவிட்டால் மற்றச் செலவுகளைத் தான் கொடுப்பதாக ரங்கநாதர் சொன்னார். சரி என்று மெய்யம்மை ஆச்சி பணத்தில் ரூபா ஐயாயிரம் செலவிட்டு அழகான கட்டிடம் கட்டப் பட்டது. ரங்கநாதர் ரூபா ஐயாயிரம் முதலெடுத்து வைத்து ஆயிர ரூபாவுக்குச் சாமான்களும் வாங்கி வைத்தார். வந்த அம்மாள் பள்ளிக்கூடத்தை மிக அழகாக நடத்தி வருகின்றார். அந்தப் பாடசாலைக்கு "ஹிந்து பாலிகா பாடசாலை" யென்று பெயரிடப் பட்டிருந்தது. மெய்யம்மை ஆச்சிக்கும் வாத்தியார் அம்மாளுக்கும் உடலிரண்டும் உயிரொன்றுமே யாகும் என்று சொல்லும்படியான நட்புரிமை யுண்டாகிவிட்டது. இருவரும் ஒரே இடத்தில் உண்பதும் உறங்குவதும் புராணங்கள் படிப்பதும் பாட்டுப் பாடுவ

தும் கேட்பதுமாகப் பொழுது போக்கினார்கள். அநேகம் ஏழைக் குழந்தைகட்கு உண்டியும் உடையும் கொடுத்துப் படிக்க வைத்தார்கள். வரவர மற்ற ஆசைகளை யெல்லாந் துறந்து பள்ளிக்கூட எண்ணமே மேலேறிவிட்டபடியாலும் மகனிடத்து நல்லபிப்பிராய மில்லாதபடியாலும் பெண் குழந்தை யில்லாதபடியாலும் தன்னிடம் மிஞ்சி யிருந்த சுமார் முப்பதாயிரம் ரூபாயையும் வையாபுரி செட்டியார் ரங்கநாதர் முதலிய நால்வரைப் பஞ்சாயத்தாராக நியமித்து அவர்களிடம் கொடுத்து விட்டுச் சில நாளிருந்து மெய்யம்மை ஆச்சி சிவபத மடைந்தாள். இந்தப் பஞ்சாயத்திற்கு ரங்கநாதரே நிரந்தர ட்ரஸ்டியாக விருந்து வந்தார். வாத்தியாரம்மாள் மிகக் கண்ணுங் கருத்துமாகப் பள்ளிக்கூடத்தைக் கவனித்து வந்தாள். இன்னும் பல உபாத்தியாயினிகளும் அங்கிருந்து போதித்து வந்தனர்.

அத்தியாயம். கo.

மகாதேவ கோவிந்தர்.

ஒரு நாள் புகையிலை ராமன்னு வந்து "காசிக்கு யாத்திரைசெல்ல வேண்டும்; மூன்று மாதத்தில் கட்டாயம் வந்துசேருகிறேன்" என்று ரங்கநாதரிடத்தில் சொன்னார். இச் செய்தியை விளையாட்டென்று முதலில் நினைத்தாராயினும் பின்னர் உண்மை யென்றறிந்து ரங்கநாதர் மிகவருந்தினர்.

பால்ய முதல் சிநேகரும் தன்னுடைய வாழ்நாளின் முற்பாகத்தில் பல சமயங்களில் உதவி புரிந்து வருப வருமான செட்டியா ரொருவர் அழைப்பதால் மறுக்க முடியவில்லை யென்று சொல்லி விடை பெற்றுக் கொண்டு பிரிந்து சென்று விட்டார். பிரபு ரங்கனாதருக்கு வலது கை யொடிந்து போன மாதிரி யிருந்தது. எனினும் என்ன செய்வது? இதுவரை ராமண்ணு பக்கத்தி லிருந்தபடியால் ரங்கனாதருடைய புத்தியைக் கெட்ட வழிகளில் அளவு கடந்து பற்ற விடவில்லை. காலிக் கூட்டங்களும் ராமண்ணுவுக்குப் பயந்து அளவுக்குமேல் நெருங்கவில்லை. இப்போது தான் பேர்வழியை மடக்கக் காலமென்று பலர் கருதிவிட்டனர். கிஷ்கிந்தாபுரி ராமனும் அம்பலகாரரும் நினைத்தால் எந்தக் காரியத்தையும் சாதித்து விடலாம். முன் வந்ததை விட அதிகமான ஆட்கள் தினந்தோறும் குளம் வெட்டுகிறே னென்றும், மடங் கட்டுகிறே னென்றும், சிமந்த மென்றும், கல்யாண மென்றும், உபநயன மென்றும், பிள்ளைக்குப் பள்ளிச்சம்பள மென்றும், நந்தவன மென்றும், கோயில் கட்டுகிறே னென்றும் சொல்லிப் பிடுங்கித் தின்றார்கள். எல்லாப் பொறுப்பும் ராமன் கையிலேயே யிருந்தன. கண்டபடியாகக் கணக் கெழுதியும் எழுதாமலும் பணத்தை வாரித் தட்டிக்கொண்டிருந்தான்.

செல்வராஜபுரத்திற்குச் சுமார் ஐந்து மைல் தூரத்தில் தேவர்குடி யென்ற சிறு கிராமமிருந்தது. அதில் பிராமணரே குடியிருந்து வந்தனர். அங்குள்ள இரண்டொரு ஆசாமிகள் ராமண்ணுவிடம் பொரு

மை கொண்டவர்கள். ராமன்னு இல்லாத சமயத்தில் ரங்கனாதன் செட்டியாரை மடக்கிப் பொருள் தட்ட வேண்டுமென்று காலம் பார்த்திருந்தார்கள். இதுவரை கிடைக்கவில்லை. இப்போது சமயம் வாய்த்திருப்பதை யறிந்தார்கள். இரண்டு பிராமணர்கள் சென்று காஞ்சிபுரத்திலுள்ள மடத்துப் பெருச்சாளியாகிய ஒரு ஐயரை அழைத்து வந்து மதுரையில் அவருக்குப் பண்டாரச் சந்நிதி யலங்காரம் செய்து வண்டி யொன்றை வாடகைக்குப்பேசிச் சில பூஜைப் பாத்திரங்களைத்தயார் செய்து புலித்தோல்களும் சம்பாதித்து வேறு பத்துப் பேரைச் சம்பள ஆட்களாக ஏற்பாடு செய்து விட்டுத் தேவர்குடி ஐயர் இருவரும் முன்னதாகச் செல்வராஜபுரம் வந்து இரண்டு தேங்காயையும் இரண்டு எலுமிச்சம் பழத்தையும் ஒரு சிப்பு வாழைப் பழத்தையும் ஒரு தாம்பாளத்தில் வைத்து எடுத்துக் கொண்டு ரங்கனாதன் செட்டியார் வீட்டினுள் நுழைந்தார்கள். உடனே படுத்திருந்தவர் எழுந்து ஐயர்களை வரவேற்று நமஸ்காரம் செய்தார். இதற்கு முன்பாகவே இருவரும் "மங்களாளிபவந்து" என்று இடக்கரத்தை யடக்கிக்கொண்டுஉட்கார்ந்தார்கள். உட்கார்ந்தவுடன், தாம்பாளத்தை நீட்டினர் ஒருவர். முதலாளி ரங்கநாதர் எழுந்து வாங்கினர். எழுந்து வாங்கினவுடன் "இவன் ஒரு முழு மூடன்; நல்லதட்டுத் தட்டலாம்" என்ற எண்ணத்தைஐயரிருவரும் உறுதிப்படுத்திக்கொண்டனர்.

ரங்கநாதன் செட்டியார்:—என்ன சுவாமிகள்! அபூர்வமாக இந்தப் பக்கம் நோக்கியது? பக்கத்து ஊரி

விருந்தாலும் அதிகமாக இங்கு பார்க்க முடிகிற தில்லையே?

ஒரு ஐயர்:—நமக்குக் காலையிலெழுந்திருந்தால் வேலை ஒழிகிறதா? பிராத காலத்தில் எழுந்து ஸ்நாநம் சந்தி செய்து பூஜை காரியங்களைச் செய்து மகா மந்திரம் ஜபித்து முடிய பகல் ஒரு மணி யாகிறது. பிறகு போஜனத்தைப் பூர்த்தி செய்து விட்டுப் புராண படனம் வேதாராய்ச்சி முதலியன செய்தால் ஆத்துக்காரி அர்த்த ஜாமம் ஆகிவிட்டதென் கிருள். இப்படியாக ஜோலி சரியாக விருக்கிறது.

செட்டியார்:—அடாடா! புண்ணியாத்மாக்கள்! உலக விவகாரம் உங்களைப் பாதிக்கவில்லை. எனக்குப் பாருங்கள் எவ்வளவு தொல்லை. தங்களைப் போன்ற நல்லவர்களுடன் பேசக் கூட நேரமில்லை. உங்கட்கு எப்போதும் உயர்ந்த நோக்கமே யிருந்து கொண்டிருக்கிறது.

ஒரு ஐயர்:—அப்படிச் சொல்லக் கூடாது. பொருளிலார்க்கு இவ்வுலக மில்லை. பிரபுக்களாகப் பிறப்பது லேசான காரியமா? எவ்வளவு தவம் செய்திருக்க வேணும்! எத்தனை சற்பிராமணளுடைய ஆசிர்வாத பலம் வேணும்! லேசான காரியமா?

மற்ருெரு ஐயர்:—அடப்பா! லட்சுமி யல்லவா இங்கே வாசம் செய்கிருள்! விஷ்ணுவின் அம்ஸ மல்லவா பிரபுக்கள்! அதிலும் நமது செட்டியார் உலகத்தையே காப்பாற்றி வருகிறதாகக் கேட்டு எவ்வளவு சந்தோஷம் நமது சுவாமிகளுக் குண்டாயிருக்கி

றது! அவாளுக்கே தோன்றியிருக்கிறபோது ஐச்வரியத்துக்குக் குறைவேது? புகழுக்குக் குறைவேது?

சேட்டியார்:—சுவாமிகள் யார்? அவர்கள் எங்கேயிருக்கிறார்கள்?

முதல் ஐயர்:—அவாள் மெத்தப் பெரியவாள். அவாள்தான் வட நாட்டில் மைசூர் முதலிய சமஸ்தானங்களுக்குக் குருவா யிருந்தவர்களின் பரம்பரையைச்சேர்ந்தவாள். லோக குரு ஆசாரிய சுவாமிகளுக்கு நேரான பரம்பரையில் வந்தவாள். படிப்பா, ஆயிரம் பிரஹஸ்பதியின் புனராவதாரந்தான். நிமிர்ந்து பார்த்தால் நெருப்புப் பிடித்து விடும். அவ்வளவு தபோபல முடையவாள். அவாளுடைய புகழை அந்த ஆதிசேடனாலும் சொல்ல முடியுமோ?

சேட்டியார்:—சுவாமிகள் எங்கே யிருந்து வருகிறார்கள். மட முண்டோ?

மற்றொரு ஐயர்:—அடடா! சுவாமிகள் எங்கே யிருக்கிறார்க ளென்று கேட்பதே அபசார மல்லவா? அவாள் இல்லாத இடமேது? சுவர்க்க மத்ய பாதாளமாகிய திரிபுவனங்களிலும் அந்தர்யாமியாக வசித்துக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும் பக்தாளை உய்விக்கும் பொருட்டுக் குமாரவீரமலைச் சாரலில் ஒரு சிறு மடம் ஸ்தாபித்திருக்கிறார்கள். சுவாமிகள் பேரில் மழையும் படாது; வெயிலும் எரிப்பதில்லை. ஆதலால் அவர்கட்கு மடம் அவசியமில்லை.

ஆனால் தினம் பிரதி அங்கு சந்தேகந் தெளிந்து கொள்ள வருகிற சந்யாசிகள் இருப்பதற்காகவே சிறு மடங் கட்டப்பட்டது. இப்போது ஆயிரக்கணக்காகச் சந்யாசிகள் வருவதால் மழை காலத்தில் சிரமமாகவிருக்கிறது. மைசூர் பரோடா முதலிய மகா ராஜாக்கள் இந்தச் செய்தி தெரிந்தால் இப்பொழுதே மடத்தைக்கட்டி முடித்து விடப் பொருளைக் கொடுத்து விடுவார்கள். ஆனால் அவர்கட்கு இப்பேர்ப்பட்ட புண்ணியம் சித்திக்கவேண்டுமே? யாருக்குக்கொடுத்து வைத்திருக்கிறதோ? சுவாமிகள் தாமாகத் திருவுளம்பற்றினு லல்லாது நம்மைப் போன்றவர்கள் கூடப் புதிய விஷயங்களைக் கேட்கக்கூடாது!

செட்டியார்:--குமாரவீரமலை யென்பது எங்கேயிருக்கிறது?

முதல் ஐயர்:—சுப்பிரமணியக் கடவுள் சூரனை சம்மாரஞ்செய்து திரும்பி இடும்பனைச் சந்தித்த பழனி மலைக்கு அடுத்து வரும்போது தங்கி இளைப்பாறிய மலைக்குக்குமாரவீரமலை என்றுபெயர். அந்த மலைக்குப் பழனியிலிருந்து காட்டு மார்க்கமாக நூறு மைல் தூரம் செல்லவேண்டும். நெருக்கமான காட்டுவழி. பெரிய பெரிய மகான்கள் தாம் அங்குச்செல்ல முடியும். பகல் பன்னிரண்டு மணிக்குக் கூட வெளிச்சம் தெரியாதாம். பெரிய புலிகளின் கண்ணிலிருந்து உண்டாகும் ஜோதியின் வெளிச்சத்தில்தான் செல்லவேண்டும். பெரிய மகான்களை அந்தப்புலிகள் முதுகில் தூக்கிக் கொண்டு செல்லுமாம்.

சேட்டியார்:—அவர்களைப் பார்க்க முடியுமா ?

ஒரு ஐயர்:—இந்தக் காடுகளைக் கடந்து போய் எப்படிப் பார்க்க முடியும்? ஆனால் நமக் கெல்லாம் பூர்வ ஜென்ம புண்ணியம் பலிதமாகிற காலம் சமீபித்து விட்டது ! அவாள் இப்போது ஹாலாஸ்ய க்ஷேத்திரமாகிய மதுரைக்கு எழுந்தருளி யிருக்கிறார்கள். பிரயாசைப்பட்டுச் சென்றால், நமக்கும் அதிருஷ்ட மிருந்தால் கிடைக்கலாம்.

மற்றொரு ஐயர்:—இங்கு அழைத்து வந்து தரிசனம் செய்து வைக்க வேண்டியது மிக முக்கியம். பெரியவாள் திருவடி பட்டாலே இந்த ஊருக்குக் கதி மோக்ஷ முண்டு. ஏற்பாடு செய்யலாமோ? இல்லியோ ?

சேட்டியார்:—ஆஹா! பேஷாய்ச் செய்யலாம். அவர்களெல்லாம் இங்கு வரக் கிடைக்க வேண்டுமே ? அதற்கு என்னாலாக வேண்டியதைச் செய்யத்தயார்.

முதல் ஐயர்:—அப்படியா ! நாங்களென்ன, ஏழை. பிரபுக்களாலேதான் உலகம் நடக்க வேண்டியிருக்கிறது. பணம் உண்டானதால் என்ன பிரயோசனம் ? மனமல்லவா வேண்டும்? உசிதா உசிதந் தெரிந்து செலவு செய்வதல்லவோ உத்கிருஷ்டமான தர்மம் !

மற்றொரு ஐயர்:—பிரபுத்வம் இங்கேதாண்டா நான் பார்த்தேன்! அடாடா! உலகத்திலே இப்படிப்பட்ட தேவாளையும் நாரூபமாகப் பார்ப்பது மிக விசேஷம். வரட்டுமோ, செட்டியாரவாள்! ஆசிர்வாதம் !

இருவருமாகப் புறப்பட்டார்கள். வெளியே வரும்போது தெருத்திண்ணை முகப்பு அறை யொன்றில் லிஷ்கிந்தாபுரி இருப்பதைக் கண்டார்கள். ஒரு ஐயர் அவனிடம் சென்று, "என்ன ராம! ஆசிர்வாதம்" என்றார். ராமன் சிரித்துக் கொண்டு "மலை விழுங்கி மகாதேவனா? ஆசிர்வாதத்திற்குப் பிறகு நமஸ்காரம் ஏறுமா?" என்றான். அப்படியே அவனுக்கு முன்பாக ஐயர் உட்கார்ந்தார். சிறிது நேரம் ரகஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு பிரியும்போது இருவர் முகமும் சந்தோஷக் குறியையே காட்டின.

அதன்மேல் இரண்டு மூன்று நாட்கள் வரை எங்கெங்கோ சுற்றித் திரிந்து விட்டு ஐயரிருவரும் திரும்பினார்கள். அவர்கள் வருகிற சமயத்தில் பிரபு ரங்கநாதரும் அம்பலகாரக் கறுப்பண்ணனும் ராமனும் இருந்தார்கள். இந்த இரண்டு பிராமணரும் உள்ளே நுழைந்தவுடன் கறுப்பண்ணனும் ராமனும் "வாருங்கள்! வாருங்கள்!" என்று கூறி மிக மகிழ்வோடு வரவேற்றார்கள். ரங்கநாதரும் பெரும்பேறு பெற்றவர் போல மரியாதை செய்து வணங்கினர். இரண்டு ஐயர்களும் இடது கையைச் சிறிது தூக்கினார்கள். "வர ஒத்துக் கொண்டார்களா" என்று செட்டியார் கேட்டார். "உங்களுடைய தவமே தவம்" என்றார் மகாதேவ ஐயர். "யார்? என்ன சங்கதி?" என்றான் ராமன். குமாரவீரமலை சுவாமிகளவாள் என்றார் மற்றொரு ஐயர். "பெரிய சுவாமிகளா? மதுரைக்கு வந்திருப்பதாகப் பிரஸ்தாபம். அவர்களா?

அவர்கள் மிகப் பெரியவாளல்லவா? எப்படி இங்கே வர ஒத்துக் கொண்டார்கள்'' என்று அம்பலகாரர் ஆச்சரியத்தோடுகேட்டார். ''நமது ரங்கனுதர் நினைத்து விட்டால் எதுதான் கிட்டாது? சிம்ம லக்ன ஜாதகமென்று கன்னுக்குட்டி ஜோசியர் சொல்லியிருக்கிறுரென்பது அம்பலத்துக்குத் தெரியாது போலிருக்கிறது'' என்று ராமன் வெகு சந்தோஷமாகச் சொன்னுன். மற்றொரு ஐயர், ''நான் அப்பொழுதே யோசித்தேன். சுவாமிகள் சரியென்று தலை யசைக்கவே ஏதோ சங்கதியிருக்கிற தென்று நினைத்தேன். சிம்ம லக்ன ஜாதகமா? சரி,சரி; பாடப்படிக்கப் பரத விதம் பாராட்டத், தேடச் சுகிக்கச் செலவழிக்க மேடமுடன், கர்க் கடகஞ் சிம்மங் கன்னிக்கே யல்லாது, மர்க்கடகத் திற்குண்டோ மற்று என்று பெரியார் கூறுவர். பேஷ்''என்றுர். 'நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசியுமாம்' என்றபடி பெரியவாள் தரிசனம் நமக்கும் கிட்டுகிறதென்று மகாதேவ ஐயர்சொன்னுர். ''என்னென்ன ஏற்பாடுசெய்ய வேண்டுமோ அவ்வவற்றை நீங்கள் யாவரும் கலந்து யோசித்து முடிவு செய்யுங்கள்'' என்று சொல்லி விட்டு அவசரமாக ரங்கனுதசெட்டியார் அறையி னுள்ளே சென்று அங்கிருந்த கண்ணுடிக் குவளையிலிருந்த கனமான தீர்த்தத்தை யெடுத்து உறிஞ்சி விட்டுச் சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு இந்திரலோகக் காட்சியில் லயித்துவிட்டார். குமார வீரமலை சுவாமிகளை வரவேற்க வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அந்த ஊரினு

ள்ள எல்லோருக்கும் வீதியை அலங்காரம் செய்யும்படி சொல்லிவிட்டார்கள். நல்ல ஜனங்களாகையினலே பெரியவர் வருகிருரென்றவுடன் வீதியெல்லாம் பெருக்கிக் கோலமிட்டு வாழைமரம் முதலியவற்ருல் அலங்காரஞ் செய்து தோரணங்கள் கட்டி அழகுபடுத்திக் கொண் டிருந்தார்கள். அங்குள்ள சிவாலயத்தின் பிரகாரத்தில் அழகான கொட்டகைகள் போட்டுச் சீர்ப்படுத்தப்பட்டிருந்தன. வீதியெல்லாம் மேடு பள்ளமின்றிச் செப்பனிடப்பட்டன. ஜமீன்தாருக்கு ஓலை யெழுதி அங்குள்ள யானை குதிரைகள் ஓட்டி வரப்பட்டன. இதற்கிடையில் ஒரு ஐயர் மதுரைக்குச் சென்று சுவாமிகளை அழைத்து வந்து காட்டுக்கம்வாயின் கரையிலுள்ள கூரைக் கொட்டகையில் நிறுத்தி விட்டுச் செய்தி யனுப்பினர். காட்டுக் கம்வாய்க்கும் செல்வராஜபுரத்திற்கும் சுமார் மூன்று மைல் தூரமிருக்கும். ரங்கனுதன் செட்டியார் மட்டும் வண்டியிலேறினர். ஒரு ஐயரைக் கூடவரும்படி வேண்டினர். அவர், "நான் வண்டியில் வரலாமா? சந்நிதானத்தின் முன்னர் உடம்பினுல் புரண்டல்லவா செல்லவேண்டும்? பிரபுக்களுக்குப் பாதகமில்லை. என்ருலும் சமீபித்தவுடனே இறங்கித்தான் செல்லவேண்டும். அரை மயில் தூரத்தில் நின்ருல் நாங்களும் வந்துவிடுகிருேம்" என்று சொல்லி விட்டார். அங்கு நின்ற யானை, குதிரைகள், ஜமீன் பல்லக்கு. கோவிலி லுள்ள ஆலவட்டம் சுருட்டி மேளதாளங்கள் யாவற்றையும் முன்னுலிட்டு நடத்திக் கொண்டு ஐயரும் ரமனும் அம்பலகாரரும் அக்கிரகாரப் பிரா

மனர்களும் மற்ற ஊரிலுள்ள ஜனங்களும் வெளி யூரிலிருந்து வேடிக்கை பார்க்க வந்த ஏராளமான ஜனங்களும் புறப்பட்டார்கள். அம்பலகாரருடைய உத்திரவுப்படி சுமார் ஐந்நூறு பறையர்கள் கொம்பு தப்பு டுடுக்கிட்டி வாங்கா முதலிய கருவிகளுடன் வந்து சேர்ந்தார்கள். இத்தனை ஜனங்களும் ஏக தடபுடலாகப் புறப்பட்டு வருகிற வழியில் ரங்கனுதன் செட்டியாரும் சேர்ந்து கொண்டார். அவர் கையில் கிஷ்கிந்தாபுரி ராமன் ஒரு தங்கத் தாம்பாளத்தைக் கொடுத்தான். அதில் இருநூறு தங்கப் பவுன்களும், தங்கத்தாற் செய்யப்பட்ட ஆயிரத்தெட்டு மல்லிகைப் பூக்களும், இரண்டு வெள்ளித் தேங்காய்களும், இரண்டு தங்க எலுமிச்சம் பழங்களும், நூறு ரூபா பெறக்கூடிய ஒரு பீதாம்பரமும் இருந்தன. இவற்றைக் கொண்டு போய்ச் சுவாமியாரின் முன்னர் வைத்து விழுந்து கும்பிட்டனர். அவர் குழைத்து வைத்த சுவர் மாதிரி மௌனமாக இருந்தார். அவர் முகத்தில் ஒரு குறியும் தோற்றவில்லை. பக்கத்தி லிருந்த ஒருவர் விபூதிச் சம்புடத்தை நீட்டினர். சுவாமியார் அதிலிருந்த விபூதியைக் கை நிறைய அள்ளி மகாதேவ ஐயர் கையில் வைத்தார். அவர் 'பிரசாதம், பிரசாதம்' என்று தானும் பூசிக்கொண்டு நின்ற எல்லாருக்கும் கொடுத்தார். "சுவாமிகள் சூத்திராளுடைய நேரான சம்பந்தம் வைத்துக் கொள்ள மாட்டார்கள்; மெத்த வைதிகம்." என்று ரங்கநாத செட்டியாரிடம் சொன்னர் மலைவிழுங்கி மகாதேவய்யர். சுவாமியார் மட்டும் பல்லக்கிலும் மற்ற யாவரும் கால்

நடையாகவும் மாலை ஏழு மணிக்குப் புறப்பட்டார்கள். ஏராளமான தீவர்த்திகள் கொளுத்தப்பட்டன. மத்தாப்புகளொருபுறம். வாணக்காட்சிக்கு மட்டும் அன்று ரூபா ஆயிரம் தீர்ந்தது. அன்றிரவு முதல் ஒவ்வொரு வேளையிலும் வடை. பாயசத்துடன் பிராமண போஜனம் ஒரு ரூபா தக்ஷிணையோடு நடைபெற்றது. மகாதேவய்யரிடம் பொறாமைப்பட்டவரிற் சில பிராமணர் திருப்தியடைந்து விட்டனர். மறுநாட் காலையில் பதினொரு மணிக்கு ரங்கனுதன் செட்டியாரை அழைத்துக் கொண்டு சுவாமியாருக்கு முன்னே சென்றனர். சுவாமியாரை விழுந்து கும்பிட்டார் செட்டியார். சுவாமியார் (மகாதேவய்யரைப் பார்த்து), "நல்ல பாத்ரம்; மடங்கட்டலாம். இங்கேயும் ஏற்பாடு செய்யச்சொல். க்ஷேமமுண்டாகும். இதைக் கொடு" என்று விபூதியை மகாதேவய்யர் கையில் கொடுத்தார். செட்டியாரை மண்டியிட்டு உட்கார வைத்தார்கள். அவர் தலையில் சில மஞ்சள் அரிசியைப் போட்டு பத்து நிமிஷம் வரை கும்பிட்டுக் கொண்டிருக்க வைத்து ஏதேதோ சமஸ்கிருதத்தில் படித்தார்கள். பிறகு விபூதியைக்கொடுத்தார்கள். வாங்கிக்கொண்டு செட்டியார் புறப்பட்டார். மகா தேவய்யரும் அரை மணி நேரங்கழித்து வீட்டுக்கு வந்துசேர்ந்தார்.

மகாதேவய்யர்:—உங்களுடைய பாக்கியமே பாக்கியம். 'நல்ல பாத்திரம்' என்று உங்களை ஆசிர்வதித்த திருக்கிறதே. என்ன அருமை! பார்த்தீர்களா? அச்சதை போடச் சொல்லி வேதபுராண மந்திரங்களை ஜபிக்கச்சொன்னது யாருக்குங்கிடை

க்காதநாகும். இதெல்லாம் கிடக்கட்டும். அவாளுடைய வாக்கினால் 'மடங் கட்டலாம்' என்று சொன்னது லேசான காரியமா? மநுவாதி மன்னர்களுக்குங் கிடைக்குமா? 'க்ஷேமமுண்டாகு' மென்று எத்தனை கோடி கொடுத்தவரையும் இந்தப் பரம்பரையார் வாழ்த்தினது கிடையாது; நினைத்ததுகூடக் கிடையாது. என்ன உங்களுடைய பாக்கியம்! என் உடம்பைப் பார்த்தீர்களா? மயிர்க்கூச்செறிகிறது. அதெல்லாம் இருக்கட்டும். இங்கே ஒரு அநாதை ரக்ஷகாலயம் கட்டச் சொன்னது என்னவிசேஷம். இங்கு ஒன்று ஏற்படாதிருப்பது உங்கள் பெருமைக்குச் சரி யில்லை என்று சுவாமிகள் எப்படிக் கண்டுசொல்லி விட்டார்கள்? பார்த்தீர்களா?

அம்பலகாரர்:— அதிலென்ன சந்தேகம்? இவ்வளவு பேச்சென்ன? சுவாமிகள் வந்தபோதே நமக்கு நல்ல காலம் என்பது தெரிந்தது தானே?

செட்டியார்:—செய்ய வேண்டியது தான். என்னவாகும்? கணக்குப் போடுங்கள்.

இந்தச் சமயத்தில் கிஷ்கிந்தாபுரி ராமன் ஒரு அழகிய கண்ணாடிக் குவளையில் நிறையப் பானகம் கொண்டு வந்து கொடுத்தான். குடித்துவிட்டுப் பிரபு ஒலுகில் சாய்ந்து கிடந்தார். மகாதேவய்யர் கணக்குப்போட வாரம்பித்தார். 'சுவாமிகளுடைய மடத்திற்கு ரூபா ஐயாயிரம். அவாள் வந்துபோகச் செலவுக்காக ரூபா ஆயிரம். உள்ளூர் மடத்துக்குக் கட்டிடம் ரூபா நாலாயிரம். பாத காணிக்கை பவுன் இரு

நூறுக்கு ரூபா மூவாயிரம். மற்றபடி பிராமண போஜனம் மற்றவர் சாப்பாட்டுச் செலவு என்னய வகையில் ரூபா மூவாயிரம். இவ்வளவுதான்' என்று முடிவுசெய்துவிட்டார். இந்தத் தொகைக்கு உத்தரவாகி விட்டது. அடுத்த நாள் அஸ்திவாரக்கல் நாட்டுதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டது. இவ்வைபவத்திற்குயாவரையும் அழைக்க வேண்டுமென்றும், ஒரு அழைப்புப் பத்திரிகை அச்சிட வேண்டு மென்றும் முடிவு செய்தார்கள். அங்கிருந்த ஒருவருக்கும் அழைப்புப்பத்திரிகை யெழுதும் விதம் மட்டுப்படவில்லை. பஞ்சாங்கக் காரரைக் கூப்பிடலா மென்று ராமன் சொன்னான். அவருக்கு நாள் பார்க்கத் தெரியுமே தவிர இந்த வேலைக்கு அவர் உபயோக மில்லையென்று பக்கத்திலிருந்த ஐய ரொருவர் சொன்னார். வேறொருவரும் படித்தவர்களாகத் தட்டுப் படவில்லை. இந்தப் பேச்சு வெளித்திண்ணையிலிருந்த ஒருவருடைய காதில் விழவே அவர் தாம் எழுதித் தருவதாகச் சொன்னார். சரியென்றார்கள். பின்வருமாறு அழைப்புப் பத்திரிகை யெழுதி முடிக்கப்பட்டது:—

செல்வராஜபுர சுத்தநீர்த் தடாக உரிமையாளரும், ஹிந்து பாலிகா பாடசாலை அதிபரும், ஈச்சம்பட்டித் தாலுகா ஸ்தாபனா அங்கத்தினரும், பெரிய பிரபுவும், கொடை வள்ளலுமான ஸ்ரீமாந் ரங்கநாதன் செட்டியார் அவர்களால் நூதனமாக ஏற்படுத்தப் பெறுகிற சன்யாச தர்ம ஸ்தாபன மடத்திற்கு நாளது குரோதிஹு ஆடிமீ ௨௪வ. வெள்ளிக்கிழமை காலை மூன்றே முக்கால் நாழிகைக்கு சந்யாச தருமமடத்தின் சிரோரத்நம் நாலுவேத ஆறு சாஸ்திர பதினெண் புராண அறுபத்துநான்கு கலைஞான சர்வ

சாஸ்திர பாரங்கத பரமத சம்வாத உத்தண்ட விரபராக்கிரம சௌரிய சாக்ஷாத் ஜகத் குரு அம்பிகா பீட பாரம்டர்ய கம்பீரா சாரிய பிரஹஸ்பதி புனரவதார விசேஷ ஸ்ரீலஸ்ரீ மகாதேவ கோவிந்த யதீந்த்ர பரமாச்சாரிய சுவாமிகளால் அஸ்திவாரம் செய்யப்படும். எல்லார் வரவும் எதிர்பார்க்கப் பெறுகிறது.

இதனை அச்சிட்டு எல்லா வூர்கட்கும் அனுப்பி வழங்க ஏற்பாடாய் விட்டது. இம்மாதிரி அழகாக அழைப்புப் பத்திரிகை யெழுதிய வராகிய மகாகவிப் புலவருக்கு ஏதாவது உதவி செய்வதாக ராமன் வாக்களித்தான். குறித்தபடி காரியங்கள் நடைபெற்றன. ஜனங்கள் ஏராளமாக வந் திருந்தார்கள். கட்டிடங் கட்டக்குறிப்பிட்டிருந்த இடத்தில் பெரிய கித்துக் காவணம் போடப்பட் டிருந்தது. அதன் நடுவில் போடப்பட்டிருந்த ஒரு புலித்தோலாசனத்திலிருந்தபடியே சுவாமிகள் அஸ்திவாரக் கல்லை நாட்டினார். உடனே பின்வருமாறு பட்டத்தையும் ரங்கனாதன் செட்டியாருக்குச் சூட்டுவதாகச் சொன்னார். எல்லாரும் கரகோஷஞ் செய்தார்கள். பட்டம் பின்வருமாறு:—‘‘ராஜாதி ராஜ ராஜ பூஜித ராஜஸ்ரீ பரமைஸ்வரிய பரமௌதாரிய சர்வகலா சார சிரவணோத்தாரண ஸ்ரீ வல்லி தேவசேனா சமேத சிவ சுப்ரஹ்மண்ய பாதபூஜித ஆசார்ய சந்நிதான ‘பாத உத்தூளன செல்வ்ராஜபுரவாச கெம்பீர’’ என்பதாகும். இவ்வளவோடு பகல் வைபவம் முடிந்தது. அன்று ஏராளமான உத்தியோகஸ்தர்களும் பெரிய மனிதர்களும் வந்திருந்தபடியால் இரவில் ஒரு பார்ட்டி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் பொருட்டுக் குறிப்பி

ட்ட சிலர் தங்கி யிருந்தனர். மாலையில் செட்டியாருடைய "மேனகா விலாஸ்" பங்களாவின் மேன்மாடியிலிருந்த தாலுகா சபைத் தலைவர் "ஹிந்து" பத்திரிகை கிடைக்குமா? என்று கேட்டார். செட்டியார் விழித்தார். பக்கத்திலிருந்த மகாகவிப் புலவர் இங்கு கிடைக்காது என்றார். தாலுகாத் தலைவர் 'இந்த வூரில் ஒரு ரீடிங் ரூம் கிடையாதா?' என்று வெறுப்போடு கெட்டார். இந்தச்சங்கதிகள் என்னவென்றே நமது செட்டியாருக்குத் தெரியவில்லை. இரவு விருந்து நடந்தது. காலையில் யாவரும் சென்று விட்டார்கள். இரவு நடந்தவிஷயங்களைக் கவனித்தவராதலால் மகாகவிப்புலவர் ரங்கனுதரிடத்தில் வந்து இந்தவூரில் ஒருரீடிங்ரூம் கட்டாயம் வைக்கவேண்டுமென்றார். ராமனும் செய்யலாம் என்றான். அதில்லாதிருப்பது சமயத்தில் பெரிய அவமானமாக விருப்பதால்உடனே ஒரு இடம் தயார் செய்து அதில் பல பத்திரிகைகளை வரவழைத்துப் போட வேண்டுமென்று முடிவு செய்தார்கள். சுவாமியார் புறப்பட்டு விட்டார். மகாதேவய்யரும் தமது வேலைகளில் நாட்டம் செலுத்தினர். ஆனால் சன்யாச தர்ம ஸ்தாபன மடத்தில் தினந்தோறும் சுமார் இருபது பிராமணருக்குச் சாப்பாடு நடந்து வருகிறது. குமாரவீரமலை சுவாமியாரின் பாதரக்ஷை இரண்டை ஒரு அலமாரியில் வைத்துத் தினந்தோறும் பூஜை செய்யப்பட்ட பின் உணவளிக்கப்படும். இந்த மடத்தின் அதிகாரம் பூராவும் மகாதேவய்யர் வசத்தி லிருந்து வந்தன. சுவாமியாருக்கு ஏதோ கொஞ்சப் பணத்தைக் கொடுத்து ஓட்டிவி

ட்டுப் பாக்கியைப் பலரும் பங்கிட்டுக்கொண்டார்கள். இது சிலருக்குத் தெரியுமானாலும் பயந்து சொல்ல வில்லை. மகாதேவய்யர் மிக்க வாயாடியாதலால் பெரும்பாலாக அந்தப் பக்கத்தில் நடைபெறுகிற பிராமண போஜனங்களில் தவறாது சாப்பிட வேண்டுமானால் அவருடைய பகை கூடாதென்று சிலர் பேச வில்லை. அம்பலகாரரும் சேர்ந் திருப்பதால் இரவிலே வீட்டில் நெருப்பை வைத்து விடுவாரென்று சிலர் பயந்தனர். உத்தியோகஸ்தரின் தயவு ராமனுக்கிருப்பதால், கேஸ் போட்டு இழுத்து விடுவான் என்று நடுங்கிச் சிலர் மௌன விரதம் பூண்டனர்.

அத்தியாயம் கக.

தமிழ்ப் புலவர்.

நமது மகா கவிப் புலவர் ஒழுங்காகப் படித்தவராயினும் பலவற்றை மறந்து விட்டார். இவருக்கு வயது இப்போது நாற்பத் தெட்டு. இதற்குள்ளாக அனுபவிக்க வேண்டிய துன்பம் அனைத்தையும் அனுபவித்து விட்டார். தமிழ்ப்படித்த ஒருவன் வேறு தொழில் அவனுக்கு இயல்பாகவே யில்லா விட்டால் தமிழ்ப் படிப்பு என்பதற்கு துன்பப் படிப்பு என்று பொருள் கூறத் தயாரா யிருக்க வேண்டியது தான். தமிழைப் படித்த ஒருவன் துன்பத்தை நன்றாகப்படித்து விடுவான். தமிழுக்கும் தரித்திர நாச்சியாருக்கும் மிக உறவுண்டென்றுதெரிகிறது. நமது தென்னாட்டி லுள்ள பலர், நண்பர்கள் இருவருடைய ஒன்

றிய நட்பைப் பிரிப்பதில் கைகாரராக விருக்கின்ற னர். ஆனால் இந்தத் தமிழ்த் தாய்க்கும் தரித்திர நாச்சியாருக்கு முள்ள நேசத்தைப் பிரிக்க யாராவது முற்பட வேண்டுமென்று வேண்டுகிறேன். பெரிய பெரிய வித்துவான்க ளெல்லாரும் திண்டாடுகிற போது நமது மகா கவி என்ன செய்யப்போகிறார்? பாவம்! நன்ருகப் படித்து வெளிவந்தபோது ஆண வங் கொண்டு பல வித்துவான்களையும் பிரபுக்களையும் அலட்சியம் செய்தபடியால் இவர் வாழ்வு அந்தரமாகி விட்டது. கலாசாலைகளில் அடங்கி வேலை செய்ய மாட்டாரென்று ஓட்டிவிட்டார்கள். கடைசியில் சாப் பாட்டுக்குப் பெரிய திண்டாட்டமாகிவிட்டது. இவ ருடைய பொல்லாத காலத்திற் கேற்பக் கல்யாண மாகி யிருந்தபடியால் இரண்டு குழந்தைகளும் பிறந் து விட்டன. வேலை கிடைக்கவில்லை. உணவுக்கு ஒன்று மில்லாதபடியால் வீட்டில் தினந்தோறும் சண்டைக்குக் குறைவில்லை. பிள்ளைகட்கு அடியும் திட்டும் குறைவின்றிக் கிடைத்தன. இவரும் பலமா கத் தாக்கப்படுவ துண்டு. எல்லாம் பசியின் கொடு மையே யாகும். உணவின்றிக் கஷ்டப்பட்டு இலையுங் குழையுந் தின்று இவர் உடலும் வாடி வதங்கிக் கறு த்துச் சிறுத்து உருக்குலைந்து அலைந்து திரிந்தார். கடைசியில் சாத்தன்குளம் ஜமீன்தாருடைய வீட் டில் ஒரு உதவிக் கிளார்க்கு உத்தியோகம் கிடைத் தது. அதற்குச் சம்பளம் மாதம் இருபது ரூபாய். நெல் அளந்து சாக்கில் கட்டச்சொல்லிக் கணக்குக் குறிப்பதும் விற்றுக்கணக்குச்சொல்லுவதுமே வேலை

யாகும். இந்த வேலை வருஷ முழுவது முண்டு. பாதி நாள் சுற்றுக் கிராமங்களில் திரிந்தலைய வேண்டி யிருக்கும். செல் தூசி மூக்கை யடைக்கும். 'தெய் வமே! என் தலைவிதி இப்படியா ஆகிவிட்ட' தென்று அழுவார். இந்த உத்தியோகத்தில் சுமார் ஐந்து வருஷங்கள் கழித்தார். இருபத்தைந்து ரூபா சம்ப ளம் நடக்கிறது. இதற்கிடையில் லீவு கிடைத்த தில்லை. அங்கு யாசகத்துக்கு வந்த ஒரு ஐயர் சொன் ன யோசனைப்படி ஒரு மாதம் வெளியில் சென்று வேலை தேடிப்பார்க்கலா மென்று கருதினர். இதை ராஜிநாமா செய்துவிட்டால் சாக வேண்டிய நிலைமை யிலிருந்த படியால் லீவெடுத்துக் கொண்டு போகலா மென்று ஜமீன்தாருக்கு மனுப் போட்டார். பெரிய கிளார்க்கினிடம் தெரிவியாமல் நேரே ஜமீன்தாருக்கு மனு போட்டதால் பெரிய கிளார்க் கோபங் கொண்டு ஜமீன்தாரரிடம் கோள் மூட்டி விட்டார். லீவு கிடை க்கவில்லை. பிறகு சில மாதங்கள் இருந்தார். வயிற்று வலி யுண்டாகி மிகக் கஷ்டப்பட்டார். அங்கு வந்த ஒரு வயித்தியர் பழனிக்கு முடிவைத் திறக்கினல் இந்த வயிற்றுவலி நீங்கிவிடுமென்று சொன்னர். சரி யென்று முடி வைத்துக் கொண்டார். ஒரு வருஷம் கழிந்தது. ஜமீன்தாரிடம் உத்திரவு கேட்கவே, பழ னிக்குப் போகிறவரைத் தடுத்தல் கூடாத காரியமா தலால் ஜமீன்தார் உடனே ஒருமாத லீவு கொடுத்து விட்டார். புலவரும் புறப்பட்டுப் பழனிக்குச் சென்று முடி யிறக்கி விட்டு ஆண்டவனை நோக்கிப் பின் வரு மாறு மிக வருத்தத்தோடு பாட்டுகள் பாடினர்:—

கனியில்லை யென்றதற்காக் கரைந்துநீ யிங்குற்றாய்
வனமுலையா ளுனைத்தேடி வழங்கியதும் பொய்யாமோ
இனமில்லை வீடில்லை எழிலில்லை உண்ணுதற்கிங்
கனமில்லை நீயருள்வாய் ஆறுமுக வேலவனே.

கஞ்சியென்று வாய்விட்டுக் கதறிடுமோ வொருகுழந்தை
மிஞ்சியது சாவனென வீழ்ந்திடுமோ வொருகுழந்தை
செஞ்சொலிழந் தென்மனைவி சீறுகிறாளென்செய்வேன்
அஞ்சலென நீயருள்வாய் ஆறுமுக வேலவனே.

சென்னியோ ராறுடையாய் செல்வக் குமரேசா
பன்னிரண்டு கண்ணுடைய பாவலனே—என்னுதர
நோயகற்றி ரட்சித்தாய் நொய்ய குழந்தைபசி
நோயகற்றத் தாமதமே னோ.

காலமோ ராறுங் களிப்புடனீ உண்ணுகிறாய்
கால மொருபொழுதுங் கஞ்சியின்றி—மேலுஞ்சேர்
பெண்டுபிள்ளை பெற்றுப் பெருநோவுகொண்டுழன்றேன்
கண்டபினுஞ் சோதனையோ கா.

என்று பாடிவிட்டு மலையினின்றுங் கீழிறங்கினார். அங்கு நின்ற சில பிராமணர் "செல்வராஜபுரம் ரங்கநாதன் செட்டியார் பெரும் பணக்காரர்; இல்லையென்னாது கொடுக்கிறார்; குமார வீரமலை சுவாமிகளை வரவழைத்து ஏராளமான உபசாரங்கள் செய்யப் போகிறார்" என்று பேசிக்கொண்டிருந்தனர். இதனைக் கேட்ட புலவர் புறப்பட்டுச் செல்வராஜபுரம் நோக்கி நடந்தார். பின்னர் நடந்த சம்பவங்கள் நமது வாசகர்கள் அறிந்தனவே யாம்.

நமது மகாகவிப் புலவர் நீண்ட நாட்களாகத் தமிழ்ப் பழக்கத்தை விட்டுவிட்ட படியால் இலக்கண நுட்பங்களையும் இலக்கிய நயங்களையும் ஞாபகப்படுத்

இக் கொள்ளவேண்டிய தவசியமா யிருந்தது. படிப்பு ஏறவேண்டிய சந்தர்ப்பத்தில் இவருக்கு அகங்கார முண்டாகிவிட்டபடியால் ஆராய்ச்சித் திறமை சிறிது குறைவாகவே யிருந்தது. என்றாலும் செல்வராஜ புரத்தின் சுற்றுப் பக்கத்தில் தமிழ் வாசனையே குன்றிப் போய்விட்டபடியால், நமது புலவரை எதிர்ப்பவர் எவருமே கிடையாது. இவரிடத்தில் ரங்கநாதன் செட்டியாருக்கு நல்ல மதிப்புண்டாகிவிட்டது. நமது புலவர் கதைகள் சொல்வதில் நிபுணராக விருந்தார். அனுபவம் அதிகமாகிவிட்டால்—அதிலும் கூர்மையான புத்தி யிருந்து வாழ்க்கையில் கஷ்டத்தை யனுபவித்து விட்டால் கதை கட்டுவது தண்ணீர் பட்ட பாடாகுமல்லவா? தரித்திரக் கடலுள் திளைத்த நமது புலவருக்கு ரங்கநாதன்செட்டியார் மகிழுமாறு கதை சொல்வது மிக எளிதாகவே யிருந்தது. இப்படியாகவே சில நாட்கள் சென்றன. விநாயக ஷஷ்டியன்று செட்டியாரும் ராமனும் அம்பலகாரரும் இன்னும் பல பிரமுகர்களும் ஊரிலுள்ள ஆண் பெண் மக்களும் கூடி யிருக்கும்போது பிள்ளையார் கோவில் முன் மண்டபத்தில் இருந்து தாம் இரங்கநாதன் செட்டியார் பேரில் செய்திருந்த பல பாடல்களைச் சொல்லிப் பொருள் விரித்தார். அவற்றுள் சிற்சில பாட்டுகளை இங்கு தருகிறேன்:—

தேறுவினைக் கற்பகத்தைச் சிந்தா மணிதன்னை
ஆனகொடை வள்ளலென வாரறைவார்—ஞானநிறை
தெய்வக் கொடையறிஞன் சீரங்க நாதனெனும்
பெய்யுமுகில் தோன்றியதற் பின்.

தாரங்க நாதன்பாற் றாழாத கையுண்டோ
பேரறங்க ளீண்டே பிறங்குமால்—சீரங்க
நாத னிவனென்றே நல்லாளும் வீற்றிருந்தாள்
ஏதங்க ளுண்டோ விவற்கு.
எல்லாரும் வாழ இனியநீ ரூட்டுவித்தான்
இல்லாரு மின்புற் றிருக்கவே—கல்விநிறை
சாலை சபையமைத்தான் சந்யாச தர்மமடம்
மேலுமமைத் தானரங்க வேள்.

இவற்றைப் பாடிப் பொருளை விசேஷமாக விரித்துச் சொல்லவே ரங்கநாதன் செட்டியாருக் கிருந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. பிறகொருநாள் வீட்டிற்குச் சென்று செட்டியாரைப் பார்த்து, "நான் இங்கே யிருப்பதானால் என் குடும்பத்தை அழைத்து வர வேண்டுமே" என்று கேட்டார். "நன்றாகச் செய்யுங்கள்" என்றார் பிரபு. "சம்பளமாக ஏதாவது செய்யக் கூடுமானாலும் சரி. இல்லாவிட்டால் எனக்கும் என் மனைவிக்கும் இரண்டு குழந்தைகட்கும் கஞ்சி வார்த்துக் காப்பாற்றினாலும் சரிதான்" என்று இரங்கிய குரலில் சொன்னார். புலவர் பக்கத்திலிருந்த ராமன் "கற்பகத்தைச் சேர்ந்துவிட்டால் கவலையேதுகாணும்? பாக்கியம்! போய்க் கூட்டிக்கொண்டு வாரும்" என்று கூறினான். புலவர் புறப்பட்டுச் சென்று மனைவி மக்களை அழைத்து வந்துவிட்டார். வந்தது முதல் ஒழுங்காகத் தினந்தோறும் பிள்ளையார் கோயிலில் திருவிளையாடற் புராணத்தை ஒவ்வொரு படலமாகப் பக்திச் சுவை ததும்ப இன்னுரைகளால் எடுத்துப் பிரசங்கித்து வந்தார். ஊரிலுள்ள ஆண் பெண் யாவரும் புலவரிடத்தில் மிக்க

அன்புடையவர்களாகிவிட்டனர். இவரது படிப்பின் பெருமையை அவ்வூர் ஜனங்கள் அறியவே, தங்கள் மக்களையும் படிப்பிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். இக் கருத்தை ரங்கனுதன் செட்டியாரிடம் தெரிவிப்பதற்காகச் சென்றார் புலவர். அந்தச் சமயத்தில் ரங்கநாதர் ஆன்மா தன்வச மழிந்திருந்தபடியால் புலவரை வாயில் வந்தபடி பேசி யேச ஆரம்பித்தார். புலவர் மிகக் கவலைப்பட்டுச் சமாதானமாகச் சில வார்த்தைகளை மொழிந்தார். அவற்றிற்குப் பதிலாக விழிகளை உருட்டி விழித்துக்கொண்டு ஒன்றற்கொன்று சம்பந்தமின்றி "யாரடா? உன்னை வைத்த இடத்தில் எங்கேடா கிளாசு? ஊத்துடா! ஏண்டா! தண்ணீரை விட்டாய்? எங்கேடா உருட்டுறாய்? தா ஹா" என்று சொல்லிக்கொண்டு விரைவாக வந்து புலவர் கழுத்திலே கையைப் போட்டு மடக்கினர். செட்டியாரின் முகத்துக்கு முன்னால் தன் முகத்தைச் சேர்க்க முடியவில்லை. சாராய நாற்றம் பொறுக்க முடியாமையால் செட்டியாருடைய கையை மிக்க வருத்தத்தோடு பிரித்தார். ராமன் ஓடிவந்து "இதென்னடா சனியன்" என்று சொல்லிக்கொண்டு கையைப்பற்றி இழுத்தான். "ஆமடா சனியன்" என்று சொல்லிக்கொண்டே ரங்கநாதர் ராமன் கழுத்தைக் கட்டிப் பிடித்துத் தொங்கினர். அவன் இழுத்துக்கொண்டு போய் ஒரு கட்டிலின் மேல் போட்டான்.

புலவர் தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியமென்று வீடு போய்ச் சேர்ந்தார். கவலை பெரிதாகிவிட்டது. இதுவரை ரங்கநாதன் செட்டியார்

குடிவழியில் ஆரம்பித்துவிட்டார் என்று பலர் சொல்லக் கேட்டிருந்தார். ஆயினும் இவ்வளவு மோசமாக இருக்குமென் றெண்ணவில்லை. இப்போது அவருடைய நிலைமை நேரிற் கண்டனுபவித்த படியால் ஒரு பக்கம் வருத்தமும் மற்றொருபக்கம் இரக்கமும் பிறிதொருபக்கம் பயமும் அவருக் குண்டாயின. படாத பாடுபட்டுக் கஞ்சிக்குத் தவித்து இங்கு வந்து சேர்ந்தோமே; இங்கும் வழியற்றுப் போகும்போலிருக்கிறதே யென்று வருந்தினர். ஐயோ! இவ்வளவு காசும் பணமும் கீர்த்தியும் பெற்ற இவர் ஏன் கட்குடித்துக் கெட்டுப் போகிறாரென்று இரங்கினர். இவரோடு கலந்து பழகுகிற நமக்குப் பொது ஜனங்களாலும் இவர்களாலும் என்ன தீங்கு வந்து சேருமோ வென்று பயந்தார். இப்படியாக இவர் அல்லலுற் றழுங்கிக் கொண்டிருக்கும்போது கிஷ்கிந்தாபுரி ராமன் ஓடி வந்து புலவரை நோக்கிப் புன்னகையோடு "என்ன! செட்டியார் உங்களோடு அளவளாவினாற்போலிருக்கிறதே" என்றான். புலவர் திரும்பி அவனைவெறுப்போடுநோக்கினர். நோக்கி "என்னய்யா, இப்படிப்பட்ட பிரபுவுக்கு இது தகுமா?" என்றார். "நா னென்ன செய்வேன்? சொல்லித்தான் பார்க்கிறேன்; வர வர மேலே போகிறதன்றிக் கீழே யிறங்குவதாகக் காணவில்லை. ஏதோ அவர் தலைவிதி அவ்வளவுதான்" என்று ராமன் சொன்னான். பிறகு சிறிது நேரம் மௌனமாக இருவரும் இருந்தார்கள். புலவரைப் பார்த்து, "நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு வேண்டியதைச் சொல்லுங்கள்.

செய்துவிட ஏற்பாடு பண்ணுகிறேன். இந்தச் செய்தியை மட்டும் வெளியில் விடவேண்டாம்'' என்று கெஞ்சினன் கிஷ்கிந்தாபுரி.

புலவர்:—எனக்கென்ன வேண்டி யிருக்கிறது? கேட்டுக்கொண்டுதானே நான் வந்தேன். எனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். வேறொன்றும் தேவையில்லே. இவ்வூர் ஜனங்கள் இலக்கிய இலக்கணப் படிப்பு சொல்லிக் கொடுக்கும்படி கேட்டார்கள். அதற்கு ஒரு கலாசாலே யேற்படுத்தினல் அதிலிருந்து கல்வி கற்பிக்கத் தயாரா யிருக்கிறேன். எனக்குக் குடி யிருக்க இந்த வீடே போதியதாகும்.

ராமன்:—சரி; நீங்கள் இப்போது இருக்கிற வீடு சுமார் இரண்டாயிர ரூபா பெறுமென்று நினைக்கிறேன். அதனைத் தங்கள் பேருக்கே சாசனம் செய்யும்படி பார்க்கிறேன். இப்போ திருக்கிற ரீடிங்ரூம் கட்டிடத்திலேயே ஒரு கலாசாலைக்கு ஏற்பாடு செய்கிறேன். தங்கட்கு எவ்வளவு சம்பளம் வேண்டும் ?

புலவர்:—பளர் வழக்கமாக நெல் தருவதாகத் தெரிவித்திருக்கிருர்கள். அது போக மேற் செலவுக்கு முப்பது ரூபாவுக்குக் குறையாமல் கிடைத்தாற் போதும்.

ராமன் இதைக் கேட்டுக்கொண்டு புறப்பட்டான். விடியற்காலம் எழுந்தவுடன் முதல் நாள் நடந்தவற்றை ரங்கநாதருக்கு எடுத்துச் சொல்லி மானங் கெட்டுப்போக விருந்ததைப் புலவர்தான்

காப்பாற்றினர். ஆதலால் அவருக்கு வேண்டியதை இன்றைக்கே செய்ய வேண்டுமென்று சொன்னன். "சரி, இஷ்டப்படி செய்" என்றார் பிரபு. நாலாயிரம் ரூபா முதலெடுத்து வேறொருவரிடம் கொடுத்து விட்டார்கள். புலவர் குடியிருந்த வீடும் அவருக்குத் தான சாசன மெழுதியாய்விட்டது. புதிதாக ஏற்ப டுத்தப்பட்ட கலாசாலைக்குப் புலவரின் விருப்பப்படி "குழந்தை வடிவேலன் செந்தமிழ்க் கலாசாலை" என்ற பெயர் சூட்டப்பட்டது. "தமிழ் வளர்ப்புக் கழகம்" என்ற பெயருடன் ஒரு சபையையும் ஸ்தா பித்து அதற்கு அவ்வூரிலுள்ள பல பிரமுகர்களை அங்கத்தினராக்கி அச் சபையின் சார்பில் இந்தக் கலாசாலையை நடத்துவதென்றும் அந்தக் கழகத் திற்கு ரங்கநாதன் செட்டியாரே நிரந்தர அக்கிரா சனராக விருப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. அந்தத் தினத்திலேயே ரீடிங் ரூமுக்கும் "ஆனந்த வல்லி இலவச வாசகசாலை" என்ற பெயரிடப்பட் டது. இந்த ஸ்தாபனங்களியாவும் நன்ருக நடைபெ ற்று வருகின்றன.

வர வர ரங்கநாதர் குடியில் ஈடுபட்டு விட்டார். காலை, பகல், மாலை, இரவு என்ற பேதமின்றிக்குடியை யாரம்பித்து விட்டார். குடி வழக்கம் அதிகப்படவே சமையற்காரன் நிலைக்கவில்லை. குடித்துவிட்டுப் பே சுவதாலும் அடிப்பதாலும் சட்டி முட்டிகளை உடைப் பதாலும் சமையற்காரர்கள் ஓட்டம் பிடித்தார்கள். மங்கலம்பட்டி அம்பலகாரரும் ஆட் சேர்த்து அனுப் பிப் பார்த்தார். முடியவில்லை. இப்படிப்பட்ட நிலை

யில் செல்வராஜபுரத்திற்குச் சமீபத்திலுள்ள மனைக்குடி யென்ற கிராமத்திற்குத் தினந்தோறும் ரங்கநாதரின் வண்டி இரவில் போய் வந்துகொண்டிருந்தது. இதனைக் கண்ட பலரும் சந்தேகங் கொண்டனர். இந்த சந்தர்ப்பத்தில் புகையிலை ராமண்ணாவையர் காசியி லிருந்து வந்துசேர்ந்தார். வந்தவன்று மாலையில் மூன்று நான்கு கங்கைத் தீர்த்தச் செம்பையும் விபூதி குங்குமங்களையும் எடுத்துக்கொண்டு செட்டியாரைப் பார்க்கவந்தார். கதவடியில் வந்ததும் ராமன் ஓடிவந்து, "ஏதோ மயக்கமாக விருக்கிறதென்று உள்ளே செட்டியார் படுத்திருக்கிறார்; எழுப்ப வேண்டாமென்று சொன்னார்" என்று சொல்லிக்கொண்டே வழியை மறித்துக் கொண்டு நின்றான். ராமண்ணாவுக்குச் சந்தேகம் பலப்பட்டுவிட்டது. ஒரே அறையாக அறைந்து ராமனைத் தள்ளிவிட்டு உள்ளே போகமுடியும். என்றாலும் செட்டியாரைச் சரிக்கட்டிவிட்டதால்தான் இப்படித் தைரியமாக நம்மிடம் கூறுகின்றானென்று கருதிப் பிறகு வருவதாகக் கூறிவிட்டுத் திரும்பிச்சென்றார். பிறகு மாலை ஐந்தரை மணிக்குப் போனார். செட்டியாரும் ராமனும் இருந்தார்கள். ராமண்ணாவும் உட்கார்ந்தார். செட்டியார் ராமண்ணாவைக் கும்பிட்டு வரவேற்றார். ராமண்ணாவும் பிரசாதத்தைக் கொடுத்தார். ரங்கநாதருடைய முகத்தில் அருளென்பதேயில்லை. எதையோ பறி கொடுத்தாற்போல் விழிப்பதையும், தான் இருப்பதால் ஏதோ இடஞ்சல் படுவதைப்போல் தோன்றுவதையும் தெரிந்து

கொண்டு, லேசாக—மறைவாக இருந்த குடி பலப்பட்டு விட்டதென்று தெரிந்துகொண்டார். புறப்பட்டு வீடு சென்றார். அங்கிருந்து சிலவற்றைத் தெரிந்துகொண்டார். பெண் பள்ளிக்கூடத்து வாத்தியாரம்மாளையும் கலாசாலை வாத்தியாயர் புலவரையுங் கண்டார். செல்லமங்கலம் வையாபுரி செட்டியாரையும் பார்த்தார். விஷயங்கள் யாவும் நன்கு தெரிந்து விட்டன. இனி யொரு நிமிஷமும் இந்தக்கூட்டத்தில் கலப்பு உதவாதென்று தீர்மானித்தார். அன்றிரவு செட்டியார் வீட்டிற்குச் சென்றார். ராமன் ஏதோ எழுதிக் கொண்டு வெளித்திண்ணை அறையிலிருந்தான். அங்கு சென்று, "எண்டா ராமா! எல்லாவற்றையும் தொலைத்து அவனையுங் குடிகாரனாக்கி விட்டாயே! பாவி! என்னதான் மிச்சம்வைத்திருக்கிறாய்?" என்று பல்லைக் கடித்துக்கொண்டு கேட்டார். ராமன்நடுங்கிப் போய்விட்டான். ராமண்ணா முரட்டு ஆசாமியாதலால் எங்கே அடித்துக் கொன்று விடுகிறானோ வென்று பயந்தான். ராமண்ணாவைப்பார்த்து "மதராஸிலிருந்து இனி உண்டியல் விட்டால் பணங்கொடுக்க மாட்டேனென்று தந்தி வந்து விட்டது. ரங்கூனில் இன்னும் ஐம்பதினாயிரம் ரூபாயிருக்கும். பிறகுபினாங்கில் ஏதாவது பாக்கித்தொகையிருந்தால்உண்டு" என்றுசொன்னான். இருவரும் பிரபுவிடம் சென்றார்கள். அவர்நன்றாகக் குடித்து விட்டு வேட்டி புறத்தே யுலாவப் படுத்துப் புரண்டார். ராமன் ஐயரைப் பார்த்து நாளைக்குக் கேட்கலாம் என்று சொன்னான். "தொலைந்து போடா நாசமாகப் போவாய்" என்று சொல்லி

விட்டு ஐயர் வீட்டுக்குச் சென்றார். பிறகு அந்தப் பக்கமே போகவில்லை. இவருக்குச் செட்டியாரின் நடத்தைப் பிடிக்கவில்லை யென்ற பெயர் எங்கும் பரவி விட்டது.

அத்தியாயம் ௧௨.

தாஸி வீடு.

மணக்குடி ஒரு சிறு கிராமம். அங்கே சில மேளகார வீடுகளும் ஒரு பிராமண அக்கிராரமும் சில குடித்தனக்காரர்களுமே உண்டு. அங்கு மிகப் பிரபலமான பிடாரி அம்மன் கோயிலு மிருக்கின்றது. இவ்வூருக்குச் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பலர் வந்து போவார்கள். இங்குள்ள மேளகார வீட்டில் வாங்கி வளர்த்த கிடேரி யொன்றுண்டு. அந்தப் பெண் மிக்க அழகு வாய்ந்ததாக விருந்தபடியால் பலர் சுற்றிச் சூழ்ந்து திரிந்தனர். பின்னர் பக்கத்தூர் ஜமீன்தார் இங்கு நெருங்கிய படியால் மற்றவர் மிகப்பயந்து மெதுவாக விலகி விட்டனர். இங்குதான் இப்போது தினந்தோறும் நமது பிரபு ரங்கநாதரின் வண்டி வந்து போவது வழக்கம். சில நாட்களாகவே இங்கு விஜயஞ் செய்யச் சந்தர்ப்பம் வாய்த்தது. ஜமீன்தாரும் மிகுந்த விளையாட்டுப் பேர்வழியாதலால் ஜமீன் சொத்துக்களில் பெரும்பாலும் விரயமாகி விட்டது. ஆகவே பணங் குன்றி விட்ட பின்னர் யாரும் மதிக்கமாட்டா ரென்பதைச் சொல்ல வேண்டிய தில்லை யல்லவா? அதிலும் தாஸி வீடுக

ளில் நெருங்குவோர் பொருளற்று விட்டார் என்று தெரிந்த வன்றே நாயினுங் கேடாகக் கருதப்படுவது இயல்பே யன்றோ? ஜமீன்தா ரவர்களை விட்டுப் பொருள் குன்ற வாரம்பிக்கவே, நெய் வற்றிய விளக்குப் போல தாஸி முத்தம்மாளும் தனது பற்றைக் குறைத்துக் கொண்டாள். இந்த சந்தர்ப்ப மறிந்து நமது ரங்கனாதரை ராமன் சரிக் கட்டினான். ஒரு நாள் இருவரும் நன்றாக உண்டு விட்டு ஆளுக்கு இரண்டு லோட்டா சர்பத்து சாப்பிட்டுவிட்டு இந்திரலோகக் காட்சியில் திளைத்து நின்று தலையாடுகிறபோது ரங்கனாதரைப் பார்த்து

ராமன்:—என்ன பிரபு! இதுவரை எதிர் பார்த்த குருவி வலையில் சிக்கிவிட்டது. தெரியுமா?

ரங்கனாதர்:—என்னடா! குருவி! எந்தக் குருவி? ஜமீன்தார் குருவியா? எப்படி வலைபோட்டுப் பிடித்தாய்?

ராமன்:—வலையா? கண்ணி வைத்துக் காத்துக் கொண்டே யிருந்தேன். எப்படிக் குருவி தெரியுமா? பச்சையாகத் தின்னலாம்! எல்லாம் உன்னுடைய அதிட்டந்தான்.

ரங்கனாதர்:—வாடா, போகலாம். கிளம்பு!

ராமன்:—நாளைக்குத்தான் நல்ல நாள். வேண்டிய சாமானெல்லாம் நாளைத்தான் அனுப்ப வேண்டும்.

என்று சொல்லிக் கொண்டே இன்னுமொரு லோட்டா பானகம் கொடுத்தான். ரங்கனாதர் வாங்கி உறிஞ்சி விட்டுப் படுத்துப் புரண்டார். மறு நாட் காலையில் எற்கனவே தயாராக வீட்டிலிருந்த பெரிய

வில்வட்டு மெத்தை, அதற்கு வேண்டிய தலையணைகள் முதலியவற்றைக் கட்டில் கிளாமருடன் அனுப்பிவிட்டான். ரத்தினக் கம்பளிப் பந்திப்பாய் அனுப்பப்பட்டது. மறு நாட் பகற் பொழுது முழுமையும் ராமனுக்கு வேலை சரியாக விருந்தது. சாமான் ஏற்றுமதி செய்துகொண் டிருந்தான். ரங்கனாதருக்கு ஒவ்வொரு நாழிகையும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. இரவு ஏழு மணிக்கு ரங்கனாத செட்டியாருடைய வண்டி புறப்பட்டது. மாட்டின் கழுத்தில் சதங்கை மணி போட்டிருந்த படியாலும் ஒரே சீராக அதட்டப்படாமல் போய்க் கொண்டிருந்தபடியாலும் மணிகளின் ஓசை ஒரே அளவில் சப்தித்துக் கொண்டிருந்தது. வண்டியானது மனைக்குடிக் கோயிலின் தென்புறத்து ராஜ வீதியிலுள்ள ஒரு மாடி வீட்டின் வாயிலில் வந்து நின்றது. நின்றவுடன் ஒரு மீசைக்கார ஆள் வந்து "வாருங்கள்! வாருங்கள்! செட்டியாரவாளா! நல்ல காரியம்!" என்று சொல்லிக் கீழே கை கொடுத்து இறக்கி விட்டான். வாயிற்படியருகில் வரும்போது இரண்டு பெண்களை ரங்கனாதர் கண்டார். ஒருத்தி கையில் வைத்திருந்த செம்புத் தண்ணீரைக் காலில் ஊற்றிக் கழுவித் துணியால் துடைத்தாள். மற்றொருத்தி ஆலத்தி யெடுத்து வாழ்த்தினாள். இந்த இடத்தி லிருந்து மேல்வீடு செல்லு மளவும் ரத்தினக் கம்பளங்களை விரித்திருந்தன. அதன் வழியாக ரங்கனாதர் போய்க் கொண்டிருந்தார். மேல் வீட்டில் ஒரு அழகிய அறையில் இரண்டு குறிச்சிகள் போடப்பட் டிருந்தன. இவரை அழைத்துச்

சென்ற பெண்ணொருத்தி அதிலே உட்காரும்படி சொன்னாள். இவரும் உட்கார்ந்தார். உடனே மற்றொரு பெண் நல்ல சாப்பாடு கொண்டு வந்து மேசையின் மேல் பரிமாறினாள். ஆனால் அந்தச் சாப்பாட்டைப் பற்றி இங்கு வர்ணிப்பது அவசிய மில்லை. அவனுக்கு அதிக விருப்பந் தரத்தக்கதும் எவ்வளவு வீரசைவனையும் தலைதடுமாறச் செய்துவிடக்கூடியதுமான தாஸிவீட்டுச் சாப்பாடாக அது இருந்தது. அவருக்கு முன்னால் சாப்பாடு வைக்கப் பட்டதே யன்றி அவரைச் சாப்பிடும்படி யாரும் சொல்ல வில்லை. மற்றொரு கண்கவர்வனப்புடைய பெண்ணொருத்திவந்து மயிலிறகினாலான விசிறி யொன்றினால் மெதுவாக விசிறிக் கொண்டிருந்தாள். வேறொரு அழகிய மாதுநல்லாள் வந்து மேசையி னருகில் நின்று, "போஜனம் செய்யலாமா?" என்று முத்துப்போன்ற பல்வரிசை தோன்ற இள நகை புரிந்து கேட்டாள். ஒன்றும் பதில் சொல்லாமல் தங்கத் தட்டில் படைக்கப் பட்டிருந்த சோற்றில் பிரபு கை போட வாரம்பித்தார். அதற்குள்ளாக "நான் எடுத்துக் கொடுக்கிறே"னென்று சொல்லிக் கொண்டே சாதத்தையும் கறியையும் இடையிடையே சில பான வகைகளையும் மாறி மாறி அவர் வாயிற் கொண்டு ஊட்ட வாரம்பித்தாள். வயிறு நிறைந்த பிறகும் அப்பெண்ணின் முகத்தையும் உருவ எழிலையும் பார்த்துக் கொண்டு பித்துப் பிடித்தவன் மாதிரி வாயில் திணிப்ப தெல்லா வற்றையும் விழுங்கிக் கொண்டே யிருந்தார் நமது கூழைப் பிரபு. வரவர வயிறு பருத்து விழி பிதுங்குவதைக்

கண்டு இனிக் கொடுத்தால் செத்துப் போவானென் றெண்ணி அந்தத் தாதி ஊட்டுவதை நிறுத்தினாள். உடனே தயாராக வெளியே நின்ற தாதியொருத்தி உள்ளே வந்தாள். தங்கம்போல் பளபளப்புடன் பக்கத்தி லிருந்த ஒரு பெரிய படிக்கத்தை அருகில் நகர்த்தி வைத்துப் பிரபுவினுடைய வாயைக் கழுவித் துணி கொண்டு துடைத்தாள். எழுந்து பக்கத்திலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தார் பிரபு. ஒரு பெண் விளாமிச்ச வேர் விசிறியினால் மெதுவாக விசிறிக் கொண்டிருந்தாள். மற்றிரண்டு பெண்கள் காலை மெதுவாக வருடிக் கொண்டு நின்றனர். அவர்களுடைய விரல்கள் பட்டவுடனே பிரபுவின் இவ்வுலக உணர்ச்சி மாறிப் போய்விட்டது. இதைவிட இன்பம் உலகிலில்லை யென்றெண்ணினார். விசிறிய பெண் தான் 'ஜமீன்தார் குருவி' முத்தம்மாளாக இருக்குமோ வென்றெண்ணினார். பிறகு சாதம் ஊட்டிய பெண்தான் என்று நிச்சயித்தார். இப்போது சாதம் ஊட்டிய பெண்ணும் வேறொரு பெண்ணுமாகக் காலமுக்குவதால் இவளுமல்ல வென்று தீர்மானிக்க வேண்டியதாய் விட்டது. இந்தப் பெண்க ளெல்லாரும் யாரா யிருக்கலாம்? இவர்கள் ஒருவாறு வேலைக்காரிகளா யிருக்குமோ? அப்படியானால் இவ்வளவு அழகுள்ள பெண்கட் கெல்லாம் தலைவியான 'முத்தம்மாள்' எப்படிப்பட்டவளா யிருப்பாளோ என்று ஏக்கம் பிடித்து அவளை யெப்பொழுது காண்போமென்று எதிர் நோக்கிக்கொண் டிருக்கும்போது ஒரு கிழவியம்மா வெகு கடுமையான தொனியில்

"வெற்றிலைப்பெட்டி கொண்டுவந்தவ ளெங்கே தொலைந்தாள்? பெரிய மனிதர் வருகிற சமயந் தெரியவில்லையே?" என்று சொல்லிக் கொண்டே வந்தாள். வெகு அதிகாரத்தோடு வந்த கிழவி ரங்கனாத மாப்பிள்ளையைக் கண்டவுடன் நடுங்கிப் போய் குறுகித் தளர்ந்த கோல உடலை வணக்கிக் கொண்டு நாணப்பட்டவள் போலச் சுவரின் ஓரத்தில் ஒதுங்கி நின்றாள். அழகான பெண்ணுருவங்களின் தோற்றத்தில் மனதைச் சஞ்சரிக்க விட்டிருக்கும் நமது பிரபுவின்முன்னர் கிழண்டி நரைத்துத்திரைத்துப்பல்விழுந்த பழய கூனற்கிழவி தோன்றியது வியப்பையுண்டு பண்ணியது. கிழவியின் உருவமும் பார்க்கத் தக்க விசித்திர வுருவமாகவே யிருந்தது. அவளும் மெதுவாகச் சிறிது மறைந்து கொண்டு, "இப்படி மாப்பிள்ளை யெப்பொழுது வருவார்க ளென்றுதான் காத்துக்கொண்டிருந்தேன். இதுவரைஎன்தங்கமும் காத்துக் கொண்டே யிருந்தாள். எத்தனையோ சீமான்களெல்லாம் வந்து பார்த்தார்கள். காசா பெரிது, பெரியமனிதர் பழக்கம்தான் நமக்கு வேண்டு மென்று பேய்ப் பிள்ளை சொல்லுகிறது. குலத்துக் கேற்ற குணமில்லையே யென்று வருத்தப் பட்டேன். அவள் கும்பிட்ட தெய்வம் நல்ல மாப்பிள்ளையைத் தேடிக் கொடுத்து விட்டது. அடுத்த ஊரிலிருக்கிற இந்த மாப்பிள்ளைதான் வேண்டு மென்று ஏழூர் நாச்சியாளைத் தினந்தோறும் தொழுது கும்பிட்டுக் கொண்டுகிடந்தாள். இன்றைக்குத் தான் கிட்டாத பழம் கிட்டி யிருக்கிறது. உலகிலில்லாத குணத்தோடும்

அழகோடும் பாடுபட்டுப்பெற்ற பிள்ளையை ஒப்புவித்துவிட்டேன். நல்லாயிருக்கள், நேரமாய் விட்டது'' என்று சொல்லி விட்டுக் கடைசி வார்த்தை முடியு முன்னரே தலையாடிய முக்காற் கிழவி சென்று விட்டாள். அவளுடைய சாதுரியமான வார்த்தைகள் நமது ரங்கனுதருடைய செவிகளில் நுழைந்து மனத்தை அறுத்துக்கொண்டிருந்தன. ''என்ன அன்படா? நம்மிடத்தில் இவ்வளவு பிரியம் வைத்திருக்கிற இந்தப் பெண்ணை நாம் கொஞ்சங் கூடக் கவனியாது போய்விட்டோமே? ஜமீன்தார் இங்கு வருவதாகச் சொன்னர்களே. அது பொய்யாகவா இருக்கும்? இராது. அவரும் வந்திருப்பார்; இந்த வேலைக்காரிகளைக் கண்டு திருப்திப்பட் டிருப்பாரோ? அவரை யேமாற்றி விட்டார்கள்போ லிருக்கிறது. நமது ராமன்கூட இதுவரை ஏமாந்துதானே போய்விட்டான்'' என்று பலவாருக எண்ணி விட்டார். இப்பொழுது வறட்டுக் கிழவி யிடத்திலும் அவளது அருமைப் புத்திரி முத்தம்மா ளிடத்திலும் முழு நம்பிக்கை வைத்து விட்டார் நமது பிரபு. மற்றியாவரையும் புறக்கணிக்கத் தயாராயிருந்தார். இப்படியாகச் சாய்வுநாற்காலியில் படுத்தபடியே சிந்தனை வுலகத்தில் மனதை அலையவிட்டு ஏக்கமுற்றிருக்கிற ரங்கனுதப் பிரபுவின் காதுகளில் பாதசர ஓசை இனிமையாகக் கேட்டது. திரும்பினர். ஒரு தெய்வப் பெண் அருகில் வந்து நிற்கிற தோற்றம் ரங்கனுதர் கண்ணிற்கு எட்டியது. அப்பெண் தனது வளையணிந்த கையிலிருந்த சில பழங்கள் நிறைந்த ஒரு தாம்பாளத்தைப்

பக்கத்தி லிருந்த மேசையில் வைத்துவிட்டுச் சிறிது நாணமுற்றவளைப் போல் சுவரோரமாக ஒதுங்கினாள். "பெண்ணே! ஏன் நாணமுறுகிறாய்! எனக்காக இத்தனை வருஷம்வரை காத்திருந்த கண்மணி! முன்னமே வந்து உன்னை மகிழ்ச்சிப் படுத்தாமலிருந்ததற்கு மன்னிப்பாயாக! எனது செல்வமே! இனி என்ன குறை! என்று பலவிதமாக ஜன்னி கண்டவனைப் போற் புலம்பிக் கொண்டு எழுந்து விட்டான். இந்த சந்தர்ப்பத்தில் அங்குள்ள ஒரு அறையின் கதவை ஒரு தாதி திறந்து விட்டாள். எல்லாத் தாதியரும் வெளியே சென்று விட்டனர். பக்கத்து அறையில் ஒரு அழகான பெரிய கட்டில் போடப்பட் டிருந்தது. அதில் சிறந்த பட்டு நூலால் நெய்யப்பட்ட வலை போர்த்தப்பட்டு அழகிய இடாலி தேசத்து வில்வெட்டுமெத்தையில் பலஜப்பான் பட்டுகளாலான தலையணைகள் பலவிதமான தோற்றத்துடன் கிடந்தன. காம்பரிந்த மல்லிகைப்பூக்கள் நிறையத் தூவப் பெற்றிருந்தன. உயர்ந்த வாசனை வத்திகள் மெல்லிய புகையுடன் நறுமணத்தைப் பரப்பின. ஒரு அழகிய தங்கக் கிண்ணத்தில் கலவைச் சந்தனமிருந்தது. வெற்றிலைத் துளிர், வாசனைப் பாக்கு, முத்துச் சுண்ணாம்பு, பச்சைக்கிராம்பு, ஏலக்காய், தாம்பூல மாத்திரைகள் முதலிய அங்கங்களில் குறைவின்றி நிரப்பப்பெற்ற வெள்ளி வெற்றிலைப் பெட்டி யொன்று திறந்தபடி யிருந்தது. குங்குமப்பூ போட்டுக் காய்ச்சிய பசும்பாலும் தேனும் சில இனித்த சுவையுடைய பலகாரங்களும் ஆங்கொருபுற மிருந்தன.

அந்த அறையின் சுவர் சுண்ணாம்பாலாவது செங்கற்களாலாவது கட்டப் பெற்றதாகத் தெரிய வில்லை. அச் சுவர்களில் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் தீட்டப் பெற்றிருந்தன. இத் திருவிளையாடல்கள் மக்களை யுய்விக்கும் பொருட்டு கூடற்பதிக்கண் மானிடவுருக் கொண்டு எம்பெருமான் சொக்கலிங்கர் காட்டிய திருவிளையாடல்கள் என்றெண்ண வேண்டாம். ரங்கநாதர், முத்தம்மாளைப்போன்ற போக மக்கள் ஆடுந் திருவிளையாடல்களாகும். அவை சிறந்தவொரு சித்திரக்காரனால், "ஆலிங்கனமைந்தும் இதழ்ப் பானம் பன்னொன்றும், அமிர்தம் பதினாறும் உகிரெழுதுங் குறியெட்டுங், கோலம்புனை தந்தக் குறியெட்டுங் குரலெட்டுங் குவிதாடன மிருநான்கொடு கூடுங்கலவிக்கே" எனுங் கொக்கோகர் கூற்றுக்கிலக்கியமாக எழுதப்பட்டிருந்தன. இப்படங்கள் தொங்கவிடப்பட்டிருந்த இடம் நீங்கலாக பாக்கியுள்ள இடங்களில் உயரிய பெல்ஜியம் நிலைக்கண்ணாடிகள் வைக்கப் பெற்று அழகு செய்துகொண் டிருந்தன. ரங்கனாதர் அப்பெண்ணின் கரத்தைப் பற்றினார். முத்தம்மாள் நாணி யொடுங்கிக் கூச்சத்தால் அரை ஆளாக ஆகிவிட்டாள். இந்தத் தோற்றத்தில் ரங்கனாதரின் நம்பிக்கை இன்னும் அதிகமாயிற்று. கைபற்றி நடந்தார். புதிய மணவரைப் பெண்போல நாணத்தோடும் அன்போடும் மெதுவாக அவரைத் தொடர்ந்து சென்றாள் தாஸி முத்தம்மாள்.

நமது முத்தம்மாள் அழகில் அவ்வளவு சிறந்தவளன்று. நிறத்திலும் அவ்வளவு சிவப்புடையவள

ல்லள். சாதாரணமாகப் பார்த்தால் பிறர் விரு படியான தோற்றம் அவளுடைய உடலில் ... கூமே காணப்பட வில்லை. சாதாரணமான நாட்டாளாகவே அவளிருந்தாள். ஆனால் நமது ரங்கனாதர் இவ்வளவு தூரம் மயங்கியதற்குச் சில காரணங்க ளுண்டு. தினந்தோறும் கிஷ்கிந்தாபுரி ராமன் புகழ்ந்த தொன்று; ஜமீன்தார் வரப்போக இருக்கிறா ரென்ற வதந்தி யொன்று; ரங்கனாத செட்டியார் வந்ததும் பல அழகிய பெண்கள் வந்து வேலை பார்த்தமையும் ஒரு காரணமாகும்; பின்னர் கிழவி போட்ட போட்டில் முக்கால்வாசிப் புத்தி புரண்டுபோய்விட்டது. இத்தனைக்கும் பேருதவியா யிருந்தது குடி மயக்கம். எல்லாம் ஒன்று சேரவே ரங்கனாதர் புத்தி மருண்டு போனது இயல்பே யன்றோ? இதற்குமேல் முத்தம்மாள் தெரிசனங் கிடைத்தபடியால் அவளைப் பற்றியாவது அவளுடைய அழகைப் பற்றியாவது ஆராய்ச்சி செய்ய அவகாச மில்லை. கண்டவுடனே வெறி பிடித்திருந்தவன்போல் பிரபு ஆகிவிட்டார். அவளை இழுத்துக் கொண்டு அறையினுள்ளே நுழைந்தார். நுழையவே ஓரம் ஒதுக்கில் சிறிது சிந்திக் கிடந்த பாக்கிப் புத்தியும் தொலைந்து போய்விட்டது. மெத்தையில் உட்காரவே தானிருப்பது பூலோகமா, இந்திரலோகமா என்று சந்தேகித்தார். இவ்வீடு முத்தம்மாள் வீடா அல்லது ஊர்வசியின் மாளிகையாவென்ற சந்தேக முண்டாகி விட்டது. இவ்வளவு தூரம் அலைவுபட்டு இன்பக் கடலின் கரை காணாது தவிக்கிற நமது கூழை ரங்க பூபதி,பக்கத்திற் கொஞ்

சிக் குலாவி உட்கார்ந்திருக்கிற நங்கை மணக்குடி முத்தம்மாளா அல்லது ஊர்வசியா வென்று சந்தேகங் கொண்டிருப்பா ரென்று நாம் சொல்லவா வேண்டும்! இவ்வளவு யோசனை செய்யும் பிரபு தான் பழைய கூழை ரங்கனு தேவேந்திரனு வென்று யோசியாதிருப்பாரா? இதுவரையில் காத்திருந்த முத்தம்மாளைக் கைப்பிடித்த இத்தினமே சிறந்த சுதினமென்று அவர் கருதியதில் அதிசய மொன்றுமில்லை. இப்படி இரவு பகலாக ஸ்நானம் முதல் நித்திரைவரையும் ஒவ்வொன்றும் ஆச்சரியப்படத் தக்கதான வகையில் நடைபெற்றன. உடம்பு தேய்க்கவும் மேலை முக்கவும், சாதம் பரிமாறவும் அலங்காரஞ் செய்யவும் பொட்டிடவும் அழகான இளம்பெண்களோ முன்னிற்பதால் ரங்கனுடைய புத்தியானது வேறொன்றைச் சிந்திக்கும் வலிமையை இழந்து விட்டது. இப்படியாகச் சில நாள் கழிந்தன. ஒரு நாள் முத்தம்மாள் உதிர்த்து விட்ட பூங் கொம்புபோல எல்லா நகைகளையும் கழற்றி விட்டு வந்தாள். நல்ல சேலையும் அவளிடையிலில்லை. இதைக் கண்டவுடன் ரங்கனுக்கிருந்த வருத்தம் சொல்ல முடியாது. என்னகாரணம்? 'ஏன் பிரபுவின் காதலிக்கு இன்று நகையில்லை?' என்று கேட்டார் பிரபு. இச்சொற்கள் வெளிவந்தனவோ இல்லையோ இவற்றிற்குப் பதிலாக முத்தம்மாளின் கண்கள் முத்து முத்தாகக் கண்ணீரைக் கொட்டி விட்டன. பிரபு எத்தனை முறை கேட்டும் முத்தம்மாளின் வாய் திறக்க வில்லை. பொருமிப் பொருமி அழுதாள். வரவரப் பலமாக அழுதாள்.

இச்சத்தத்தைக்கேட்டவுடனே பாட்டியானவள் கிழப்புலிபோல் உள்ளிருந்து புறப்பட்டு "என்னடி, மகளே! தோளா கொட்டி விட்டது? மூலை முடுக்கிலே கொண்டுபோய்க் கையை வையாதேயென்று சொன்னேனே! சம்பளகாரருக்குக் கொடுக்கப் பணமில்லையென்று லென்ன? அவர்கள் போனால் போகட்டும். நானிருக்கிறேனே! நீ யேண்டி வேலைபார்க்கப் போனாய்!" என்று கதறிக்கொண்டு கம்பையும் ஊன்றிக் கொண்டு விழுந் தடித்து வந்து சேர்ந்தாள். பார்த்தாள் மகளை? "ஐயோ! பாவி நகையெல்லாங் கொண்டுபோய் விட்டானா? பெண்ணைப் பார்க்க வாய்க்கு வழங்கலையே? மயிரைப் பறித்த கோழிமாதிரி யிருக்கிறாளே" என்று அவளும் முத்தம்மாளைக கட்டிக்கொண் டழுதாள். ரங்கனாதருடைய கண்ணென்ன? லேசானதா? அதிலிருந்தும் புண்ணிலிருந்து வடிவதுபோல நீர் வடிந்தது. ஏன் இப்படி யழுகிறீர்கள்? நகையெல்லாம் யார் கொண்டு போனது? என்று பிரபு கேட்டார். அதற்குக் கிழம் பதில் கூறுகிறது; "அந்தப் பாவிஜமீன்தார் வீட்டு ஆட்கள் நகைகளைக் கொண்டு வந்து பூட்டினார்கள். அதுவும் ஆறு மாதமாச்சு. இவள் அவரை யேறெடுத்தும் பார்க்கவில்லை. எல்லாம் செட்டியார்,செட்டியாரென்ற புலப்பமா யிருந்தாள். அவர்களும் வேண்டியவரை பார்த்தார்கள். நகையைப் போட்டார்கள். புடவையை அனுப்பினார்கள். ஒன்றும் நடக்க வில்லை. இப்பொழுது உங்கள் தயவு எங்கட்கு வந்து விட்டதென்று கருதி எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு

போய்விட்டார்கள்." என்று பொக்கை வாயால் பப் பப் என்று சொல்லி முடித்தாள். இதைச் சொல்லி முடிப்பதற்குள்ளே ஒரு உழக்குக் கண்ணீர் அவள் வாய் வழியாக வயிற்றினுள்ளே போய்விட்டது. இந்தச் செய்தியைக் கேட்டும், எதிரில் நிற்கிற முத்தம் மாளைப் பார்த்தும் மனஞ் சகிக்க முடியாதவராகிக் கிஷ்கிந்தாபுரிக்கு ஆளனுப்பினர். வந்தான் கிஷ்கிந்தாபுரி. வெகு பணிவாக நின்றான். "இந்த அழகு சுந்தரத்துக்கு நேற்றுப் போட்டிருந்த சிவப்பு நகைக்குப் பதிலாக அவ்வளவும் வயிரநகை போடவேண்டும். எவ்வளவு ரூபா வென்று கேட்க வேண்டாம். அந்த வெறும்பயல் ஜமீன்தாருக்கு நாம் இளைத்தகையல்ல, தெரியுமா?" என்று சொன்னார்பிரபு. இப்போதும் நமது பிரபுவின் கன்னங்கள் கொவ்வைப் பழம்போலவே சிவந்திருந்தன. இப்படியாகப் பாலுக்கென்றும், பழத்துக்கென்றும், சேலைக்கென்றும், சுவாமி தரிசனத்துக்கென்றும், தங்கைக்கு நகையென்றும், மருந்துக்கென்றும், பேய்க்கென்றும், வேலையாட்களுக்கென்றும், பழய கடனுக்கென்றும் தினந்தோறும் ஒவ்வொன்றைச் சொல்லி ரத்தத்தை உறிஞ்சுகிற அட்டையைப் போல் ரங்கனுடைய பணத்தைக் கிழவியும் குமரியுமாக உறிஞ்சிக் கொண்டிருந்தனர். நல்லபாம்பின் விஷத்தை யடக்குவதற்குப்பாம்பாட்டி சிறியானங்கை வேரைக் காட்டுவது போலஇளைய நங்கையை முன்னால்விட்டுப் பக்கத்தில் கிழவி நின்று காரியத்தைச் சாதித்துவந்தாள். தாஸி வீட்டில் பிரபு புகுந்து விட்டாரானால் அங்கு வீடு

றை காலிகட்குக் கணக்குண்டோ? கெட்ட தொழி லுடையாருக்குப் புகலிடம் தாஸி வீடல்லவா? அங்கு பல காலிகள் கூடி நிறைந்து நின்றனர். ஒருநாள் ரங் கனாதர் நன்றாகக் குடித்து விட்டு முகப்பு ஹாலில் புரண்டு கொண் டிருந்தார். அப்பொழுது அங்கு வந்த பொக்கை வாய் அத்தை, மாப்பிள்ளையின் வயி ரச்சங்கிலியைக் கழற்றிக் கொண்டு போய் விட்டாள். இவருக்கு ஒன்றுந் தெரியவில்லை. மயக்கந் தெளிந்த பின்னர் சங்கிலியைக் காணோ மென்று தேடினர். கிழவி வந்து "இதுவரை இந்த வீட்டுத் துரும்பு கூடப் போனதில்லையே! இதை விட்டு விட்டால் இங்கே மகளெப்படி யிருக்கப் போகிறாள்? இனி என்ன செய்யப்போகிறேன்? அடியே, மகளே! இனி இந்தப் பக்கத்துக்கு வராதே! அந்த வீட்டினுள் ளேயிரு" என்று சொல்லி ஒரு அறையினுள்ளே கொண்டு போய்த் தள்ளிக் கதவைப் பூட்டி விட் டாள். இதனைக் கண்ட பிரபு அடடா இந்தக்கிழவி எவ்வளவு கபட மற்றவளாக விருக்கிறாள் என்று பரி தாபப்பட்டார். மங்கலம்பட்டி. அம்பலகாரருக்கு வண்டி போய் அவரும் வந்துவிட்டார். கிழவிக்கு வேண்டாதவனும் முன் போலீஸ் கான்ஸ்டேபிளாக மதுரையி லிருந்தவனும் பொல்லாத போக்கிலியு மான சின்னான் என்ற அகம்படியனைக் காட்டி இவன் தான் செட்டியார் படுத்திருந்த போது இரண்டு மூன் றுதரம் வந்து போனான் என்று கிழவி சொன்னாள். அவனாக விருக்கலா மென்ற அநுமானம் எல்லார்க் கும் தோற்றியது. அவனை அம்பலகாரர் வேண்டிய

மட்டுங் கேட்டார். அவன் இல்லை யென்று சொன்னாலும் போலீஸில் இருந்தவ னாதலால் கொஞ்சம் அதிகாரத் துடனேயே சொன்னான். அம்பலகாரர் தமக்கு முன்னால் உள்ளதுஞ் சொல்லாமல் திமிரோடும் பேசுகிறானாதலால் "கட்டு புளிய மரத்தில்" என்று சொன்னார். பக்கத்தில் நின்ற இரண்டு மூன்று பேர் சேர்ந்து அவனைத் தலைகீழாக புளிய மரத்தின் கிளையில் கட்டித் தொங்கவிட்டார்கள். கை விரல்களின் நகக் கண்களில் குண்டூசிகள் செலுத்தப் பட்டன. அவன் கதறுகிறான்; துடிக்கிறான்; "ஐயோ கழுத்தை யறுத்துக் கொல்லுங்களேன்; சித்திர வதை செய்கிறீர்களே" என்றுபுலம்பினான். "ஐயோ! தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா? நானா சங்கிலியை யெடுத்தேன்?" என்று அலறினான். இவையெல்லாம் இந்தக் கொலைகாரரின் காதில்விழவில்லை. சில நாட்கட்குமுன் அந்த ஜமீனின் தலையாரி ஏற்கனவே ஜமீன் ஆபீஸில் நடை பெற்ற திருட்டுக்கு மங்கலம் பட்டி அம்பலகாரன்தான் காரணமென் றெண்ணி அதை விசாரிப்பதற்காக மதுரையி லிருந்து பெரிய இன்ஸ்பெக்டரை வரவழைக்க ஏற்பாடு செய்திருந்தார். அதற்கிணங்கி வந்திருந்த இன்ஸ்பெக்டரோடு தலையாரி பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் முன் பொருதினம் அம்பலகாரரால் ஹிம்சைப்பட்ட ஒருவன் வந்து, "இப்போது மணக்குடியில் ஒருவனைத் தலைகீழாகக் கட்டிக் கொல்லுகிறார்கள்" என்று சொன்னான். உடனே இருவரும் இரண்டுகுதிரைகளிலேறிக்கொண்டு மணக்குடிக்கு வந்து இவர்களியாவரை

யும் அரஸ்டு செய்து மதுரைக்குக் கொண்டு போய் விட்டார்கள். விசாரணை நடை பெற்றது. அம்பலகார ருக்கு எழுவருஷ கடுங்காவல் தண்டனையும் மற்றவர் கட்கு இரண்டு வருஷ கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டன. ரங்கனாதர்மட்டும் பெரிய பெரிய பிளீடர்கள் வைத்து ஏராளமான பணத்தையும் செல விட்டுத் தப்பித்துக் கொண்டார். கையில் விலங்கு மாட்டா திருப்பதற்காக ரூபா இருபதாயிரம் செல வானது. பொதுவாக இந்தக் கேஸ் சம்பந்தமாக ச்செலவு ரூபா ஐம்பதாயிர மிருக்கு மென்பது பொ துஜன அபிப்பிராயம்.

அத்தியாயம் கரு.

கல்யாணம் வருமா?

ரங்கநாதர் பெரும்பாலாக தாஸி முத்தம்மாள் வீட்டிலே யிருந்தார். சில சமயங்களில் வீட்டிற்கு வருவது முண்டு. தற்காலத்தில் வாலிபர்கள் காபி கிளப்பிற்குப் போய்வருவது போலச் சாதாரணமாக தாஸி வீடுகளில் நுழைந்து வருகின்றனர். ஆனால் நமது ரங்கனாதர் காலத்தில் தாஸி வீட்டிற்குச் செல் பவனுக்கு ஜனங்கள் மதிப்புக் கொடுப்ப தில்லை. ஏழை யெளியவனாக விருந்தால் எல்லாரும் அஞ்சாமல் அவனைத் தூற்றுவார்கள். நமது ரங்கநாத செட்டி யாரிடத்தில் பணமதிக மிருந்தபடியாலும் கேட்ட வர்க் கெல்லாம் வாரிக் கொடுத்தபடியாலும் அவரு டைய கெட்ட குணங்களை யாரும் பரப்பிப் பேசிக்

கேலி செய்ய முன்வர வில்லை. இவர் வாழ்க்கையா
னது பெரும்பாலும் சந்தோஷகரமாகவே நிகழ்ந்து
கொண்டிருந்தது. கஷ்டம் வருகிற காலமெல்லாம்
பணம் முன்னின்று அதனை மறைத்து விட்டது. இவ
ருக்கு வாழ்க்கைப்பட்டிருந்த பெண்ணை இவர் பிற்
காலத்தில் ஒரு நாளும் நினைத்ததே கிடையாது. கல்
யாணஞ் செய்தது முதல் இவர் பக்குவ மடைகிற
வரை மனைவி சிதையைப் பற்றி விசேஷமாக எண்ணு
தற்குத் தாயார் விடவில்லை. இவர் பக்குவ மடைவத
ற்குச் சில மாதங்கள் முன்னதாகவே இவருடைய
சிநேகிதர்கள் அயல் மாதருடைய பழக்கத்தை உண்
டாக்கி விட்டபடியால் பின்னரும் விரும்ப வில்லை.
சிதையானவள் இந்த மகா பிரபுவின் மனைவியானது
முதல் ஒரு நன்மையும் பெறவில்லை. ஆனால் அடியும்
உதையும் தாறுக் கம்புக் குத்தும் சூட்டாங் கோற்
சூடும் பிறவும் வேண்டிய வளவு பெற்றாள். துன்பம்
வரவர அதிகப்படவே பொறுக்க முடியாமல் மேல
மாகாணத்திற்குச் சென்று விட்டாள். தாயு மில்லை.
தகப்பனும் கவனிப்ப தில்லை. அருமையாக வளர்த்த
பாட்டியாரும் இறந்து போனாள். மாமியார், மாமனா
ரும் போய் விட்டனர். கணவனை அண்டினால் அடி-
யும் உதையும் சூடும் கிடைக்கின்றன. வீடு வாசலி
ன்று வரவும் முடியவில்லை. முகத்தைப் பார்த்து
ஆறுதலடைவதற்குப் பிள்ளையுமில்லை. இப்படி யாரு
மற்ற அனாதையாக விருக்கிற சிதைப் பெண்ணுக்கு
எப்படி சந்தோஷமான வாழ்வு கிடைக்கும்? தினந்
தோறும் தன்னுடைய பரிதாபமான வாழ்வை யெண்

ளி வருத்தப்பட்டுக் கொண்டே யிருந்தாள். உடலில் நோய் உண்டாவதற்கு முக்கிய காரணம் கவலை யன்றோ ? கவலையினால் உண்ட சோறு உடலில் ஒட்டவில்லை. உலகத்திலுள்ள எல்லாவற்றிலும் பற்றின்றி வெறுப்புத் தட்டி எப்படியாவது இறந்துபோய் விட்டால் நல்லதென்று எண்ணிவிட்டாள். வரவரக் கவலை யதிகப்பட்டுக் கொண்டே வந்த படியால் உடல் வலி குன்றி மெலிந்து எலும்பும் தோலுமாகி விட்டது. தான் இருக்கிற வீட்டில் பாட்டனாரான ராமன் செட்டியார்தவிர மற்றவர்கள் தானிருப்பதில் விருப்பமில்லாமல் முனங்குவதையும் அறிந்தாள். இப்படியாகச் சீதையின் நிலைமை பரிதாபமாகி விட்டது. ராமனாதன் செட்டியார் வேண்டிய வைத்தியர்களைக் கொண்டு வைத்தியம் பார்த்தார். எவ்வளவு பார்த்தும் பயனில்லை. நோய் வரவர பலப்பட்டது: மருந்து பிடிக்கவில்லை. இன்னும் இரண்டு மூன்று நாளைய தாது தானிருக்கிறதென்று பல தேர்ச்சி யுடையவர்கள் உறுதியாகத் தெரிவித்து விட்டனர். ஆகவே வண்டி பிடித்து சீதையை வண்டியில் தூக்கிப்போட்டு செல்வராஜ புரத்திற்குக் கொண்டு வந்து வீட்டில் இறக்கினார்கள். ஒரு வேலைக்காரியை அமர்த்தி வேண்டியதைச் செய்தார் ராமனாதன் செட்டியார். நாயகன் ரங்கநாதன் செட்டியாருக்கு ஆளனுப்பி மனைவியின் நிலையைத் தெரிவித்தார்கள். அவர், "நான் ஊரிலில்லையென்று சொல்லி விடு' என்று தாஸி வீட்டிலிருந்து பதிலனுப்பினார். அன்று பொழுது போய் விட்டது. மறுநாள் இரவு நாலு மணி சுமாருக்கு சீதை

உயிர் துறந்தாள். உடனே ராமன் சென்று ரங்கநாதனை அழைத்து வந்தான். பங்காளிகளும் வந்தார்கள். ஊரிலுள்ள பெண்மக்களிற் பெரும்பாலார் வந்திருந்தனர். இறந்த பெண்ணின் குண நலத்தைப் பற்றியும் அதற்குற்ற பரிதாப நிலையைப்பற்றியும் மாமியிடத்திலும் புருஷனிடத்திலு மிருந்து பட்ட கஷ்டங்களைப் பற்றியும் இரங்கிப் பேசினுர்கள்.

ஒருத்தி:—சிதை இறந்து விட்டாளே! இனி இந்தச் செட்டியாருக்கு மறுதாரங் கொள்ளக் கிடைக்குமா? பணம் நிரம்ப இருக்கிறதாம்!

மற்றேருத்தி:—இவனுக்குக் கிடைக்குமா? இவன் தேவடியாளைக் கட்டிக் கொண்டழுகிறுனே! யாராவது இவனுக்குப் பெண்ணைச் செய்வார்களா?

வேறேருத்தி:—இந்த மூதேவிக்கு யார் கலியாணம் பண்ணுவார்? இவன்தான் பெண்ணைப் பொசுக்கித் தின்று விடுவானே? அவன் மூஞ்சியைப்பாருவே! களவாணி மாதிரி குறு குறென்று விழிக்கிறுன்!

இன்னுமோருத்தி:—பெண்டாட்டி செத்துப் போனுளே யென்று கண்ணில் ஒரு சொட்டுத் தண்ணீராவது வருகிறதா? எப்படி இதை விட்டுத் தப்பித்துக் கொண்டு ஓடுகிற தென்று அங்கு மிங்கும் பார்க்கிறுன். இவனுக்கு ஒருத்தரும் கலியாணஞ் செய்ய மாட்டார்கள்.

இப்படிப் பலவாறுகப் பெண்கள் பேசினுர்கள். மேல மாகாணம் ராமனுதன் செட்டியார் ஒரு பக்கத்திலிருந்து அழுது கொண்டிருந்தார். ஆலங்குடிக்கு

ஆளனுப்பப்பட் டிருந்தது. நேரமாகி விட்டபடியால் ஒரு குதிரை வண்டியையும் அனுப்பினர்கள். 'சீதை இறந்து விட்டாள்' என்ற செய்தி யெழுதிய ஓலையைக் கொண்டு போனவன் மன்னைகட்டிக் கருப்பன் செட்டியாரிடம் கொடுத்தான். இது மங்கல ஓலையென்பதைப் பிரிக்கு முன்னரே தெரிந்து கொண்டு புன்சிரிப்போடு வாங்கிப் பிரித்துப் பார்த்தார். பார்த்து முடிந்ததும் பெண்டாட்டியைக் கூப்பிட்டார். "ஏனிங்கிறேன்! செலவராஜபுரத்திற்குப் போகவேண்டும். பங்காளி வீட்டைக் கூட்டிக் கொண்டு சுருக்காகப் போக வேண்டு மல்லவா?" என்றுசொன்னர். இருவருடைய முகத்திலும் சந்தோஷம் பொங்கிவழிந்தது. நித்திய தரித்திர னுக்கு லட்சம் ரூபா புதையல் கிடைத்தது போல அளவிலா மகிழ்ச்சி கொண்டார்கள். ஒன்பது வண்டிகள் கொண்டுவரப்பட்டன. பங்காளி வீடுகளிலுள்ள ஆண் பெண் அடங்கலும் வண்டிகளிலேறினர்கள். பகல் பத்து மணிக்குச் செல்வராஜபுரம் வந்து சேர்ந்தார்கள். ஆண் மக்க ளெல்லோரும் மன்னைகட்டிக் கருப்பன் செட்டியாரை முன்னுவிட்டு வந்தனர். பெண்கள் யாவரும் தலையில் துணியைப்போட்டுக் கொண்டு கருப்பன் செட்டியாரின் மறுதார மனைவியை முற் கொண்டு தொடர்ந்தனர். சம்பந்தியின் வீட்டு வாசலில் நுழையும் போது பொருமிப் பொருமி அழுதுகொண்டும் இடையிடையே'ஐயோ! அப்பா! என்ன செய்வேன்! ஒரு பெண்தானே இருந்தது! அதுவும் போய் விட்டதே!' என்று இடை யிடையே சொல்லிக் கொண்டும் கைத்துண்

டைக் கொண்டு நன்றாகக் கண்ணை மூடிக் கசக்கிக் கொண்டும் கருப்பன் செட்டியார் வந்தார். பக்கத்தில் வந்தவர்கள் "மிஞ்சிப் போனதற்கு வருத்தப்பட்டென்ன செய்கிறது? போனது வரவா போகிறது? விடுங்கள்! மனதைத் தைரியப் படுத்திக் கொள்ளுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே வந்தனர். கருப்பன் செட்டியாருடைய கண்ணில் கண்ணீர் வந்ததோ இல்லையோ வென்பது தெரியவில்லை. இவர்களைத் தொடர்ந்து பெண் மக்களும் பிள்ளை குட்டிகளும் வந்தார்கள். இந்தக் கூட்டத்தின் முன்னணியில் நமது கருப்பன் செட்டியாரின் மனைவி தலையும் முகமுந் தெரியாதபடி முன்தானையைப் போட்டுக் கொண்டு வாயினுள்ளே முனங்கி யழுது கொண்டு வந்தாள். அவள் கண்ணின் நிலைமை யெப்படியிருந்த தென்பதும் அறிய முடிய வில்லை. இப்படியாக எல்லாரும் வீட்டி னுள்ளே வந்தார்கள். உட்கார்ந்தவுடனே கருப்பன் செட்டியா ரிடத்தில் வந்து பலரும் துக்கம் விசாரித்தார்கள். கருப்பன் செட்டியாரும் பொருமினர். இனி யென்ன செய்வேன் என்று சொல்லித் திணறினர். என்றாலும் கண்ணில் வைத்த கைச் சவுக்கத்தை யெடுக்கவே யில்லை! அவர் மனைவி உள்ளே சென்றதும் பலரும் அழ ஆரம்பித்துவிட்டனர். இவளும் பிணத்தின் மேல் விழுந்து அழுதாள். முகப்பி லிருந்த பலரும் கசகச வென்று பேச ஆரம்பித்து விட்டனர். அங்கு வந்திருந்த வையாபுரி செட்டியாரும் மேல மாகாணம் ராமனாதன் செட்டியாரும் பிரபு ரங்கனாதன் செட்டியாரு

மாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். மற்ற இருவரை யும் வைத்து விட்டு வையாபுரி செட்டியார் மட்டும் எழுந்து உள்ளே வந்து "என்ன! கரு! இப்படி வர லாமா?" என்ருர். அவரும் ஒரு பக்கமாக வந்தார்.

வையாபுரி செட்டியார்:—மேலே ஆக வேண்டிய தென்ன? நேற்றிரவே அடங்கின சங்கதியை வைத்து வளர்க்கப்படாது. ஏதாவது ஒருவகையாக முடித்துக் காரியத்தைப் பார்க்க வேண்டும். நீங்கள் தெரியாதவர்க ளல்ல.

கறுப்பன் செட்டியார்:—உங்களுக்கு நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. பிள்ளை இறந்து போய் விட்டது. ஏதோ நமக்குப் பொசிப்பு அவ்வளவு தான். செட்டிய வீட்டு வழக்கப்படி செய்யவேண்டியதுதான்.

வையாபுரி செட்டியார்:—இங்கே வாருங்கள். உங்களோடு பேசி வெல்ல முடியாது. ஒரு வழியாக வெட்டி விடுங்கள்!

கறுப்பன் செட்டியார்:—சாமர்த்தியமாக நீங்கள் பேசுகிறீர்கள். பெண்ணைச் சேர்ந்த சாமான் நகை பணம் முதலிய எல்லாம் வந்து விட வேண்டும். வேறே பேச்சுக் கிடையாது.

வையாபுரி செட்டியார் வெளியே வந்தார். மேலமாகாணம் ராமனுதன் செட்டியார் தோளில் கையைப் போட்டுக் கொண்டு,

வையாபுரி செட்டியார்:—வழக்கம்போல வந்துவிட்டான்போ லிருக்கிறது. பிறகு போகிற வழியென்ன?

ராமனுதன் செட்டியார்:—ஞாயமா வென்று யோசித்துப் பாருங்கள்! இந்தப் பெண் பிறந்தது முதல் எல்லாக் காரியங்களும் நாங்களே செய்திருக்கிறோம். நாங்கள்தான் வளர்த்தோம். நாங்கள் அதன் தாய்க்குக் கொடுத்த பணத்தைக் கொண்டுதான் கலியாணம் முதலிய எல்லாக் காரியமும் இன்று வரை நடத்தி யிருக்கிறோம். இவன் ஒரு காசு கொடுத்தானு? ஒரு வேளையாவது கஞ்சி ஊற்றினுனு? ஒரு நாளைய சீர் முறையாவது கொடுத்தானு? இவனுடைய காசு ஒரு செம்புச் சல்லியாவது இதில் சேர்ந் திருக்கிறதா? இந்தப் பணத்தை இவன் கேட்க ஞாய மிருக்கிறதா? மேற்கொண்டு சீதை கல்யாண வீட்டில் கை லஞ்சம் வேறே வாங்கி விட்டானும்.

வையாபுரி செட்டியார்:—ஊரும் பெரிய ஊர். எப்படியாவது பிணம் வெளியிலே போக வேண்டுமே. அவன் மூர்க்க னென்பது எல்லாருக்கும் தெரியும். பிறகு ஆக வேண்டியதைச் சொல்லுங்கள்!

இந்த நிலையில் ராமனுதன் செட்டியா ரென்ன செய்வார்? பாவம்! தமது மகளை மன்னைகட்டிக்குக் கல்யாணம் செய்யும்போது கொடுத்த ஸ்தனம் முதலிய தொகைகளைத் தனிப் படுத்தித் தம் மாறலில் வைத்திருந்தார். தம் மகள் இறக்கும்போது சீதை பிறந்திரா விட்டால் அது சம்பந்தமான எல்லாப்பணமும் இவரையே சேர்ந்து விடும். வம்பு வழக்கு கிடையாது. இஷ் வார்சாகப் பேத்திப் பெண்ணுென் றிருந்த

படியால் இத்துன்பம் வந்திருக்கிறது. இதைத் தீர்க்காமல் காரியமொன்றும் நடத்த முடியவில்லை. வையாபுரி செட்டியாரும் மற்றும் இரண்டு பெரிய மனிதரும் இருந்து பேசினார்கள். மன்னைகட்டிக் கருப்பன் செட்டியாரை அழைத்து உங்கள் வழக்கென்னவென்று கேட்டார்கள். அவர் "இன்று இறந்துபோன பெண் என் மகள். ஆகலால் அவளுடைய சகல சொத்துக்களும் ஜாதிச் சட்டப்படி எனக்கே சேர வேண்டும். அதற்கு வழிபாறு லல்லது காரியங்கள் நடக்க முடியாது" என்று சொன்னார். ராமனாதன் செட்டியாரை "இதற்கென்ன ஆக்ஷேபனை சொல்லுகிறீர்" என்று கேட்டனர். அவர், "இப்பெண் என்னுடைய மகள் பிள்ளையாகும். இச்சொத்து முழுமையும் எங்கள் வீட்டிலிருந்து என் மகளுக்குக் கொடுத்தவையும் அவற்றிலிருந்து வளர்ந்த வட்டியுமேயாகும். என் மகள் இறந்து போய்விட்ட படியால் அச்சொத்துக்கள் யாவும் எனக்கே யுரிமையுடையனவாக வேண்டும். இந்தப் பெண்ணிருந்தபடியால் அதற்குக் கொடுக்கப் பட்டது. அது இப்போது இறந்து போய் விட்டபடியாலும் என் மகளுக்கு வேறு பிள்ளைகள் இல்லாதபடியாலும் இச் சொத்து முழுமையும் எனக்கே சொந்தமானதாகும்" என்று வாதித்தார். இதற்கென்ன பதில் சொல்லுகிறீர் என்று கருப்பன் செட்டியாரைக் கேட்டார்கள். அவர், "ராமனாதன் செட்டியார் சொல்லுவது எந்த வழியினும் பொருத்த முடையதல்ல. அவருடைய மகள் இறந்த தினத்தில் பிள்ளை குட்டி யில்லா விட்டால் அவர் கொ

டுத்த எல்லாச் சொத்தும் அவருடையதாகி விடவேண்டியது நியாயந்தான். ஆனால் அன்று பிள்ளை யிருந்தபடியால் அச்சொத்து அவருக்குச் சொந்தமாகவில்லை. என்னுடைய பிள்ளைக்கே சொந்தமாகி விட்டது. அந்தப் பணத்தி லிருந்து கல்யாண முதலியன நானே முன்னின்று செய்தபடியாலும் அந்த விஷயங்களில் அவருக்குப் பாத்திய மில்லாத படியாலும் சொத்தில் அப்பொழுதே அவருக் கிருந்த பாத்தியமும் நீங்கிப்போய் விட்டது. இப்போது என்னுடைய பெண் இறந்துபோன படியால் அச்சொத்து முழுமையும் என்னைச் சேர வேண்டுமே யன்றி, ராமனாதன் செட்டியார், பேத்தி வீட்டுச் சாமானை யெடுக்க என்ன உரிமை யிருக்கிற தென்று விளங்க வில்லை'' என்று வெகு அலட்சியமாக பதில் சொன்னார். இயல்பாகவே மேல மாகாணம் ராமனாதன் செட்டியார் நல்ல பணக்காரர்; மிகநல்லவர்; வம்புக்குப் பயந்தவர்; மிகுந்த மானமுடையவர். அவரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய் ''என்னவோ தொலையட்டும். இந்த சம்பந்தமான பணம் லட்ச ரூபா யிருக்கிறதே, அதில் பாதியைத் தொலைத்து விட்டால் போகிறது. அவ்வளவு பணத்தையும் கருமத்திற்றானே போடப் போகிறீர்கள்? அவனும் அதிகப் பணக்கார னில்லை. போகிறான், இரண்டு மூன்று பையன்களை வைத்துக் கொண்டு விழிக்கிறான். தொலைத்து விடுங்கள்'' என்று சொல்லி சமாதானப் படுத்தினர். சரியென்று ரூபாய் இருபத்தெண்ணாயிரத்துக்கு உண்டியலெழுதிக் கொடுக்கப்பட்டது. சுமார் இருபத்திராயிர ரூபா

பெறுமான நகைகளையும் சாமான்களையும் எடுத்துக் கொள்ளும் படியும் சொல்லப் பட்டது. இவ்வளவு கிடைத்ததே போதுமென்று மன்னைகட்டிக் கறுப்பன் செட்டியார் உள்ளுக்கு மகிழ்ச்சி யடைந்தார். இதன் பிறகு தான் காரியங்கள் நடைபெற வேண்டியிருந்தபடியால் இரவு சுமார் பன்னிரண்டு மணிக்குத் தான் சாப்பாடு நடை பெற்றது. வந்திருந்த யாவரும் ராமனாதன் செட்டியாரின் பெருந்தன்மையைப் பற்றியும் அவர் பட்ட துன்பங்களைப் பற்றியும் புகழ்ந்து பேசினார்கள். மன்னைகட்டிக் கறுப்பன் செட்டியாரின் கெட்ட குணங்களைப் பற்றியும் அவன் மனைவியைப்பற்றியும் இழிவாகப்பேசினார்கள். நமது பிரபு ரங்கநாதன் செட்டியார் அந்தப் பெண்ணைப் படுத்திய பாடுகளைப் பற்றியும் வழிதவறிய நடத்தையைப் பற்றியும் பேசித் தீர்த்தார்கள். கறுப்பன் செட்டியாரைப்பற்றிப் பொது ஜனங்கள் பேசிய பேச்சுக்களிற் பெரும் பாகம் இவருக்குக் கேட்க வேண்டுமென்றே பேசப்பட்ட படியால் இவரதை யறிந்து சிறிது வருத்த முற்றார். சீதையால் தமக்கு நன்மை கிடைத்ததே யன்றி தம்மால் அவளுக்கு ஒரு நன்மை உண்டாக வில்லை யென்பது உண்மைதானென்று கருதினார். ஆயினுமென்ன? அந்தப் பெண்தான் இறந்து போய்விட்டாளே! இனி யென்ன செய்கிறது?

சாதாரணமாக உலகில் இறந்து போனவருடைய வீட்டிற்குச் சென்றவுடனேயே மனிதருடைய மனது சிறிது மாற்றமடைவது இயல்பு. இறந்தவரைப் பற்றி நினைக்கும்போது சாதாரணமாக யாவருக்கும்

"இந்த மனித வாழ்வு நிலையற்றது. இது ஒரு நாளைக்கு அழிந்து போவதுதான். ஆகவே நாம் பாவ புண்ணியங்கட்குப்பயந்து நடக்கவேண்டும்" என்ற எண்ணந் தோன்றும். இதனைத்தான் மயான வைராக்கிய மென்று பெரியவர்கள் சொல்வார்கள். இந்த எண்ணம் உலகிலுள்ள எல்லாருக்கு முண்டாகிற போது நமது பிரபு ரங்கநாதன்செட்டியாருக்கு உண்டாகமாட்டாதா? அவரென்ன மனிதன்தானே? அவரும் இனி நன்றாக இருக்க வேண்டுமென்று எண்ணினார். துக்க வீடாக விருந்ததால் பதினைந்து நாட்கள் வரை தாசி முத்தம்மாள் வீட்டை நாடவே யில்லை. இதைக் கண்டு பலர் ஆச்சரியப் பட்டனர். இரவு பகலாகத் தாசி வீட்டில் காத்துக்கிடந்தவர் அந்தப் பக்கமே நோக்காம லிருப்பதற்குக் காரணம் "யோக்கியானமைதான்" என்று கருதி விட்டனர். மற்றுஞ் சில நாட்கள் சென்றன. ரங்கநாதர் வீட்டை விட்டு அசையவில்லை.

ரங்கநாதன் செட்டியாருக்கு மறுதாரம் செய்து கொள்ள வேண்டு மென்று அவருடைய பங்காளிகளிற் பெரியவர்கள் யோசனை சொன்னார்கள். ஆனால் பிரபுவுக்கு அது பிடிக்க வில்லை. அதற்கேற்க ராமனும் "வேண்டாம்" என்று அழுத்தமாகக் கூறித் தடுத்தான். மற்றவர் பலரும் பெண்டாட்டி யில்லாவிட்டால் வீடும் பணமும் பேவார்சாகப் போய்விடு மென்றும் கடைசிவரை தாசி வீட்டை விட்டு விலக வழியில்லாமல் போய்விடு மென்றுங் கருதினார்கள். ராமன் மட்டும் இப்படியே யிருப்பதால் தன்னுடைய

ராஜ்யமாக விருக்கு மென்று கருதினான். உள்ளந்த ரங்கம் யாவும் ராமனுக்குத் தெரியு மாதலால் அவன் கல்யாணஞ் செய்வதை மறுக்க வேண்டியது அவசிய மாக விருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் அறுபதாயிரம் ரூபா செல் இருந்தபடியாலும் இனிக் கல்யாணம் செய்து கொண்டால் அதற்கு வேறே ரூபா ஐம்பதாயிரம் வேண்டுமாதலாலும் அதற்குங் கடன் வாங்கிவிட்டால் கூடியசிக்கிரம் எல்லாம் கடன்காரர் வசப்பட்டு விட நேருதல்கூடுமாதலாலும் பின்னர்தமதுபிழைப்பு அந்தரமாகி விடுமென்று நினைத்தான். தாஸிவீட்டுக்குச் செல்கிறவர்கள் அவ்வழியை விட்டு நேரான வழிக்கு வருவது அசாத்திய மென்பது அறிஞர்களது அபிப்பிராயமாகும். பெருங்குடியிலும் கலந்து மானமிழந்த நமது பிரபு நல்வழிக்கு வருவாரென்று எல்லாருங் கருதவில்லை. மேலும் "முந்தின மனைவியைப்படுத்திய பாட்டை யெண்ணினல் இவனுக்குப் பெண்கட்ட எவரும் முன்வர மாட்டார்" என்பது தான் எல்லாருங் கொண்டிருந்த அபிப்பிராயம். சில மாதங்கள் சென்றன. பெண் பேசப்படுகிறது. அந்தப் பக்கத்தி லிருந்த பெண்கள் யாவரும் இவன் பெயரைக் கேட்டவுடன் "அவனுக்குச் செய்கிற பெண்ணை ஆற்றில் கொண்டு போய்த் தள்ளுகிறோம்" என்றே சொல்லி விட்டனர். பெண்ணிருந்த வீடெல்லாம் நுழைந்துபேசினர்கள். ஒன்றும்நடக்கவில்லை. கடைசியில் ஏறக்குறைய கல்யாணம் ஆகாது என்ற முடிவுக்குச் செட்டியாரும் வந்து விட்டார்.

அத்தியாயம் கச.

இரண்டாந் தாரம்.

ஒரு நாள் மாலை ஐந்து மணியிருக்கும். செல்வ ராஜபுரத்தின் கால்வாய் வீதியிலுள்ள ஒரு சிறிய வீட்டின் முன்னர் மூன்று பெண் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. அந்த வீடு மிகப் பழமையான தாகவும் மிகச்சிறியதாகவுமிருந்தது. அந்தக்கூரைவீட்டின் முன்புறத்தில் ஒரு ஓட்டுத்திண்ணையைக் காணலாம். இந்த வீட்டுக்கு முன்பாக ஒரு புளியமரமிருந்ததோடு கொஞ்சம் இடம் மேடாகச் செப்பனிடப்பட்டிருந்தது. அந்த வீட்டில் ஏதாவது விசேஷம் வந்தால் முன்னுலிருக்கிற இடத்தில் சில கம்புகளை ஊன்றிப் படுதாவைக் கட்டிக் கொண்டு விசேஷத்தை நடத்துவார்கள். மற்ற நாளில் இந்த இடம் காலியாகக் கிடக்கும். இந்த இடம் வசதியாக இருப்பதால் அவ்வூரிலுள்ள குழந்தைகள் அதனை விளையாடுமிடமாகக் கொண்டார்கள். பெரும்பாலும் நாள் முழுமையும் வெயில் விழாதபடி புளிய மரநிழல் இருக்கும். இங்கே மூன்று பெண் குழந்தைகள் தங்களுடைய அழகான—மென்மையான—கைகளால் அங்கு கிடந்த இளமணலைக் கொண்டு சிறு வீடு கட்டிக்கொண்டிருந்தனர். அம்மூன்று பெண் குழந்தைகளுள் ஒன்று அழகிய முகத்தோடு விளங்கியது மல்லாமல் வீடு கட்டுவதில் மிகத் தேர்ச்சி பெற்றதாக இருந்தது. அக்குழந்தை தான் அந்த வீட்டுக் குழந்தையாகும். அதற்கு வயது சுமார் நான்குதா னிருக்

கும். நல்ல சிவப்பு நிறம் வாய்க்கப் பெற்றிரா விட்டாலும் முழுக் கறுப்பன்று. நிறத்திலென்ன இருக்கிறது? அதன் முகம் மட்டும் கண்டாரை அடிமை கொள்ளக் கூடியதாக விருந்தது. மெல்லிய சிவந்த இதழ்களும் கறுத்த விழிகளும் அவற்றிற் கேற்ற எனைய அங்க நலன்களும் சிறப்புடையனவாக விருந்தன. இந்தக் குழந்தை சிற்ப சாத்திரக்காரன் வீடு கட்டுதற்கு பிளான் போடுவதுபோல அந்த மணற்றரையில் மண்ணினால் அழகான வீடொன்றைக் கட்டியது. தினமொரு விதமாக இக்குழந்தை வீடு கட்டும். இதனைப் பார்த்து மற்ற பிள்ளைகள் வீடு கட்டிக்கொண்டிருக்கும். வெகு சுறு சுறுப்பாக வீடு கட்டிக்கொண்டிருக்கிற இக் குழந்தையைப் பார்த்து மற்றொருகுழந்தையானது, “அடியே சொர்னவல்லி! நீ நேற்றுக் கட்டியமாதிரி நான் வீடு கட்டி விட்டேன். எங்கே அடுப்புப் போடுகிற தென்பதை மறந்து விட்டேன்; அதைக் காட்டித்தாடி” என்று கெஞ்சிக் கொண்டு நின்றது. அதற்கு பதிலாக “சாப்பாட்டுக்கு வந்து விடுவார்களே? நானென்னமா வர முடியும்? எங்கேயாவது ஒரு மூலையில் போடு” என்று சொல்லிக் கொண்டே சொர்னவல்லிக் குழந்தை வீட்டைக் கட்டி முடித்தது. ஒரு புறத்தில் அடுப்புக் கட்டி அதிலொரு சிறு கலயம் வைத்து புல்லரிசியை அதில் நிரப்பிப் பல கீரை வகைகளையும் அங்கு முளைத்திருந்த பல செடிகளின் காய் வகைகளையும் பிடுங்கி நறுக்கி வேறு சில சிறு சிட்டிகளில் நிரப்பி வைத்து விட்டுச் சில பூவரச இலைகளையும் பிடுங்கி வைத்து

க்கொண்டிருந்தாள் சொர்னவல்லி. சிறிது நேரத்தில் நாலைந்து சிறுவர்கள் வேகமாக வந்தார்கள். அவர்களுள் சிலர் நுங்கு வண்டியையும் வேறு சிலர் பூவரச மரத்தின் பூமொட்டுகளைத் தென்னை ஈர்க்குகளில் செருகித் தேர் கட்டி அதனையும் இழுத்துக்கொண்டு வந்தார்கள். வேகமாக இழுத்துக் கொண்டு வந்து இந்தப் பெண்கள் கட்டி வைத்திருக்கிற சிறு வீடுகளில் ஓட்டினார்கள். இந்த மூன்று பெண் குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் ஓடி அவர்கட்கெல்லாம் சாப்பாடு போடுவதாகவும் வீட்டை அழிக்கப்படாதென்றும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். சரியென்று மற்ற பையன்கள் உட்கார்ந்தார்கள். ஒரே ஒரு பையன் சொர்னவல்லியின் சிறு வீட்டின் வாயிலில் தன்னுடைய தேரை நிறுத்தி விட்டு உள்ளே சென்று உட்கார்ந்தான். உள்ளே வந்து உட்கார்ந்த மாணிக்கத்துக்கு இலைபோட்டுப் பரிமாறினாள் நமது சொர்னவல்லி. இவளுடையவீட்டுக்கு எந்தப் பையனும் வரமாட்டான். ஏனெனில் அந்தக் கூட்டத்தின் தலைவனான மாணிக்கமென்னும் சிறு பையனும் சொர்னவல்லியும் வெகு சிநேகம். ஆதலால் சொர்னவல்லி வீட்டிற்கு மாணிக்கம் அழைத்தால்தான் வருவார்கள். ஆகியில் எல்லாப் பையன்களும் எல்லாப் பெண்களும் ஒன்றாகத்தான்விளையாடினார்கள். நாளாகஆக சொர்னவல்லியும் மாணிக்கமும் மிக நேசமாகி விட்டனர். மற்ற பிள்ளைகள் எல்லோரும் ஒன்றாகக் கூடி மனை போட்டு மாணிக்கத்தையும் சொர்னவல்லியையும் உட்கார வைத்துக் கல்யாணஞ் செய்வார்

கள். இவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துச் சந்தோஷப்படுவது வேடிக்கையாக விருக்கும். இந்த மாணிக்கம் மிக யோக்கியமான பையன். முக வசீகரமும் தைரியமும் அடக்கமும் புத்திசாலித் தனமுமுடைய பையனாக விருந்தபடியாலும் அவ்வூரில் சிறந்தவரான வையாபுரி செட்டியாரின் மகனானதலாலும் அவன் அந்த ஊருக்கே செல்வக் குழந்தையாக வளர்ந்து வந்தான். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்றபடி இவனுடைய குண நலன்கள் யாவராலும் போற்றத்தக்கனவாக விளங்கின. இந்தச் சிறுவன் திண்ணைப்பள்ளிக்கூடத்தில் படித்தான். அங்குள்ள பையன்களில் இவன்தான் துடி. இந்த இரண்டு இளங் குழந்தைகளும் தமக்குள் கொண்டிருக்கும் அன்பை அவ்வூரிலுள்ள பலர் அறிய வில்லை. வையாபுரி செட்டியார் மட்டும் இதனை யொருவாறு அறிந்து விட்டார். பெண்ணின் குலமும் அக்குடும்பத்தின் தாமும் தமது கௌரவத்திற்குப் பொருத்தமில்லையே என்று நினைப்பார். சொர்ணவல்லியின் உயர் குணத்தையும் அழகையும் பேசும் சாமர்த்தியத்தையும் கண்டு வியப்படைவார். இப்படியாக நாளேற ஏற சிறுவரின் நட்பு வளர்ந்து கொண்டே சென்றது. வீட்டில் பலகாரங் கொடுத்தால் எங்காவது மறைத்து வைத்திருந்து சந்திக்கும்போது இருவருமாகப் பங்கிட்டுப் புசிப்பார்கள். இப்படி யிருந்த பிரியா நட்பு திடீரென்று பிரிய நேர்ந்து விட்டது. வையாபுரி செட்டியார் பலவருஷங்களாக செல்லமங்கலத்துக்குக் குடும்பத்தோடு போயவிட்டாராயினும் மாணிக்

கம் மட்டும் தனது பாட்டியார் வீட்டிலிருந்து வந்தான். இப்பொழுது அவனை செல்லமங்கலத்துக்கு அழைத்துச் சென்று விட்டனர். இதுமுதல் மாணிக்கமும் சொர்னவல்லியும் சந்திக்க சமயம் வாய்க்கவில்லை. மாணிக்கம் செல்லமங்கலத்தில் நீண்ட நாள் தங்கி யிருந்தான். பின்னர் ஊருக்கு வந்து பன்னிரண்டு வயதுவரை நமது மகா கவிப் புலவரிடம் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகக் கற்று வந்தான். அவரிடம் படித்த மாணவரில் இவனே புத்திசாலியாக விருந்தபடியால் நமது புலவர் நன்றாகப் போதித்து வந்தார். இவனுடைய துரதிர்ஷ்டமானது முற்றுங் கற்கவிடவில்லை. குடும்பத்தின் நிலை சரியாக வில்லாதபடியால் ரங்கூன் பக்கத்திற்குச் சென்று ஒரு கணக்கு அடுத்தாள் வேலை பார்த்து வருதல் நல மென்று பலர் சொன்னார்கள். இதனை நல்ல யோசனை யென்று வையாபுரி செட்டியார் கருதினபடியால் நமது மாணிக்கத்தைக் கப்பலேற்றி யனுப்பத் தீர்மானித்து விட்டார். மாணிக்கம் ஊரிலிருந்த மூன்று வருஷத்திலும் சொர்னவல்லியை அதிகமாகச் சந்திக்க முடியவில்லை. அப்பெண்ணுக்கு வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கவே பொழுது பூராவும் சரியாக விருந்தது. அதனால் வெளியே வர நேர மிருப்பதில்லை. ஏகதேசத்தில் வெளியே வந்தாலும் இவர்களிருவரும் சந்திக்க வாய்ப்பதில்லை. வாய்த்தாலும் பெரிய பிள்ளைகளாகி விட்டபடியால் நாணம் குறுக்கே நின்று தடுத்தது. ஆகவே சந்தித்தாலும் கலந்து பேச முடியவில்லை.

தங்கட்கு மன நிறைய விருக்கும் காதற் பெருக்கைப் புன்னகையாலும் கண்பார்வையாலும் சிறிது வெளிப் படுத்துவார்கள்; அவ்வளவோடு பிரிந்துவிடுவார்கள். பின்னர் இதுவும் மறைந்தது. மாணிக்கம் பர்மாவுக் குப் போய்விட்டான். சில மாதங்கள் சென்றன. சொர்னவல்லியின் தகப்பஞன உழக்குருட்டி நாராய ணன் செட்டியார் என்பவர் தமது பழய கூரை வீட் டின் திண்ணையில் உட்கார்ந் திருந்தார். இரவு ஏழு மணியிருக்கும். அவருடைய சிநேகிதரான இரண்டு பேர் அவருக்கருகி லிருந்தார்கள். அவர்களைப் பார் த்து, "என்ன சேதி! ரங்கன் பெண்டாட்டி செத் துப் போனளாமே? அவனைக் கலிழ்த்தால் நமது காரி யம் முடிந்து விடும். பின்ஞலேயும் சாதகந்தான். வேறே ஒரு பயலும் அகப்பட மாட்டார்கள் போலி ருக்கிறதே. எல்லாப் பயலும் ஐந்துக்கு மேலே தர ஒத்துக் கொள்ள வில்லே.

ஒருவர்:—ரங்கனுக்கு உன் மகள் வாழ்க்கைப் படுவா ளா? இது மெத்தப்படித்த மூஞ்சூறு அல்லவா? அவளைக் கேட்டீர்களா?

மற்றெருவன்:—இந்தக் கழுதையைக் கேளு! பெற் றவன் தாலியைக் கட்டி விரட்டினுல் அங்கே போ ய்க்கிடக்கிறது! இதற்கென்ன சாமி யழைத்துக் கேட்கிருய்?

உழக்குருட்டி:—அதுசரிதான். இவன் மடங்குவாஞ? இவன் ஒத்துக் கொண்டாலும் ராமன் நமது வழி க்கு வருவாஞ? கலியாணஞ் செய்தால் தனக்கு

இடைஞ்சல் என்று நினைக்கிறானும். இல்லா விட்டால் அவனுக்கும் ஏதாவது தொலைக்கலாம்.

ஒருவர்:—என்ன கேட்கலாம்? அவர்கள் கண்டவிடமெல்லாம் பேசி ஒன்றும் நெருங்க வில்லை. இப்பொழுது அந்தக் கை அசதி. நெருங்கிப் பார்த்துத் தட்டி விட்டால் நல்லதுதான்.

மற்றொருவர்:—பெண்ணுக்கு வயது வரவில்லை யென்றால் என்ன செய்கிறது? பெரிய பெண்ணாக வல்லவோ பார்த்தார்கள்?

உழக்குருட்டி:—அதை விடு! அங்கே பெண் வந்து விழுகிறதாக்கும்! இன்னும் ஆறு மாதத்திற்குள் நமமள் சொர்னவல்லி பெரியவளாகி விடுவாள். அதுவரைக்கும் மனக்குடி முத்தம்மாள் இருக்கவே இருக்கிறாள்!

மூவருமாக யாரைக் கொண்டு பேசலா மென்று யோசித்தார்கள். வேறொருவரும் வருவார்க ளென்று தோன்ற வில்லை. மறு நாள் மாலையில் இரண்டு தரகருமாகச் செல்ல வேண்டுமென்று தீர்மானித்தார்கள். மறு நாள் காலை பத்து மணி யிருக்கும். நமது ரங்கநாதன் செட்டியாருடைய சிறிய தாயார் உழக்குருட்டி நாராயணன் செட்டியார் வீட்டுக்கு வந்தாள். வந்தவளுக்கு நாராயணன் செட்டியாரும் அவர் மனைவியும் விசேஷ உபசாரம் செய்தார்கள். புதிதாக உண்டாகப் போகிற உறவே யன்றி முற் காலத்திலும் ஏதோ சிறிது சொந்தமு மிருந்தது. அந்தக் கதைக்கெல்லாம் பெருக்கி அளவளாவிக் கொண்டிருந்தார்

கள். ரங்கனுதன் செட்டியாருடைய பெருமைகளை யும் செல்வ வளப்பங்களையும் பற்றி விரித்து விரித்துப் பேசினுள். இந்தக் கதைகள் நமது சொர்னவல்லி க்குக் கொஞ்சங் கூடப் பிடிக்க வில்லை. இதனை யறிந்த நாராயணன் செட்டியார் ஏதோ கண்ஜாடை செய்தார். அவர் மனைவி பெண்ணை யழைத்து மோர்வாங்கிக் கொண்டு வா வென்று வெளியே துரத்தி விட்டாள். பின்னர் தாராளமாகக் கலந்து பேசினுர்கள்.

பெண்ணுக்காக ஆறு வராகன் கொடுக்க வேண்டுமென்றும் வயிர நகை பூராவும் ஒரு ஜோடிப்பு செய்ய வேண்டு மென்றும், கலியாணச் செலவுக்காக ரூபா ஐயாயிரம் கொடுக்க வேண்டு மென்றும் கேட்டார் நாராயணன் செட்டியார். வந்த ஆச்சி "முதல் தாரத்திற்கு வராகன் கணக்கான வரும்படியோடு செய்தார்கள். இப்பொழுது பணம் போய் விட்டதா? அப்போ திருந்ததைவிட இப்போது பணமும் காசும் பெருகி விட்டது. மாப்பிள்ளைக்கு என்ன குறைவு? தாடியா நரைத்துப் போய்விட்டது? நாங்கள் கொடுத்துக் கொள்ளவா வந்திருக்கிறோம்? என்னவோ ஏதாவது கொஞ்சம் உதவிவேண்டுமானுல் செய்பலாம். நகை வேண்டுமானுல் செய்யச் சொல்லலாம். கலியாணச் செலவுக்கு ஏதாவது கொடுக்கலாம். வராகன் கணக்காகக் கொடுத்துக் கொள்ள நாங்களென்ன தரம்பத்தாதவர்களா? மறுதாரமாகச்சே கொஞ்சம் முன்னே பின்னே முடிக்கலாமென்று நினைக்கிறோம். தாறுமாறுகக் கேட்டால் முடியுமா? முதல்தாரத்துக்குப் பிள்ளையா, குட்டியா, ஒன்றுங் கிடையாது. மா

மியாருமில்லை, மாமனாருமில்லை. கலியாணஞ் செய்த வன்றைக்கே தானும் தானுமாக இருக்கலாம். எந்த மகள் ஆளப் பிறந்திருக்கிறாளோ? நான் போய் விட்டுவருகிறேன். நன்றாக யோசித்திருப்பதில் சொல் லுங்கள்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

முதல் நாள் பேசிக் கொண்டிருந்த தரகர்கள் இருவரும் ரங்கநாதன்செட்டியார் வீட்டுப் பக்கமாகப் போகும்போது ரங்கநாதன்செட்டியாரும்ராமனுமாக வீட்டின் முகப்பிலிருந்து பேசிக் கொண்டிருந்தார் கள். இந்தப் பேர்வழிகள் இருவரும் இரண்டு கா லாடிகளாதலால் அவர்கட்கும் இவர்களைத் தெரியும். வந்த இருவரையும் ராமன் வரவேற்றான்; உட்கார்ந் தார்கள். சிறிது நேரம் ஊர்க் கதைகளைப் பேசிக்கொ ண்டிருந்து விட்டு,

வந்தவரில் ஒருவர்:—என்ன ராம! கல்யாணப் பேச்சு எப்படி! முடிவாகி விட்டதாமே?

ராமன்:—யார் சொன்னது? இன்னும் ஒன்றும் முடி வாக வில்லையே? இரண்டொன்று வந்தது; ஆனால் முடியவில்லை.

மற்றொருவர்:—காரண மென்ன? முதல் தாரத்தின் சங்கதியை யெண்ணுகிறார்கள்போ லிருக்கிறது! மாப்பிள்ளை இளக்கமா? இந்த அருமை யெல்லாம் யார் கவனிக்கிறார்கள்! எல்லாரும் பணத்திலே தான் நிற்கிறார்கள்.

முதலாமவர்:—பண மென்றால் பிணமும் வாயைத்திற க்குமல்லவா? நீட்டினால் ஆகாதகாரிய மெல்லாம்

ஆகிவிடும். அது கிடக்கட்டும். நமது நாராயணன் செட்டியார் வீட்டில் ஒரு பெண் ணிருக்கிறதே? அதைக் கேட்க வில்லையோ?

ராமன்:—இன்றைக்குத்தான் அதை விசாரித்தோம், அதற்கு நாற்பதினாயிரத்துக்கு மேல் கேட்கிறார் களாம்.

முதலாமவர்:—(மனதிற்குள் கலங்கிப் போனார்) நிசந் தானா? அதை யெப்படி நீங்கள் கேட்டீர்கள்?

ராமன்:—பணங் கொடுத்து வாங்குகிறபோது ரகசிய மென்ன? ஆளைவிட்டுக் கேட்டோம். தெளியவி ல்லை; அவ்வளவுதான்!

மற்றொருவர்:—அதைத்தவிர வேறு பெண் அகப்படா து. கொஞ்சம் முன்னே பின்னே பேசி முடிக்கப் பாருங்கள்! நல்ல பெண்.

ராமன்:—சின்னப் பெண் ணென்கிறார்களே? இவ்வ ளவு பணங் கொடுத்துக் கொள்ளும் போது சின் னப் பெண்ணைக் கொள்ள நமது பிரபுவுக்கு இஷ் டமில்லை. அதுவும் யோசிக்க வேண்டியிருக்கிறது.

முதலாமவர்:—அதற்காக என்ன? வயது பன்னிரண் டாகி விட்டது. பாதகமில்லை.

மற்றொருவர்:—அந்தப் பெண்ணுக் கென்ன குறை? ஆறுமாதந்தவணை மதராஸ் உண்டியல்! இன்றைக்கு ரொக்கமில்லை. ஆறு மாதத்தில் ரொக்கமாகிறது! இதற்குள்ளாக என்ன அவசரம்? முடியுங்கள்!

ராமன்:—பேசி முடிக்கலாமா? உங்களுக்கு அவர் நெருக்கந்தானே? இவ்வளவு தொகை கொடுக்க

முடியாது. ஏதாவது லேசாக வந்தால் பார்க்கலாம்.

முதலாமவர்:—பார்க்கலாம். ஆனால் அந்த மனுஷன் சுத்த வறளி! அவன் பெண்டாட்டியோ பேராசை பிடித்தவள். அந்தப் பெண்ணோ ஊரை யெல்லாம் ஒட்டை சொல்லும். அங்கு போய்ப் பேசுவதே கஷ்டம். பணத்தை நீட்டினால் செட்டியாரைச் சரிக்கட்டி விடலாம்.

இதற்குப் பிறகு ராமனும் இவர்களுமாகத் தனித்துச் சில நிமிஷங்கள் பேசி விட்டுப் பிரிந்தார்கள். தாகர் இருவரும் உழக்குருட்டி நாராயணன் செட்டியார் வீட்டுக்கு வந்தனர். அப்போது இரவு மணி பத்திருக்கும். வந்து செட்டியாருடன் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போய் விட்டார்கள். நாராயணன் செட்டியார் பெண்டாட்டியை எழுப்பி, "என்ன சேதி! கல்யாணப் பேச்சு நெருங்கி வருகிறது. முடித்து விடலாமா?

மனைவி:—செய்ய வேண்டியது தான். வீடு கூரை வீடாக விருக்கிறது. ஓட்டு வீடாக எப்பொழுது கட்டுகிறது? பிள்ளைக்கு நகையில்லாமல் முடியுமா? பயனுக்குக் கலியாணம் செய்ய வேண்டுமே! எல்லாவற்றுக்கும் பார்த்துக் கொள்ளுங்கள்.

செட்டியார்:—ஆமா. கடன் வேறே யிருக்கிறது. அகப்பட்ட வரையில் பார்த்துக்கொள்ளுவோம். இதை விட்டால் இவ்வளவு தொகை வேறு ஒருவரும் தர மாட்டார்கள்.

மனைவி:—பொல்லாதவன், அடித்துக் கொல்லுவான் என்றும் சுத்தப் போக்கிலி யென்றும் சொர்ன வல்லி சொல்லுகிருள். சம்மதிக்க மாட்டாள்போ லிருக்கிறது.

செட்டியார்:—சரி சரி; அதையேன் நீ கேட்டாய். அவ ளுக்கும் கல்யாணப் பேச்சுக்கும் என்ன சம்பந் தம். ஏதாவது பேசினல் கொன்று விடுவேனென் றுசொல். பெற்று வளர்த்தவர்கள் உயிரோடிருக்கி றபோது நம்முடைய இஷ்டப்படி குடும்பக் காரி யத்தைப் பார்த்துக் கலியாணம் செய்கிறதா? சேதி யொன்றும் நன்ருயில்லையே?

காலையில் நாராயணன் செட்டியார் எழுந்து கஞ் சியைக் குடித்து விட்டுக் கற்ருழஞ்சோலைப் பனந் தோப்புக்கு உத்தியோகம் பார்க்கப் போய்விட்டார். இரவு நடைபெற்ற யாவற்றையும் கேட்டுக் கொண் டிருந்த சொர்னவல்லி தன் கதி அபாயத்திற்கு வந் திருக்கிற தென் றெண்ணி வருத்தப்பட்டுக் கொண் டிருந்தாள். காலையிலெழுந்து ஒரு வேலையும் பார்க்க வில்லை. அவள் தாயார் பலமுறை கூப்பிட்டாள். ஒரு பதிலும் சொல்லாமல் கண்ணீரை தாரை தாரையாக வடித்துக் கொண்டு எழுந்து உள்ளூரி லிருக்கிற பெரியதாயார் வீட்டுக்குச் சென்று விட்டாள். இப் பெண் இவ்வளவு வருத்தப்பட வேண்டியதற்குக் காரணம் நமது வாசகர்கட்குத் தெரியும். சொர்ன வல்லியின் மனம் முற்றும் மாணிக்கத்தைப் பற்றிக் கிடக்கிறது. பால்ய பருவத்தில்—காதல் நோக்க மெழுங் காலத்தில—யாரைப் பற்றியதோ அவரை

மறக்க ஒரு நாளும் முடியாது. இந்தத் தத்துவத்தைத் தற்கால மக்கள் நன்கு உணர்வதே கிடையாது. வீட்டிலுள்ள சௌகர்யங்களை யெண்ணியே கல்யாணங்கள் பேசப் பட்டுவருகின்றன. மணமக்களுடைய மனப்போக்கும் காதற் கருத்துகளும் புறக்கணிக்கப் படுகின்றன. இதனால்தான் வியபிசாரம் மலிகின்றது. துன்பம் வளர்கின்றது. இவற்றோடன்றி வாழ்க்கை பல வழிகளில் பாழ்பட்டுப் போவதால் திருத்தங்கள் இன்றியமையாதன வாகுமென்ற இயக்கங்கள் தினந்தோறுந் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பெண்ணின் பெரிய தாயாரான சிட்டாளச்சி மிக நல்லவள். கணவனை இழந்தவள். மிகுந்த தெய்வ பக்தியும் இரக்கமுமுடையவள். ஹிந்துபாலிகா பாடசாலை அம்மாளிடம் அத்தியந்த நட்புரிமை கொண்டவள். சிறிது படிப்பு முண்டு. கேள்வியால் சைவ புராணங்கள் முழுமையும் அறிந்திருந்தாள். இவளிடத்தில் இப்பெண் போய் விழுந்து "என்னை நீ தான் காப்பாற்ற வேண்டும்" என்று அழுது கதறியது.

பெரிய தாயார்:—(கண்ணீரை வடித்துக் கொண்டு) நான் என்ன செய்யமுடியும்? உன் தகப்பன் பொல்லாத முரடன். நான் ஏதாவது சொன்னால் என்னை வைவான். முன் உன்னைப் பள்ளிக்கூடத்துக் கனுப்ப வேண்டுமென்று சொன்னதற்கு அவன் படுத்திய பாடு கொஞ்சமா? ஐயோ! மாணிக்கம் எப்

படிப்பிள்ளை! கூழை ரங்கனுக்கா உன்னைச் செய்வது? ஆ! கடவுளே! இந்த அனாதைப் பிள்ளையிடத்தில் உனக்கு இரக்க மில்லையா?

சொர்னவல்லி:—இவனுக்கு நானெப்படி வாழ்க்கைப்படுவேன்? இந்தத் திட்டுப்பட்டவனை நான் தொடமாட்டேன். ஓடிப்போய் கிணற்றிலே விழுந்து செத்துப்போகிறதென்று தீர்மானித்துவிட்டேன்.

இச்சொற்களைக் கேட்டவுடன் சிட்டாளாச்சிக்குண்டான வருத்தம் சொல்ல முடியாது. "பெண்ணே! கிணற்றில் விழக்கூடாது. நாமாக உயிரைமாய்த்துக் கொள்வது பெரும் பாவம்! நீ போய் உன் தாயாரிடம் சொல்லிப் பார்! என்ன சொன்னாலும் அவன் கேட்கமாட்டான்! பாவி! இப்போது இந்த ஆபத்தை விட்டு நீ தப்ப முடியாது. ஒன்று சாகவேண்டும்; இல்லாவிட்டால் தாலியைக் கட்டி விடுவார்கள். சாவது சரியில்லையென்று தோன்றுகிறது" என்று சொன்னாள். சொர்னவல்லி என்ன செய்வாள்? சாகலாம் என்ற ஒரு வழியைத் தான் அவள் துணையாகக் கொண்டிருந்தாள். அதுவும் போய் விட்டது. ஒன்றுந் தோன்றவில்லை. அங்கேயே ஒரு மூலையில் கடவுளை நினைத்துக் கொண்டு படுத்திருந்தாள். அவளுடைய தாயார், வீட்டில் பார்த்தாள். சொர்னவல்லியைக் காணவில்லை. உடனே சிட்டாள் ஆச்சி வீட்டிற்கு வந்தாள். தன் தமக்கையாருடன் சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்தாள். பெண் சம்மதிக்க வில்லையென்ற விஷயத்தில் அவளும் நிரம்ப வருத்தப்பட்

டதோடு தன் புருஷனுக்கும் சொல்லிப் பார்க்கிறே னென்று சொன்னாள். பிள்ளையை யெழுப்பி வேண்டியவரை சமாதானம் சொல்லித் தடுப்பதாகக் கூறி யழைத்துக் கொண்டு போய் வீடு சேர்ந்தாள். செட்டியாரும் சாப்பாட்டுக்கு வந்தார்.

உழக்குருட்டி:--கலியாணத்துக்கு நாள் பார்த்தாகிவிட்டது! காலையில் எல்லாம் பேசி முடித்தாய் விட்டது. தைமீ˚ அவ வெள்ளிக்கிழமை முகூர்த்தம். இன்னும் சரியாக இருபது நாட்கள் தான் இருக்கின்றன. இன்று காலையில் எல்லாம் பேசி முடிந்தது.

மனைவி:--சொர்ணவல்லி அழுகிறாள். அவளுக்குக் கொஞ்சங்கூட பிடிக்க வில்லை. கலியாணத்தைச் செய்து விட்டால் யார் அங்கே போயிருக்கிறது? அவள் அங்கே யிருக்கமாட்டாளாம்.

உழக்குருட்டி:—கலியாணம் நாள் வைத்தபடி நடக்க வேண்டியது தான். அவள் அங்கே இருக்க இஷ்டப்படாவிட்டால் இங்கே வந்து விடட்டும். இல்லாவிட்டால் எனக்குப் பணத்தை வாங்கி வந்து தந்து விட்டு யாரையாவது கட்டிக் கொள்ளட்டும்! வேறு பேச்சுக் கிடையாது.

இனி பேதாவது பேசினால் அடித்து கொறுக்கிவிடுவே னென்ற குறிப்புத் தோன்ற விழியை உருட்டி விழித்துக் கொண்டு உறுமினான். அவன் கொலை செய்யவும் பின்வாங்க மாட்டானென்பது அந்த ஊரிலுள்ள எல்லாருக்குந் தெரியும். இந்த அனுதைப் பெண் என்ன செய்வாள்? இரவு பகலாக அவர்களு

டைய குலதெய்வமான குன்றக்குடிக் குமரனை யெண்ணி யெண்ணி யிரங்கினாள். அவனையே இரவு பகலாக நினைந்து அழுதுகொண் டிருந்தாள். வேறு என்ன செய்ய முடியும்? பல புலிகளும் கரடி சிங்கங்களும் வன வேடர்களும் நிறைந்த இடத்தி லகப்பட்டமான்கன்றின் நிலையை யடைந்த அப்பெண் எப்படித் தப்பி யோடுவதென்பதை யறியமுடியவில்லை. சுற்றியுள்ள சுற்றத்தா ரென்போர் யாவரும் அப்பெண்ணைப் பொசுக்கி யுண்ணவே முன்னின்றனர். ஒன்றாகி இரண்டாகி மூன்றாகி நாட்கள் கடந்து கொண்டிருந்தன. கலியாண நாள் நெருங்கி விட்டது. இதற்குள் சொர்னவல்லியின் உடல் வாடி வதங்கி எலும்புந் தோலுமாகி விட்டது. குன்றக்குடிக் குமரனையும் மாணிக்கத்தையும் எண்ணிக் கடுந்தவ மிருக்கிறாள். உணவிலாவது உடையிலாவது அணியிலாவது அலங்காரத்திலாவது அவள் மனஞ் செல்லவில்லை. என்ன செய்வாள்? தாயைப் பிரிந்த சேயைப் போல் வருந்திப் பரிதபித்தாள். பலரும் அவளைப் பார்த்து வருத்தப் பட்டார்கள். ஆனால் நிவிர்த்தி செய்ய வழி தெரியவில்லை. அவ்வளவுதான்!

பிரபு ரங்கநாதன் செட்டியாரும் ராமனுமாகக் கலந்து யோசித்தனர். இவ்விருவரும் நேசங் கொண்ட நாள் தொட்டு இம்மாதிரி கவலையோடு கலந்து பேசியதில்லை. இதுவரை பணத்திற்கு விட்ட உண்டியல் சென்றது. இப்பொழுது பணத்தட்டு உண்டாகிவிட்டது. தேடா தழிக்கிற் பாடாய் முடியு மன்றோ? இங்கு ஒன்றும் நடக்கவில்லை. மறுதாரம் செய்

வதில் ராமனுக்கு விருப்பமில்லை யென்றாலும் செட்டியார் மனம் திரும்பிவிட்டது. மறுக்க முடியாதபடியால் ராமன் புறப்பட்டு மதுரை சென்றான். அங்குள்ள வக்கில் சுந்தரமய்யர் மாறலாக ஒரு ஜமீன்தாரிடத்தில் ரூபா நாற்பதாயிரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கொண்டு வந்து சேர்த்தான் கிஷ்கிந்தாபுரி.

ரங்கனுதன் செட்டியார்:—ராமு! நீ யில்லா விட்டால் ஒன்றும் நடவாதடா! கலியாணப் பெண் வற்றி வரண்டு போய்விட்டதாமே? இவ்வளவு பணத்தையும் கொட்டிக் கொடுத்துத் தவணை உண்டியல் வாங்கப் போகிறோம். அதிலும் இடக்கு செய்தாலென்னடா செய்கிறது? சனியன்.

ராமன்:—இடக்கா? எங்கே செய்கிறது? அவளப்பனுக்குரூபா முப்பதினாயிரம் அவிழ்க்கிறபோது எங்கே! நடக்குமா?

செட்டியார்:—முந்தித்தான் சண்டை யடித்துக் கொண்டு கஷ்டப்பட்டோம். இனியுமா அவதிப்படுகிறது என்று கவலையா யிருக்கிறது. நன்றாக யோசித்துப்பார்த்துக்கொள்! பணத்தைக் கொடுத்து விட்டு விழிக்கப்படாது.

ராமன்:—பணத்தைக் கொடுத்து விட்டால் பெண் நமக்குச் சொந்தம். முந்தின பெண் அப்படியில்லை. பெருவாரியாக பணங்கொண்டு வந்திருந்தது. ராமனுதன் செட்டியார் ஏராளமாகப் பணம் வைத்திருந்தார். இப்போது இந்தப் பெண்ணை உதைத்தால் உழக்குருட்டி சோறுகூடப் போட மாட்டான்.

இதற்கு வேறே போக்கிடமுங் கிடையாது. சங்கதி தெரியுமா?

இவ்வளவோடு பஞ்சாங்கம் சுப்பண்ணாவுக்கு ஆளனுப்பினார்கள். அவரும் இடது கையைத் தூக்கிக் கொண்டே வந்து சேர்ந்தார். உள்ளே நுழைந்தவுடன் "ஆசிர்வாதம், ஆசிர்வாதம்" என்று கூறினார். ரங்கநாதரும் கும்பிட்டார். "கல்யாணப் பேச்சு முடிந்ததாமே" என்றார் ஐயர். "ஆமாம், நாட்பார்த்து எழுதித் தரவேண்டும்" என்றார் செட்டியார். உடனே உழக்குருட்டி நாராயணன் செட்டியாருக்கு ஒரு ஆள்விட்டுக் கூட்டிவந்தனர். ஐயர் ஓலையை வாரி அதில் தை மீ அவ தான் சிறந்த நாளாகுமென்று வழக்கம்போல் எழுதி மஞ்சள் தடவிக்கொடுத்தார். கொடுத்து விட்டு "ஜாதகம் பேஷாக இருக்கிறது. தாலிப் பொருத்தம், பிள்ளைப் பொருத்தம் முதலிய பொருத்தங்கள் வெகு திறமாக இருக்கின்றன. சத்சந்தானமுண்டாக ஈஸ்வரன் கிருபை பாலிக்கணும்" என்று சொல்லிக் கொண்டே சுப்பண்ணா புறப்பட்டு விட்டார். பின்னர் மகாகவிப் புலவர் வரவழைக்கப் பட்டார். கல்யாணப் பத்திரிகையெழுதி அச்சிடப்பட்டது. அதில் காணப்பட்ட விஷயங்கள் வருமாறு:—

ரௌத்திரி ஞு தைமீ கூவ சுக்கிரவாரமும் அசுவதி நக்ஷத்திரமும் ஸப்தமி திதியும் கும்ப லக்னமும் அமிர்த யோகமும் சாத்திக வேளையும் நிஷ்பஞ்சகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை நாலேகாலுக்குமேல் எட்டு நாழிகைக்குள், செல்வராஜபுரம் ஸ்ரீமாந்

சோணாசலச் செட்டியாரவர்களின் அருமைப் புத்திரரும், செல்வராஜபுர சுத்த நீர்த்தடாக உரிமையாளரும், ஹிந்து பாலிகா பாடசாலை அதிபரும், தமிழ்வளர்ப்புக் கழகத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியும், ஆனந்தவல்லி இலவச வாசகசாலையின் காப்பாளரும், குழந்தை வடிவேலன் செந்தமிழ்க் கலாசாலை ஸ்தாபகரும், சன்யாச தர்ம ஸ்தாபன மடத்தின் அத்யக்ஷகரும், ஈச்சம்பட்டித்தாலுகா சபையின் அங்கத்தினரும், திருவியலூர் தேவஸ்தானக் கமிட்டி மெம்பருமான ராஜாதிராஜ ராஜபூஜித ராஜஸ்ரீ பரமைஸ்வரிய பரமௌதாரிய சர்வ கலாசார சிரவணோத்தாரண ஸ்ரீவல்லிதேவசேனா சமேத சிவ சுப்ரஹ்மண்ய பாத பூஜித ஆசார்ய சந்நிதான பாத உத்தூளன செல்வராஜபுர வாச கெம்பீர ஸ்ரீ ரங்கநாதன் செட்டியாரவர்கட்கும் ஷையூர் ஸ்ரீமாந் நாராயணன் செட்டியாரவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி சொர்னவல்லிக்கும் விவாகம் நடைபெறுவதால் அன்பர்களோடு முன்னதாகவே தாங்களும் வந்திருந்து சிறப்பிக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

என்றெழுதப் பட்டிருந்தது. அப்படியே குறித்தபடி ஐந்து ஆறுந் தேதிகளில் வழக்கப்படி சடங்குகள் யாவும் தொடங்கி நடத்தப்பட்டன. பெண்ணரசியின் கண்கள் நீரைக் கொட்டிக்கொண்டேயிருந்தன. இரவு பகலாக அவளுடைய மனதில் இரண்டு தெய்வங்கள்தாம் குடிகொண்டிருந்தன. ஒன்று குழந்தை முருகேசன்; மற்றொன்று அருமை மாணிக்க வாசகன். மற்ற காரியங்களென்ன நடக்கின்றனவென்பதை அவள் மனம் பற்றவேயில்லை. ஊரினுள் கிடக்கிறசுற்றத்தாரென்ற இரக்கமற்றமக்கள் அவளுடையகைகளையும் கால்களையும்பற்றி ஒவ்வொரு சடங்கையும் முடித்தார்கள். ஒரு கிழவன் வந்து தாலியைக் கட்டினான். பஞ்சாங்கப்பிராமணன் வந்திருந்து நெய்

யைவிட்டு ஓமத்தை வளர்த்தான். மற்றும் பல பிராமணர் சூழவிருந்து நிகண்டை ஒப்பித்தனர். சுற்றத்தாரெல்லாரும் வந்து சோற்றை யுண்டு விட்டுப் புறப்பட்டார்கள். மேளகாரனும் ஊதிவிட்டுப் போனான். ஊரிலுள்ள பலரும் ஆலத்தியெடுத்துப் பாக்குவாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். உழக்குருட்டியும் நிறையப் பணம் வாங்கி மூட்டைகட்டிக்கொண்டு கற்றூழுஞ் சோலையை நோக்கினான். கல்யாணத்திற் சம்பந்தப்பட்ட அத்தனை பெயரும் இன்பத்தை யனுபவித்தனர். ஆனால் கல்யாண மாப்பிள்ளை கடன்காரனாயினான். பெண் கண்ணீர் வடித்துக் கொண்டு இருந்தது. என்ன கல்யாணம்! எவ்வளவு ஒழுங்கு! கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பதைப் போலவும், மானை வளர்த்துப் புலியினிடம் ஒப்புவிப்பதைப் போலவும், அழகான பூமாலையைக் குரங்கு கையில் கொடுப்பது போலவும் நமது சொர்னவல்லியை ரங்கனுக்குப் பெண்டாக்க மூடர்கள் இணங்கினார்கள். கல்யாணத்திற்கு வந்திருந்த யாவரும் நல்ல வரும்படியோடு வீடு சேர்ந்தனர்.

அத்தியாயம் கரு.

முடிவு.

ரங்கனாதன் செட்டியாருக்கு மறுதாரக் கல்யாணம் முடிந்ததைப் பற்றிப் பலர் பலவாறு பேசினர். ஆனால் இக்கல்யாணம் நியாய விரோதமானதென்று கருதினார்களே யன்றி நேர்மையானதென்று கருத

வில்லை. சொர்னவல்லியை கூழைரங்கனிடத்தில் யார் தாம் ஒப்புவிக்க இசைவார்? இனி யார் என்ன பேசியும் எண்ணியும் ஆகப்போவ தொன்று மில்லை. தாலி கட்டியாய் விட்டது. கல்யாணமாகி ஒருமாதஞ் சென்றது. இரண்டாவது மாதமுமாகி விட்டது. ரங்கனாதர் மெதுவாக மணக்குடியை நோக்கினார். தினந்தோறும் செல்ல வாரம்பித்தார். வர வர இரண்டு நாள், மூன்று நாள், பின்னர் பல நாள்கள் சேர்ந்தாற் போல் அங்கேயே இருக்க ஆரம்பித்து விட்டார். பழைய கருப்பனே கருப்பன் என்ற நிலையிலாகி விட்டது. இப்போது முன்னிருந்த மாதிரி ராமன் ஒன்றுஞ் செய்ய முடிய வில்லை. புதிய பெண்ணொன்று வீட்டிலிருக்கிறது. பணத்தட்டு அதிகமாகி விட்டது. அம்பலகாரரும் ஜெயிலிலிருக்கிறார். தாலி வீட்டிலிருந்து ராமனுக்குச் செட்டியார் 'பணமனுப்பு, பணமனுப்பு' என்று சீட்டு விட்டுக் கொண்டிருக்கிறார். என்ன செய்வான் ராமன்? பிடி கொம்பும் மிதி கொம்புமின்றிக் கஷ்டப்பட்டான். வரவரப் பணத்தட்டு அதிகப்பட்டு விட்டது. கடனும் பல விடங்களில் கண்டபடியாக வாங்கி யிருந்தபடியால் அவர்களொரு புறம் நெருக்க ஆரம்பித்தனர். பணமுடை யறியாத ரங்கனாதன் செட்டியார் பொருளின் தன்மையை உணர ஆரம்பித்தார். ராமனை என்ன நிலைமையி லிருக்கிறதென்று கேட்டார். ஒரு லட்சத்து முப்பதினாயிரம் ரூபா செல்விருக்கிறதென்று கூறினான். இந்தச் சொல்லைக் கேட்டவுடன் ரங்கனாதன் செட்டியாருடைய உயிர் பாதி போய் விட்டது. இதுவரை இவ்வளவு

கடனிருக்குமென்று கனவிலும் கருதவில்லை. கைக்கு முடையின்றிப் பணம் கிடைத்தபடியால் நிறைய இருக்கிறதென்றே கருதி யிருந்தார். திடீரென்று தாறுமாறான கடன் ஏறி யிருக்கிற தென்பதை யறியவே திகிலுண்டாகி விட்டது. சம்பாதிப்பவரா யிருந்தால் சமாளித்து விடலாமென்று தைரியப்பட முடியும். இவரென்ன செய்வார்? பாவம்! அன்று முதல் நாளுக்கு நாள் உடல் மெலிய வாரம்பித்து விட்டது. ஆயினும் தாலி முத்தம்மாளை விட்டபாடில்லை. வர வர கடன்காரர் தொல்லை அதிகமாகி விட்டது. சொர்ன வல்லி பெரும்பாலாகத் தன்பெரிய தாயார் வீட்டிலேயே இருந்து வந்தாள். பெரிய தாயார் தெய்வபக்தி யுண்டாகத் தக்க பல சரித்திரங்களை யெடுத்துச் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பதும் இந்து பாலிகா பாடசாலை உபாத்தியாரம்மாளிடத்தில் பல பெரியோர்களுடைய சரித்திரங்களையும் இறைவன் திருவிளையாடல்களையும் கேட்பதுமாகக் காலங்கழித்து வந்தாள் நமது சொர்னவல்லிப் பெண். இப்படி யிருக்கிற நிலையில் ரங்கனாதன் செட்டியாருக்கு அதிகமான காய்ச்சலாக விருக்கிற தென்று சொல்லப்பட்டது. மறுநாள் மிக அதிகமாகி விட்டது. உள்ளூர் வைத்தியர் கைகடுமையாக விருப்பதால் இரண்டொரு நாள் பார்த்துக் கொண்டு மருந்து கொடுப்போ மென்று சொன்னார். அன்றிரவு புலப்பம் பெரிதாகி விட்டது. சுகஜன்னி கண்டு விட்டதென்று தெரிந்தார்கள். கடுமையான மருந்து கொடுக்கப் பட்டது. என்ன கொடுத்துமென்ன? கடைசியாகச் சேரவேண்டிய இடத்திற்

குப் போய்ச் சேர்ந்தார் நமது ரங்கனுதன் செட்டியார். இரவு நான்கு மணி யிருக்கும். ஆவி பிரியும் சமயத்தில் கொஞ்சம் தெளிவு கொடுத்தது. அருகில் வையாபுரி செட்டியாரும் மகாகவிப் புலவரும்வாத்தியாரம்மாளும் இருந்தார்கள். வையாபுரி செட்டியாரின் கையைப் பிடித்து, "மூன்று பேரும் அந்தப் பெண்ணுக்கு உதவி செய்யுங்கள்" தர்மங்களை நன்ருக நடத்துங்கள்" என்று சொல்லிக் கொண்டே கண்களை மூடினூர். இம் மூவரும் மிகுந்த இரக்கமுடையவர்க ளல்லவா? என்ன செய்வார்கள்? ஐயோ! இந்த உலகத்தி லிருக்கும் போது எவ்வளவு கெட்ட காரியங்களைச் செய்தாலும் பொல்லாதவர்களாக விருந்தாலும் எல்லாவற்றையும் விட்டு எங்கு செலலப் போகிருே மென்பதுந் தெரியாமல் தன் வச மிழந்து ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து மெய்யும் பொய்யாகிப் போகின்றபோது பார்ப்பவருடைய மனமென்ன செய்யும்? அம்மூவரும் கண்ணீரைத் தாரை தாரையாக வடித்தனர். என்ன செல்வம்! பிரபு ரங்கனுதன் செட்டியார் என்ருல் எவ்வளவு மதிப்பாக இருந்தது! தானமென்ன? தர்ம மெவ்வளவு? அவர் செய்த தருமமிருக்கிறது. கட்டிய கட்டிட மிருக்கிறது. வாங்கி யுண்ட பலரிருக்கின்றனர்! அவர் இறந்து போய்விட்டார். இருக்கிறவரையில் வையாபுரிசெட்டியார் சொன்னதற்கு மறு பேச்சு சொன்ன தில்லை. இவரும் சமயம் பார்த்து உயர்ந்த காரியத்தை அவசியமா யிருந்தால் சொல்வார். அவர் உடனே அதனை யேற்றுக் கொள்வது வழக்